# பிரதேச சபைகளுக்கான நியமத்துணைவிதி

## அத்தியாயம் 7 – 9

**Provincial Gazete No and Date: 2070/11, 2018.05.09**

**Adoptation Gazete No and Date: 2127, 2019.06.07**

**வடமாகாண, மாகாண சபை**

*வடமாகாண பிரதேச சபைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நியமத் துணைவிதிகளை ஏற்றுக்கொள்ளல்*
*1952 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் நியமத் துணைவிதிகள் சட்டம்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் ( இடைநேர் விளைவான ஏற்பாடுகள் ) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உபபிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆவது உப பிரிவில் மாகாணசபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தான தத்துவங்களின் பிரகாரம் வடமாகாண உள்ளூராட்சிஅமைச்சரால் 2018.05.09 ஆந் திகதிய 2070/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை ( அதிவிசேஷமானது ) மூலம் பிரசுரிக்கப் பட்டுள்ள வடமாகாண பிரதேசசபைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நியமத்துணை விதிகள் அத்தியாயம் 7 முதல் 9 வரை வவுனியா மாவட்டத்துக்குள் அமையப் பெற்றுள்ள வவுனியா வடக்கு பிரதேசசபையின் அதிகாரப் பிரதேசத்துக்குள் 2019.02.01 ஆந் திகதியில் இருந்து அமுல்படுத்துவதென வவுனியா வடக்கு பிரதேசசபையின் 2019.01.17 ஆந் திகதிய VNPS/2019/GM/01/10/05 சபைக்கூட்டத் தீர்மானம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 123(2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகிறேன்.*

*ச. தணிகாசலம்*
*தவிசாளர்*

வவுனியா வடக்கு பிரதேச சபை
நெடுங்கேணி

*06-99*

**வடமாகாண மாகாணசபை**

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகளின் (நியமத் துணைவிதிகள்) சட்டம்

**பிரதேச சபைகளுக்கான நியமத் துணைவிதிகள் வரைவு**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உபபிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆவது உப பிரிவில் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தான தத்துவங்களின் பிரகாரம் வடமாகாணத்தின் முதலமைச்சரும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி,மோட்டார் வாகன வீதிப் போக்குவரத்து ஒழுங்மைப்பு மற்றும் போக்குவரத்து ஆகியவற்றின் அமைச்சருமாகிய க. வி. விக்னேஸ்வரன் ஆகிய என்னால் ஆக்கப்பட்ட பிரதேச சபைகளுக்கான நியமத் துணைவிதிகளின் வரைவு அத்தியாயம் 7 முதல் அத்தியாயம் 9 வரை இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

மேற்படி நியமத் துணைவிதிகளின் வரைவு (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவுக்கு ஏற்ப வடமாகாண மாகாணசபையின் தீர்மானம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த அங்கீகாரம் அரச வர்த்தமானியில் வெளியிடப்படும்போது மேலே சொல்லப்பட்ட (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 2 (2) (அ) பிரிவுக்கு அமைவாக வடமாகாணத்திலுள்ள பிரதேச சபைகள் இந்த நியமத் துணைவிதிகளை ஏற்றுக் கொள்வதற்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுவதுடன் மேலே சொல்லப்பட்ட (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 2 (2) (ஆ) பிரிவுக்கு ஏற்ப மேற்படி துணைவிதிகளின் வரைவில் உள்ளடக்கிய ஏற்பாடுகளை உள்ளடக்கி துணை விதிகளை ஆக்குவதற்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 122 ஆம் பிரிவு மூலமாக வடமாகாணத்திலுள்ள பிரதேச சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்,
முதலமைச்சர் மற்றும் நிதியும் திட்டமிடலும்,
சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி வீடமைப்பும் நிர்மாணமும்,
சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி,
வீதி அபிவிருத்தி, மோட்டார் வாகன வீதிப் போக்குவரத்து
ஒழுங்கமைப்பு மற்றும் போக்குவரத்து விடயங்களுக்குப்
பொறுப்பான அமைச்சர்,
வட மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
A - 9 வீதி கைதடி,
யாழ்ப்பாணம்,
2018,மே 01.

## பிரதேச சபை தொடர்பான துணைவிதிகளின் உள்ளடக்கம்

| *இல.* | *அத்தியாயம்* | *பகுதி* | *துணைவிதியின் பெயர்* |
|---|---|---|---|
| 1 | 7 | i | பிரதேச சபையின் எல்லைக்குள் நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்போரால் பொருட்கள், உணவு வகைகள், பான வகைகள், மரக்கறிகள், மற்றும் பழவகைகள் விற்பனை செய்தலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல், கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணை விதிகள் |
| 2 | | ii | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கோழி இறைச்சி விற்பனையை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள் |
| 3 | | iii | பிரதேச சபையின் எல்லைக்குள் பாற்பண்ணைகள், பால் விற்பனை நிலையங்கள் நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணை விதிகள். |
| 4 | | iv | பிரதேச சபையின் எல்லைக்குள் அந்தியகால சேவை நிலையங்கள் நடாத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள் |
| 5 | | v | பிரதேச சபையின் எல்லைக்குள் தொழிற்சாலைகளையும் கைத்தொழிற் சாலைகளையும் முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல்,மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணை விதிகள் |

| *இல.* | *அத்தியாயம்* | *பகுதி* | *துணைவிதியின் பெயர்* |
|---|---|---|---|
| 6 | 8 | i | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிகழக்கூடிய அனர்த்தங்களை முகாமை செய்தல், அனர்த்தத்திற்குட்பட்ட ஆட்களுக்கு நிவாரணம் அளித்தல், அனர்த்த ஆபத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் தொடர்பான நியமத்துணை விதிகள். |
| 7 | | ii | பிரதேச சபையின் எல்லைக்குள் பிரதேச சபைப் பாதைகளில் பாதசாரிகள் கடவைகளை உருவாக்குவதும்,பேணுவதும் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் |
| 8 | | iii | பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் உருவாகும் திண்மக் கழிவுப் பொருட்கள் தொடர்பான நியமத் துணை விதிகள் |
| 9 | 9 | i | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்துக்குள் நுளம்புகளும், நோய்க் கிருமிகளும் பெருகுவதை தடுத்தல், மற்றும் அவற்றினை அழித் தொழித்தல் மூலம் அதிகாரப் பிரதேசத்தின் சுற்றாடல் நிலைமைகளை மேம்படுத்துவதற்கும், தொற்று நோய்கள் பரவுவதை தடுப்பதற்குமான நியமத்துணை விதிகள். |
| 10 | | ii | பிரதேச சபையின் எல்லைக்குள் பொதுமக்களின் சுகாதாரம் பேணப்படுதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான நியமத் துணை விதிகள் |

## அத்தியாயம் 7

**பகுதி i – பிரதேச சபையின் எல்லைக்குள் நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்போரால் பொருட்கள், உணவுவகைகள், பானவகைகள், மரக்கறிகள், மற்றும் பழவகைகள் விற்பனை செய்தலை முறைப் படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல், கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்**

துணைவிதியின் பெயர்.

1. பிரதேச சபையின் எல்லைக்குள் நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்போரால் பொருட்கள், உணவு வகைகள், பான வகைகள், மரக்கறிகள், பழவகைகள் விற்பனை செய்தலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல், கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத்துணை விதிகள் என அழைக்கப்படலாம்.

நோக்கம்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைவாக பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுகாதாரத்தைப் பாதுகாத்தல், சுத்தமான உணவு வகைகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல், போக்குவரத்தில் இடையூறுகள் ஏற்படாமல் தடுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக இத்துணைவிதிகள் ஆக்கப்படுகின்றன.

துணைவிதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும், 126(x) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்ற வேண்டிய பணிகள். (4 -12 )

4. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டு இருந்தால் மட்டுமே சகல நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்கும் வியாபாரிகளுக்கு பிரதேச சபை தவிசாளர் அல்லது செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உரிமப்பத்திரம் வழங்கப்படும்.

(i) நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்கும் வியாபாரிகள் உரிமப்பத்திரம் கோரும் விண்ணப்பம் இத் துணைவிதிகளின் இறுதியில் காட்டப்பட்ட முதலாவது அட்டவணையில் உள்ள மாதிரியில் அமைதல் வேண்டும்.

(ii) நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்கும் வியாபாரிகள் உரிமம் ஒன்றினைக் கோரும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் விண்ணப்பகாரரின் மார்பு வரை காட்டும் 2 1/2" x 2 " அளவு புகைப்படத்தின் இரண்டு பிரதிகளுடன் சேர்த்தனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் மேல் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளர் தகுந்ததென கருதக் கூடியவாறான அத்தகைய விசாரணைகளை நடாத்தி விண்ணப்பதாரர் பொருத்தமற்றவராயின் விண்ணப்பத்தை நிராகரிக்கலாம். மேலும் விண்ணப்பதாரி தனது வதிவிடத்தை அவர் வதியும் கிராம அலுவலரிடமிருந்து பெற்ற சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(iii) நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்கும் வியாபாரிகள் உரிமம் ஒன்றினைக் கோரும் விண்ணப்பம் ஒன்று பிரதேச சபையின் தவிசாளரினால் அல்லது பிரதேச சபையின் செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அனுமதிக்கப்பட்டவிடத்து விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பப்பட்ட புகைப்படத்தின் பிரதி விண்ணப்பகாரருக்கு வழங்கப்படும் உரிமப்பத்திரத்தில் ஒட்டப்படல் வேண்டும். மற்றைய பிரதி பிரதேச சபை அலுவலகத்தில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

5. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டு இருந்தால் மட்டுமே நடைபாதை வியாபாரம் மற்றும் கொண்டு திரிந்து விற்கும் வியாபாரிகளுக்கு சமைத்த உணவு, பான வகைகள் விற்பனை செய்வதற்கு பிரதேசசபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உரிமப்பத்திரம் வழங்கப்படும்.

(i) விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள சமைத்த உணவு, பானவகைகளை இலையான், பூச்சி, தூசி அல்லது நீர் மூலம் மாசடையாதவாறு மூடிய கொள்கலன் அல்லது பெட்டியை பாவிப்பதற்கு தயார்ப்படுத்தி இருத்தல் வேண்டும்.

(ii) சமைத்த உணவை விற்பனை செய்யும்போது வாடிக்கையாளர் களுக்கு பரிமாறுவதற்காக துருப்பிடிக்காத உலோகத்தால் தயாரிக்கப்பட்ட இடுக்கி வைத்திருத்தல் வேண்டும்.

(iii) அதே வேளையில் வாடிக்கையாளர் உணவு உண்பதற்காக, பானங்களை குடிப்பதற்காக பரிமாறுவதாயின் அதற்காகவே ஒதுக்கப்பட்ட பாத்திரங்களை வைத்திருத்தல் வேண்டும்.

(iv) வாடிக்கையாளர் உணவு உண்ட பின்னர் உணவு மீதிகளை இடுவதற்கு வேறான பாத்திரம் ஒன்றும் பானங்களின் மீதிகளை இடுவதற்கு வேறான பாத்திரம் ஒன்றும் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பாத்திரங்கள் நன்றாக மூடி வைக்கக் கூடிய மூடிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

6. நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்கும் வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருக்கும் போது பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் வழங்கப்பட்ட உரிமப்பத்திரத்தையும் அடையாள அட்டையினையும் தெளிவாகக் காணக்கூடியதாக பொருத்தமான இடத்தில் காட்சிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

7. பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது பிரதேச சபைச் செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அனுமதிப்பத்திரத்தையும் அடையாள அட்டையையும் காட்டுமாறு கேட்கும்போது அந்த ஆவணங்களை உடனே சமர்ப்பிக்க வேண்டியது நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்போரின் கடமையாகும்.

8. உரிமப்பத்திரம் பெற்ற நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்போர் காலை 6.00 மணியிலிருந்து மாலை 7.00 மணி வரையான காலப்பகுதியினுள் தமது வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு உரிமை உண்டு. எவ்வாறாயினும், பிரதேச சபை தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அக்கால எல்லைக்குப் புறம்பாக இரவு நேரங்களில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு உரிமப்பத்திரம் வழங்கப்பட்டு அது பற்றி உரிமப்பத்திரத்தில் குறிப்பிட்டு இருந்தால் அவ்வாறு குறிப்பிட்ட காலப்பகுதியில் வியாபாரம் செய்வதற்கு உரிமப்பத்திரம் பெற்றவருக்கு உரிமை உண்டு.

9. (i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாகின்ற சகல கழிவுப்பொருட்களும் மீள் சுழற்சிக்கு உட்படுமாயின் அவற்றைப் பின்வரும் வகைகளுக்கு அமைவாக வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(i) உக்கக்கூடிய கழிவுப்பொருட்கள் ;

(ii) கண்ணாடிப் பொருட்கள் ;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சார்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சார்ந்த பொருட்களின் பகுதிகள் ;

(vi) உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்ற பிற மூலப் பொருட்களின் மீதிப் பகுதிகள் அல்லது உற்பத்திச் செயற் பாட்டின்போது கிடைக்கின்றதும் ஏனைய உற்பத்தி பொருட்களின் பகுதிகளும் ;

(vii) அபாயகரமான கழிவுகள்

இவ்வாறான ஒவ்வொரு வகையான கழிவுகளையும் மூடி வைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதான வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் இடுவது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ii) 9 ஆம் துணைவிதியின் (i) ஆம் உபபிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு வகைப்படுத்தி கொள்கலன்களின் அல்லது தாங்கிகளில் வைக்கப் பட்டுள்ள கழிவுகளை பிரதேச சபை அமுல்படுத்தியுள்ள கழிவுப்பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயின் பிரதேச சபை தவிசாளர் அல்லது பிரதேச சபை செயலாளர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரினால் பணிப்பு விடுவிக்கின்றவாறு இறுதி அகற்றலானது மேற்கொள்ளப்படல் வேண்டும்.

10. நடைபாதை விற்பனைக்கான மற்றும் கொண்டு திரிந்து விற்பதற்கான உரிமம் பெற்ற வியாபாரிகள் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் நிபந்தனைகளுடன் இணங்கி இருத்தல் வேண்டும்.

11. நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்கும் வியாபாரிகள் ஒவ்வொரு வருடத்திற்கும் உரிமப்பத்திரத்திற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது மருத்துவப் பரிசோதனைச் சான்றிதழையும் விண்ணப் பத்துடன் இணைத்தல் வேண்டும்.

12. சமைத்த உணவுப் பொருட்கள், பானவகைகளை விற்பனை செய்பவர்களுக்கு மோட்டார் வாகனங்களில் கொண்டு திரிந்து விற்பனை செய்வதற்கான அனுமதி வழங்கப்படலாம்.

நிறைவேற்றக் கூடாத பணிகள். (13 - 23)

13. பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்போருக்கு வழங்கப்பட்ட உரிமப்பத்திரமும் அடையாள அட்டையும் இல்லாத எந்தவொரு நபரும் பிரதேச சபை எல்லைக்குள் ஒரு வீதியில், தெருவில், பொது அரங்கில், பொதுப் பூங்காவில் அல்லது தள்ளுவண்டியில் அல்லது மோட்டார் வாகனம் நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்படுகின்ற ஏதாவதொரு வாகனத் தரிப்பிடத்தில் அல்லது பொதுப் பேருந்து நிலையத்தில் அல்லது மக்கள் கூடும் பொது இடத்தில் ஏதாவது பொருட்களையோ, உணவுகளையோ, பானங்களையோ, மரக்கறி வகைகளையோ அல்லது பழவகைகளையோ விற்பனை செய்தலோ, விற்பனைக்காக கொண்டு திரிதலோ ஆகாது.

14. நடைபாதை வியாபாரத்திற்கான மற்றும் கொண்டு திரிந்து விற்போருக்கான உரிமம் பெற்றவர் ஏதேனும் நாளில் காலை 6.00 மணிக்கும் மாலை 7.00 மணிக்கும் இடைப்பட்ட நேரங்கள் தவிர்ந்த வேறு நேரங்களில் ஏதேனும் பொருளை விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்கென வைத்திருத்தலோ ஆகாது.

15. உரிமம் வைத்திருப்பவர் அவரது பொருட்களை விளம்பரப்படுத்தும் நோக்கத்திற்காக ஏதேனும் குரல் பெருக்கியை அல்லது ஒலிபெருக்கியை அல்லது இதனையொத்த வேறு சாதனங்களை பயன்படுத்தல் ஆகாது.

16. உரிமம் பெற்றவர் அவரது உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பு தவிர்ந்த ஏதேனும் இடப்பரப்பில் அல்லது உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட பொருள் தவிர்ந்த ஏதேனும் பொருளை விற்பனை செய்தலோ விற்பனைக்கு வைத்திருத்தலோ விற்பனைக்காக கொண்டு திரிதலோ ஆகாது.

17. உரிமம் பெற்றவர் ஏதேனும் வீதியில் வாகனப் போக்குவரத்து அல்லது ஏதேனும் வீதியின் நடைபாதையைப் பயன்படுத்தும் பாதசாரிகளுக்கு தடை எதனையும் ஏற்படுத்தலாகாது. எவரேனும் பொலிஸ் அலுவலரினால், கிராம அலுவலரினால் அல்லது பிரதேசசபைத் தவிசாளரினால் அல்லது பிரதேசசபைச் செயலாளரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரினால் ஏதேனும் வீதியை அல்லது நடைபாதையை விட்டு வெளியேறும்படி கட்டளை இடப்படும்போது அவ்வாறு அவர் வெளியேற மறுத்தலாகாது.

18. பிரதேச சபையால் நடைபாதை வியாபாரத்திற்கு மற்றும் கொண்டு திரிந்து விற்பதற்கு தடை செய்யப்பட்ட பிரதேசத்தில் உரிமம்பெற்ற எவரும் தரித்து நின்று அல்லது கொண்டு திரிந்து விற்பனை செய்தலாகாது.

19. உரிமம் பெற்றவர் இத் துணை விதிகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை எவரேனும் ஆளுக்கு மாற்றிக் கொடுத்தலாகாது.

20. நடைபாதையில் மீன் விற்போர் மற்றும் கொண்டு திரிந்து மீன் விற்போர் உரிமம் தொடர்பாக வடக்கு மாகாணத்தின் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டு 21.02.2017 ஆந் திகதியன்று வடக்கு மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்டு வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் 2011/25 ஆம் இலக்க 2017.03.24 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில் (அதி விசேடமானது) வெளியிடப்பட்ட மீன் விற்போருக்கான நியமத் துணைவிதிகள் அத்தியாயம் 6 பகுதி vi பிரிவு 20, 21 ஆம் துணை விதிகளுக்கு அமைவாக உரிமப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் மீன் விற்பனை செய்தலோ, விற்பனைக்காக வைத்திருத்தலோ ஆகாது.

21. சமைத்த உணவுப் பொருட்கள், பானவகை தவிர்ந்த உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்பவர்களுக்கு மோட்டார் வாகனங்களில் கொண்டு திரிந்து விற்பனை செய்வதற்கான அனுமதி வழங்கப்படலாகாது. எனினும், மேற்படி பொருட்களை கொண்டு திரிந்து விற்போர் மோட்டார் துவிச்சக்கரவண்டி அல்லது துவிச்சக்கரவண்டி அல்லது தலைச்சுமையாக கொண்டு திரிந்து விற்பதற்கான அனுமதியைக் கோரும்போது பிரதேச சபைத் தவிசாளரோ அல்லது பிரதேச சபைச் செயலாளரோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரோ மறுத்தலாகாது.

22. இத் துணைவிதியின் கீழ் ஏதேனும் உரிமப்பத்திரத்தின் தற்காலிக இடைநிறுத்தல் காரணமாக உரிமப்பத்திரம் பெற்றவருக்கு ஏற்படுகின்ற ஏதேனும் நட்டம் அல்லது சேதம் தொடர்பாக பிரதேச சபைத் தவிசாளரோ அல்லது பிரதேச சபைச் செயலாளரோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரோ அல்லது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியோ கடப்பாடு உடையவர்களாக மாட்டார்கள்.

23. இப்பிரிவின் துணை விதிகளுக்கு அமைய உரிமப்பத்திரம் பெற்றிருப்பினும் ஏதேனும் தொற்றுநோய், தொடுகை அல்லது தோல் நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எவரேனும் ஆளும் அல்லது அத்தகைய நோயாளியை வீட்டில்

வைத்திருக்கும் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டு இருந்த எவரேனும் ஆளும் தொற்று நோய் அல்லது நோய் விருத்திக்காலம் நிறைவடைந்திருந்தால் ஒழிய நடைபாதை வியாபாரத்தில் மற்றும் கொண்டு திரிந்து விற்கும் வியாபாரத்தில் ஈடுபடல் ஆகாது.

பிரதேச சபையின் பணி.

24. இப்பகுதியின் துணை விதியின் கீழ் பிரதேச சபை எல்லைக்குள் ஏதேனும் பிரிவில் நடைபாதை வியாபாரத்தை மற்றும் கொண்டு திரிந்து விற்பதைத் தடை செய்வதற்கு காரணமாயிருந்த அபாயம் முடிவுற்றதென பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியால் தவிசாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படின் அத்தகைய பிரிவில் நடைபாதை வியாபாரத்திற்கு மற்றும் கொண்டு திரிந்து விற்பதற்காக மீண்டும் அனுமதி வழங்குவதற்கு உத்தரவுப்பத்திரம் பெற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டியது பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது பிரதேச சபைச் செயலாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாகும்.

அறவீடுகளும் கட்டணங்களும். ( 25-26 )

25. நடைபாதை வியாபாரத்திற்கான மற்றும் கொண்டு திரிந்து விற்பதற்கான வருடாந்த உரிமப்பத்திர கட்டணத்தை 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 149 ஆம் பிரிவுகளுக்கு அமைவாக உச்சக் கட்டணத்தை விஞ்சாதவகையில் அறவிடுவதற்கு பிரதேச சபைச் செயலாளருக்கு தத்துவமுண்டு.

26. இப்பகுதியின் 25 ஆம் துணை விதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் திருவிழாக்களின்போது அல்லது ஏதேனும் தேசிய விழாக்களின்போது அல்லது பொதுமக்களின் ஒன்று கூடலின்போது பிரதேச சபை எல்லைக்குள் பிரதேச சபைத் தவிசாளரால் அல்லது பிரதேச சபைச் செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் குறிப்பிட்ட பிரதேசத்தில் நிரந்தர வியாபார நிலையங்களுக்கு இடையூறு இல்லாத வகையில் வியாபாரத்திற்காக இடங்களை ஒதுக்கி தற்காலிக உரிமம் வழங்கி விசேட கட்டணங்களை அறவிடுதல் சட்டமுறையானதாகும்.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

27. இத்துணைவிதியில் பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

28. இந்த துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப் பத்திரங்களும் முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.
( 28-29 )

29. இத்துணை விதிகளின் 28 ஆம் துணைவிதியில் எவ்வாறு குறிப்பிடப் பட்டிருப்பினும் இத்துணை விதிகளின் 26 ஆம் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட தற்காலிக உரிமம் எத் தினத்திற்காக வழங்கப்பட்டதோ அத்தினத்தின் பின்னர் அவ் உரிமப்பத்திரம் முடிவுறுதல் வேண்டும்.

30. எவரேனும் நடைபாதை வியாபாரியால் மற்றும் கொண்டு திரிந்து விற்கும் வியாபாரியால் விற்பனை செய்யப்படும் ஏதேனும் பொருட்கள்/ சமைத்த உணவு அல்லது உணவுப் பொருட்களின்/பானவகைகளின் மாதிரி ஒன்றை பிரதேசசபைத் தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியினால் அல்லது பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரொருவராலும் அதற்கான விலை கொடுத்து பெற்றுக் கொள்ளல் சட்டபூர்வமாவதுடன் அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

பரிசோதனை நடைமுறையும், தத்துவமும்.
(30 - 32)

31. இத்துணை விதிகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்போர் இத்துணை விதிகளின் 4ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நடைபெறுவது முடிவுறுத்தப்பட்டு இப் பகுதியின் துணைவிதிகளில் வேறு ஏதேனும் துணைவிதியின் பணிப்புகளுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் உரிமப்பத்திரம் பெறுநருக்கு எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்றை கையளித்த பின்னர் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் நடைபாதை வியாபாரத்திற்கான மற்றும் கொண்டு திரிந்து விற்கும் வியாபாரத்திற்கான உரிமப் பத்திரத்தை இரத்துச் செய்தல் சட்டமுறையானதாதல் வேண்டும் என்பதுடன் இரத்துச் செய்யப்பட்ட உரிமப்பத்திரம் மீள பிரதேச சபைத் தவிசாளரிடம் அல்லது பிரதேச சபைச் செயலாளரிடம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் ஒப்படைக்கப் படுதல் உரிமம் பெற்றவரின் பணியாகும்.

32. ஏதேனும் தொற்றுநோய் அல்லது வயிறு சார்ந்த நோய் நிலைமை பிரதேச சபை எல்லைக்குள் பரவுவதாகவும் அல்லது அவ்வாறான நோய்த்தொற்று பரவும் அபாயம் உள்ளதாகவும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியால் பிரதேசசபைத் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபைச் செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அறிக்கையிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் கீழ் வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபைச் செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சட்ட ரீதியானதாகும்

(i ) இது தொடர்பில் எழுத்து மூலமாக காரணம் காட்டி இத்துணை விதிகளின் பணிப்புகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமப்பத்திரத்தை தற்காலிகமாக இடை நிறுத்துதல் ;

(ii) பிரதேச சபை எல்லைக்குள் ஏதேனும் பிரிவில் நடைபாதை வியாபாரத்தினை மற்றும் கொண்டு திரிந்து விற்பதை தடை செய்தல் ;

(iii ) 32 ஆம் துணை விதியின் (i ) ஆம் உப பிரிவின் கீழ் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட உரிமப்பத்திரத்தை அவ்வாறு இடை நிறுத்தப்பட்ட காலப் பகுதியில் பொறுப்பேற்று வைத்துக் கொள்ளல் ;

(iv ) உரிமப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் முடிவுறுவதற்கு முன்னர் அத்தகைய நோய் பரவும் அபாயம் முடிவுற்றுள்ளது என சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை சமர்ப்பித்திருப்பின் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இடைநிறுத்தப்பட்ட உரிமப்பத்திரத்தை மீள வழங்கல்

முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

33. உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய்மொழி மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபைச் செயலாளருக்கு அல்லது அதிகார மளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ் அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு தீர்வு 14 நாட்களுக்குள் வழங்கப்படல் வேண்டும்.

துணை விதிகளை மீறுதல்.

34. இந்தத் துணை விதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும்.

அபராதமும் தண்டனையும். ( 35-36 )

35. இந்தத் துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122 (2) ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

36. நடைபாதை வியாபாரத்திற்கான மற்றும் கொண்டு திரிந்து விற்போருக்கான உரிமம் ஒன்றை பெறாமல் ஏதேனும் பொருளை அல்லது பொருட்களை விற்பனை செய்யும் அல்லது விற்பனைக்கென வைத்திருக்கும் ஆள் அத்தகைய பொருளை அல்லது பொருட்களை விற்பனை செய்வதிலிருந்து பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது பிரதேச சபைச் செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அல்லது பொலிசாரால் தடுக்கப்படு வதற்கும் ஆளாதல் வேண்டும்.

37. இந்த துணை விதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினா லொழிய - பொருள் கோடலும் வரைவிலக்கணமும்.

"பிரதேசசபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் செயலாளர் எனப் பொருள்படும்.

"செயலாளர்" என்பவர் ஏற்புடைய பிரதேசசபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

"பிரதேச சபை" என்பது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

“ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்” என்பவர் உரிய பணிக்கு பிரதேச சபை தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட ஏற்புடைய பிரதேசசபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

"உரிமப்பத்திரதாரர்" என்பவர் இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொரு வராவார்.

"உரிமப்பத்திரம் பெற்ற இடம்" என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப் பட்டதும் பயன்படுத்தப்படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

“பரிசீலனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரியகாலம்” என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

“கொண்டு திரிந்து விற்றல்” என்பது தலைச்சுமையாக அல்லது ஏதேனும் அனுமதிக்கப்பட்ட வாகனத்தில் பொதுமக்கள் நுகர்வுக்காக இடத்திற்கிடம் கொண்டு சென்று அல்லது ஏதேனும் ஒரு இடத்தில் நிறுத்தி வைத்துச் செய்யப்படும் வியாபாரம் ஆகும்.

நடைபாதை வியாபாரம் என்பது வீதி அல்லது பாதையோரங்களில் குறித்து ஒதுக்கப்பட்ட இடங்களில் தரித்து நின்று வியாபாரம் செய்தல் எனப் பொருள்படும்.

ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.

38. இந்நியமத் துணைவிதியின் தமிழ், சிங்கள, ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்

*இணைப்பு **01***

**பிரதேச சபையின் எல்லைக்குள் நடைபாதை வியாபாரிகள் மற்றும் கொண்டு திரிந்து விற்போரால் பொருட்கள், உணவு வகைகள், பான வகைகள், மரக்கறிகள் மற்றும் பழவகைகள் விற்பனை செய்வதற்கான வியாபார வரி/வியாபார உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் - 20………**

1.வியாபார நிலையத்தின் பெயர் : ………………………………………………………………………

2. (i) வியாபாரம் செய்யவுள்ள வட்டார இலக்கங்கள் : ………………………………………….

(ii) கிராம அலுவலர் பிரிவு இல. : ………………………பிரிவின் பெயர் : ………………

3. விண்ணப்பதாரியின் விபரம் : ……………………………………………………………

(i) முழுப் பெயர் : ………………………………………………………………………………

(ii) நிரந்தர முகவரி : ……………………………………………………………………………

(iii) கிராம அலுவலர் பிரிவு : ………………………………………………………………

( கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழ் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)

(iv) அடையாள அட்டை இல. : ……………………………………………………

(அடையாள அட்டையின் பிரதியுடன் 2 ½" x 2 " அளவுள்ள இரண்டு புகைப்படப் பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)

(v) தொலைபேசி இல. : ……………………………………………………………

(vi) மி ன்னஞ்சல் முகவரி : ……………………………………………………………

4. (i) வியாபாரம் ஆரம்பிக்கப்படும் திகதி : ……………………………………………..

(ii) வியாபாரத்தின் தன்மை: …………………………………………………………………

(iii) நடைபாதை வியாபாரம்/கொண்டு திரிந்து விற்றலில் வேலை செய்பவர்களின் விபரம்

(அ) பெயர்கள் : ………………………………………………………………………

(ஆ) தொலைபேசி இல. : …………………………………………………………

(iv) முன்னைய தொழில் :……………………………………………………

5. கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா ?ஆம் : …………………………இல்லை : …………

ஆமெனின், உரிம இல. : ……………………………… திகதி : ………………………………

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப்படுத்துகிறேன். நடைபாதை வியாபாரம்/கொண்டு திரிந்து விற்றல் தொழிலை நடாத்திச் செல்வதற்கு 20………ஆண்டுக்கான தொழில் உரிமப் பத்திரத்தை எனக்கு

வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான சட்ட விதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

…………….. ………………………………..

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக,

……………………………………………

தவிசாளர் / செயலாளர்/

அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**சோலை வரிப் பகுதி அறிக்கைக்காக ( பிரதேச சபை பிரதேசத்தில் வதிபவராயின்)**

வட்டாரம் : ………………………………… ஆதன இல. : ………………………………………

வீதியின் பெயர் : ………………………………………………………………………………

உரிமையாளரின் பெயர் : ……………………………………………………………………….

ஆதன விபரம் : ……………………………………………………………………………….

ஆண்டுப் பெறுமதி : ………………………… வீத வரி நிலுவை : ………………………………

உண்டு…………………… இல்லை…………..

………….. …………………..

திகதி நிர்வாக உத்தியோகத்தர் /
பகுதித்தலைவர்.

**வருமானப்பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை : …………………………………………………………………

செலுத்த வேண்டிய கட்டணம் : ………………………………………………………………பிரிவு

A B C : ………………………………………….

குறிப்பு ……………………………………………………

……………… ……………………………………

திகதி வருமானப் பரிசோதகர்.

**பிரதம சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கை

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
……………………………………

……………… ……………………………………….

திகதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்.

**சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை**

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
………………………..……………………………………

…………………… ………………………………………….

திகதி பிரதம சுகாதார வைத்திய அதிகாரி.

விண்ணப்பம் சிபாரிசு செய்யப்படுகின்றது/ பின்வரும் காரணங்களிற்காக சிபாரிசு செய்யப்படவில்லை.

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………..….

………………………… ………………………………………….

திகதி பிரதம வருமானப் பரிசோதகர்.

செயலாளர் சிபாரிசு

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபாரிசு செய்கிறேன்.

……………… ……………………………………….

திகதி செயலாளர் .

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/ வழங்கப்படவில்லை.

……….......  ……………………………….

திகதி  பிரதேச சபைத் தவிசாளர் / அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**நானாவித இறை வரிப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல. : ………………………  பற்றுச்சீட்டுத் திகதி : ……………………..

உரிம இல. : ……………………………  உரிமத் திகதி :………………………………

உரிமப் பத்திரம் வழங்க சிபாரிசு செய்யப்படுகின்றது.

………………  ……………………………………….

திகதி  இறை வரி நிர்வாக உத்தியோகத்தர்.

பிரதேச சபைத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

………………  ………………………….

திகதி  செயலாளர்.

உரிமப் பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

………………  ……………………………………

திகதி  பிரதேச சபைத் தவிசாளர் / அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

## பகுதி ii - பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கோழி இறைச்சி விற்பனையை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்

துணை விதியின் பெயர்.

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கோழி இறைச்சி விற்பனை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பிலான நியமத் துணைவிதிகள் என அழைக்கப்படலாம்.

நோக்கம்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

துணை விதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 126( ix )(ஒ) உப பிரிவுகளின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இத் துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்ற வேண்டிய பணிகள். (04 -13)

4. இணைப்பு 01 இலுள்ள விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் உரிமப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளக் கோருகின்ற விற்பனை நிலையம் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் அமைந்தொழுகினால் மட்டுமே பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவோர் ஆளுக்கும் கோழி இறைச்சி விற்பனை நிலையமொன்றைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமப்பத்திரம் விநியோகிக்கப்படல் வேண்டும்.

(i) விற்பனைக்காக கோழி இறைச்சிகளைக் காட்சிக்கு வைக்கப்படுகின்ற இடம், மாபிள் ஓடுகள் அல்லது சீமெந்து சாந்து பூசப்பட்டோ அல்லது துருப்பிடியாத உலோகத் தகடுகள் போடப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(ii) கோழி இறைச்சி விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்படும் நிலையத்தின் தரை மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தின் தரை, சீமெந்து சாந்து பூசப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(iii) கோழி இறைச்சி விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்படும் நிலையத்தின் ஒவ்வொரு அறைக்கும் வெளியே அல்லது பக்கவாட்டில் திறக்கக்கூடிய சாளரங்கள் பொருத்தப் பட்டிருத்தல் வேண்டும். அவ் ஒவ்வொரு அறையினதும் சாளரங்கள் திறந்தவுடன், அச்சாளரங்களின் கதவுகளின் பரப்பளவு அறையின் நிலப்பகுதியின் பரப்பளவில் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் யாதாயினுமொரு அறை குளிரூட்டப் பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்த நியமம் ஏற்புடையதா வதில்லை.

(iv) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்திலுள்ள ஒவ்வொரு அறையினதும் சுவர்கள் மூன்று மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

(v) உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் ஒவ்வொரு அறையிலும் உட்கூரை (சீலிங்) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், மேற்படி உட்கூரை நில மட்டத்திலிருந்து மூன்று மீற்றருக்குக் குறையாத உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(vi) கூரையானது ஏதேனும் நிரந்தர திண்மப் பொருளினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் கீழ் முனையானது நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.5 மீற்றரேனும் உயர்ந்ததாக அமைந்திருத்தல் வேண்டும். தாழ்வாரத்தின் அகலமானது ஆகக்குறைந்தது 1 மீற்றராகவேனும் இருத்தல் வேண்டும்.

(vii) கழிவு நீர் பாய்ந்தோடுவதை வசதிப்படுத்துவதற்கு அவசியமான சரிவினைக் கொண்டதாக சீமெந்து சாந்து பூசப்பட்ட அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்ட வடிகான்களைக் கொண்டிருந்தல் வேண்டும்.

(viii) (vii) பிரிவில் குறிப்பிட்ட வடிகான்களின் ஊடாக பாய்ந்து செல்கின்ற கழிவுநீர், ஏதேனும் பொது நீர்வழியில் பாய்ந்து செல்வதைத் தடுக்கப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், மேற்போர்ந்த கழிவு நீர் உறிஞ்சிக்கொள்ளக்கூடிய கிடங்கில் பாய்ந்து செல்ல ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

(ix) கழிவுநீர் உறிஞ்சிக் கொள்ளும் குழி வளியுடன் கலக்காத வகையில் மூடி வைக்கப்படல் வேண்டும்.

(x) கோழி இறைச்சி விற்பனை நிலையத்திலிருந்து அகற்றப்படுகின்ற உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்களை இடுவதற்கு போதுமானளவு பாத்திரங்களை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அன்றாட வியாபார நடவடிக்கைகள் முடிவடைந்ததும் அக்கழிவுப்பொருட்களை தரைமட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 0.5 மீற்றர் ஆழத்தில் புதைத்தல் அல்லது பிரதேச சபையினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்பட்டு விதிக்கப்படுகின்ற விதிகளுக்கு அமைவாக பிரதேச சபையின் குப்பை சேகரித்தல் வாகனத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(xi) விற்பனை செய்யும் இடத்தில் பணியாற்றும் ஆட்களின் உபயோகத்திற்காக போதியளவு நீரடைக்கப்பட்ட மலசலகூட வசதிகள் இருத்தல் வேண்டு மென்பதோடு, மலசலகூட பாவனையின் பின்னர் பாவனைக்குகந்த துப்பரவு ஏற்பாட்டு முறைகளும் பொருட்களும் விநியோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xii) உரிமம் பெற்ற கோழி இறைச்சி விற்பனைக் கூடத்தில் தொழிலுக் கமர்த்தப்பட்டவர்கள் இலகுவாக அணுகக் கூடிய வகையில் ஆகக் குறைந்தது ஒரு படிக்கத்தையேனும் (எச்சில் துப்பும் கலம்) உரிமம் பெற்ற ஒவ்வொருவரும் வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(xiii) கோழி இறைச்சி விற்பனைக்கூடத்தின் உரிமம் பெற்ற ஒவ்வொருவரும் அவரது விற்பனைக் கூடத்திற்கு வெளியே துலாம்பரமானவொரு நிலையில் அவரது பெயரும், "உரிமம் பெற்ற கோழி இறைச்சி விற்பனைக்கூடம்" என்ற சொல்லையும் தமிழிலும், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் எழுதி அதன்மீது தெளிவாகத் தீந்தையிடப்பட்ட ஒரு பலகையைப் பொருத்தி வைத்தல் வேண்டும்.

(xiv) கோழி இறைச்சி விற்பனைக்கூடத்தில் உரிமம் பெற்ற ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும் கிடைக்கக்கூடிய வகையில், கோழி இறைச்சி விற்பனையாளர்கள் உட்பட எல்லா ஊழியர்களினதும் பெயர்கள், முகவரிகள் என்பன பற்றிய ஒரு நிரலை விற்பனைக்கூடத்தில் வைத்திருத்தலும் வேண்டும்.

(xv) ஆகக்குறைந்தது ஆண்டுக்கு நான்கு தடவையாவது , நகர சபை தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எழுத்தில் கட்டளையிடப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நேரங்களிலும் இறைச்சி விற்பனைக்கூடத்தின் உரிமம் பெற்றவர் ஒவ்வொருவரும்,

இறைச்சி விற்பனைக்கூடத்தின் பாகமாக அமைகின்ற ஒவ்வோர் அறையினதும் சுவர்களையும் வழுவழுப்பான ஓடுகளினால் மூடப்பட்ட அல்லது சீமெந்து சாந்திடப்பட்ட அத்தகைய பாகங்கள் தவிர, வழுவழுப்பான தீந்தை பூச்சிடப்படவும், அத்துடன் எல்லா மரவேலைப்பாடுகளும் பூச்சிடப்படவும் அல்லது எண்ணெய்த் தீந்தையிடப்பட்டிருப்பின் வெந்நீரினாலும் சவர்க்காரத்தினாலும் கழுவப்படவும் செய்வித்தல் வேண்டும்.

5. உரிமப் பத்திரம் பெற்ற எந்தவொரு கோழி இறைச்சி விற்பனை நிலையத்திலும் நாளாந்த நடவடிக்கைகளின் இறுதியில், அவ்விடத்தின் தரைகள், சுவர்கள், மாபிள் ஓடுகள் பதித்த அல்லது சீமெந்து சாந்து பூசப்பட்ட பகுதிகள், கோழி இறைச்சி வெட்டுவதற்கு உபயோகிக்கப் படுகின்ற மரக்குற்றிகள், உபகரணங்கள், கோழி இறைச்சி விற்பனையின் பொருட்டு கோழி இறைச்சி காட்சிக்கு வைக்கும் இடங்கள் யாவும் கிருமிநாசினித் திரவங்களை உபயோகித்து சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

6. உரிமப் பத்திரம் பெற்ற எந்தவொரு கோழி இறைச்சி விற்பனை நிலையத்தினதும் உரிமையாளர் கோழி இறைச்சியைக் களஞ்சியப் படுத்துவதற்கு, தயார்படுத்துவதற்கு உபயோகிக்கப்படுகின்ற சகலவிதமான பாத்திரங்களும் உபகரணங்களும் மற்றும் கோழி இறைச்சி விற்பனை நிலையத்தின் சுற்றுப்புறத்தில் உள்ள வடிகான்களும் நன்றாக கழுவி, சுத்தம் செய்யப்பட்டும் பழுதுபார்க்கப்பட்டும் துர்நாற்றமின்றியும் வைத்திருத்தல் வேண்டும்.

7. உரிமப் பத்திரம் பெற்ற எந்தவொரு கோழி இறைச்சி விற்பனை நிலையத்திலும் நாய்கள், பூனைகள், எலிகள், பூச்சிகள் அல்லது வேறு பிராணிகள் உட்புகாதவாறு உரிமபத்திரதாரர் வைத்திருத்தல் வேண்டும்.

8. கோழி இறைச்சி விற்பனை நிலையத்தில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக் கவசம் மற்றும் அவசியமான வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன் அவ் ஊழியர்கள் கோழி இறைச்சி விற்பனை செய்யும் இடத்தில் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் உரிமப் பத்திரம் பெற்றுள்ளவரின் பணியாதல் வேண்டும்.

9. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

10. உரிமப் பத்திரம் பெற்றுள்ள இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைவரினதும் பாவனையின் பொருட்டு தூய குடிநீர், சுத்தமான துவாய், நகச்சுத்தம் செய்யும் தூரிகை, சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் ஆகியவற்றை வைத்திருத்தல் உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

11. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற சகல கழிவுப் பொருட்களும் மீள்சுழற்சிக்குட்படுமாயின் அவற்றை பின்வரும் வகைகளுக் கமைவாக வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(அ) உக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;

(ஆ) கண்ணாடி ;

(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள் ;

(ஈ) பொலித்தீன், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள் ;

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சார்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சார்ந்த பொருட்களின் பகுதிகள் ;

(ஊ) உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற பிற மூலப் பொருட்களின் மீதிப் பகுதிகள் அல்லது உற்பத்தி செயற்பாட்டின் போது கிடைக்கின்றதும் ஏனைய உற்பத்திப் பொருட்களின் பகுதிகளும் ;

(எ) அபாயகரமான கழிவுகள்.

(i) இவ்வாறான ஒவ்வொரு வகையான கழிவையும் மூடி வைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதான வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைப்பது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ii) மேலே (i ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை பிரதேச சபை அமுல்படுத்தியுள்ள கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத் திட்டத்தின் கீழ் அகற்றுவதாயின் பிரதேசசபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணிப்பு விடுக்கின்றவாறு இறுதி அகற்றலானது மேற்கொள்ளப்படல் வேண்டும்.

12. உரிமப்பத்திரம் பெற்ற சகல கோழி இறைச்சிக் கடை உரிமையாளர்களும் கடை அமைந்துள்ள இடத்தில் குடிப்பதற்கேற்ற போதுமான நீரை வைத்திருத்தல் வேண்டும்.

13. சகல கோழி இறைச்சிக் கடை உரிமையாளர்களாலும் உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்திற்கான கடையை அல்லது விற்பனை நிலையத்தை இலங்கை அரசினால் அல்லது பிரதேசசபைத் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் மூடி வைக்கப்பட வேண்டும் என நிச்சயிக்கப்படும் நாட்களைத் தவிர ஏனைய சகல நாட்களிலும் பிரதேச சபையால் தீர்மானிக்கப்படாதவிடத்து மு.ப 6.00 மணி தொடக்கம் பி.ப 6.00 மணி வரை மட்டுமே திறந்து இருத்தல் வேண்டும்.

14. எவரேனும் ஆளொருவர் சந்தை அல்லாத வேறு ஏதேனும் இடத்தில் பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் உரிமப்பத்திரமின்றி கோழி இறைச்சி விற்பனைக்காக இடமொன்றைப் பாவித்தல் ஆகாது.

நிறைவேற்றக் கூடாத பணிகள். (14 - 23)

15. உரிமப் பத்திரம் பெற்ற இடத்தில் நாளாந்த வியாபார நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் விற்பனை செய்ய இயலாமல் எஞ்சியுள்ள கோழி இறைச்சிகள் மிகைக் குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்படுமாயின் அவை களஞ்சியப்படுத்தப்பட்ட தருணத்தில் இருந்து அடுத்த நாளன்று கோழி இறைச்சி விற்பனை நிலையம் திறக்கப்படும் தருணம் வரை மேற்படி மிகைக்குளிரூட்டி உரிய வகையில் இயங்கினாலன்றி எஞ்சியுள்ள எந்தவொரு வகையைச் சேர்ந்த கோழி இறைச்சியையும் அடுத்த நாளில் விற்கவோ விற்பனைக்காகக் காட்சிக்கு வைக்கவோ அல்லது மிகைக் குளிரூட்டியிலோ அல்லது உரிமப்பத்திரம்பெற்ற இடத்தில் வைத்திருத்தலோ ஆகாது.

16. ஆளெவரும், உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் எந்தவொரு பகுதியிலும் விலங்குகள் எவற்றையும் வைத்திருத்தல் ஆகாது.

17. ஆளெவரும், அந்நோக்கத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட படிக்கத்தினுள் (எச்சில் துப்பும் கலம்) தவிர, கோழி இறைச்சி விற்பனை கூடத்தினுள் துப்புதல் ஆகாது.

18. கோழி இறைச்சி வியாபாரம் செய்வதற்காக உரிமப் பத்திரம் பெற்று கோழி இறைச்சி விற்பவர்களால் கோழி இறைச்சி விற்கப்படும் போது தம்மால் சுத்தப்படுத்தப்படும் கோழி இறைச்சிகளின் கழிவுகளை பாதையின் ஓரங்களில் அல்லது பொது இடங்களில் வீசக் கூடாது.

19. எவரொருவரும் கொண்டு திரிந்து கோழி இறைச்சியை விற்பனை செய்யக் கூடாது.

20. இப்பிரிவின் துணைவிதிகளுக்கமைய உரிமப்பத்திரத்தைப் பெற்றுள்ள இடத்தைப் பகல் அல்லது இரவு வேளைகளில் நித்திரை செய்யும் அல்லது உணவு உண்ணும் இடமாகப் பாவித்தல் ஆகாதென்பதோடு, வேறு எந்தவொரு நபரையும் அவ்வாறு பாவிக்க இடமளித்தல் ஆகாது.

21. ஏதேனும் தொற்றுநோயினால் அல்லது தோல் நோயினால் பீடிக்கப் பட்டுள்ளவர்கள் அல்லது அண்மையில் இவ்வாறான நோயினால் பீடிக்கப் பட்டவர்கள் அல்லது அத்தகைய நோயுடைய நபரொருவருக்கு அண்மையில் பாராமரிப்பு பணிகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஈடுபடுபவர்கள் இந்த நோயின் தொற்றுக்களுக்கான மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி முடிந்தாலன்றி,மேற்படி உரிமப்பத்திரத்திற்குரிய இடமொன்றில் எந்தவொரு பணிக்கும் அமர்த்தப்படவோ அல்லது அவ்வாறான பணிகளில் ஈடுபட்டுள்ள யாராயினும் ஆளொருவரின் உதவியாளராக பணிக்கமர்த்தப்படவோ இடமளித்தல் ஆகாது.

22. நன்கு கழுவப்பட்ட சுத்தமான ஆடைகளை அணியாத எந்தவொரு நபரும் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் எந்த வகையான பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

23. உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் கோழி இறைச்சி வைத்திருக்க அல்லது தயார்ப்படுத்த அல்லது விற்பனை செய்ய உபயோகிக்கும் உபகரணங்கள் அல்லது பாத்திரங்கள் தவிர்ந்த வேறேதேனும் பண்டத்தை அல்லது உடையை அல்லது வேறு பொருளை வைத்திருத்தல் ஆகாது.

பிரதேச சபையின் பணி.

24. பிரதேச சபைத் தவிசாளரால் அல்லது பிரதேச சபை செயலாளரால் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் உரிமம் பெற்றுள்ள கோழி இறைச்சி விற்பனை செய்யும் இடத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள அல்லது விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அல்லது உள்ளே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் கோழி இறைச்சி வகையின் மாதிரியை பரிசோதனை நோக்கத்திற்காக அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளல் சட்டபூர்வமானதாகும்.

25. இந்த துணைவிதியின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள கோழி இறைச்சி விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்கு உத்தரவுப்பத்திரம் பெற்றவர் இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு பிரிவிற்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபை தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் அல்லது அதிகார மளிக்கப்பட்ட அலுவலரினால் இந்த உரிமப்பத்திரதாரரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

அறவீடுகளும் கட்டணங்களும்.

26. யாதாயினுமொரு கோழி இறைச்சி விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 149 ஆம் பிரிவுக்கு அமைவாக உச்சக் கட்டணத்தை விஞ்சாத வகையில் வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவது பிரதேச சபை செயலாளருக்கு சட்டபூர்வமானதாகும்.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

27. இப்பகுதியின் துணைவிதிகளில் பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்ட பூர்வமானதாகும்.

உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.

28. இத்துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

பரிசோதனை நடைமுறையும், தத்துவமும்.

( 29 – 32 )

29. இத்துணைவிதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரியகாலப் பகுதிக்குள் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு பிரதேச சபை தவிசாளர் அல்லது பிரதேச சபை செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப் பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு.

30. இந்த பகுதியின் துணை விதியின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபை செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல்கூடாது.

31. இத்துணைவிதிகளின் 25 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு. எவ்வாறாயினும், இந்த விதத்தில் நீடிக்கப் படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

32. 31 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறும் பட்சத்தில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சட்ட ரீதியான தத்துவம் உண்டு.

முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறி முறைகளும்.

33. உரிமப்பத்திரதாரர் அல்லது யாராயினுமொருவர் எழுத்துமூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ் அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு 14 நாட்களுக்குள் தீர்வு வழங்கப்படல்வேண்டும்.

துணைவிதிகளை மீறுதல்.

34. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும்.

35. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122 (2 ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் மேலே துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122 (2) ஆம் பிரிவின் 2ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

அபராதமும் தண்டனையும். (35-36)

36. இந்த துணைவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய -

பொருள்கோடலும் வரைவிலக்கணமும்.

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படுவார்.

"செயலாளர்" என்பவர் ஏற்புடைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

"பிரதேச சபை" என்பது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

" அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பவர் உரிய பணிக்கு பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

"உரிமப்பத்திரதாரர்" என்பவர் இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவர் எனவும் பொருள்படும்.

"உரிமப்பத்திரம் பெற்ற இடம்" என்பது இந்த துணை விதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள் வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப் படுவதுமான இடம் எனப்பொருள்படும்.

" பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரியகாலம்" என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக்கருதப்படும்.

" கோழி இறைச்சிக் கடை அல்லது கோழி இறைச்சி விற்பனை நிலையம்" என்பது கோழி இறைச்சி உட்பட உயிருள்ள கோழிகள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் இடத்தைக்குறிக்கும்.

ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.

37. இந்நியமத் துணைவிதியின் தமிழ், சிங்கள, ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

***இணைப்பு 01***

**பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கோழி இறைச்சி விற்பனை நிலையங்களை நடாத்துவதற்கான வியாபார வரி/ வியாபர உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் - 20**…………

1. கோழி இறைச்சி விற்பனை நிலையத்தின் பெயர் : …………………………………………

2. (i) கோழி இறைச்சி விற்பனை நிலையம் அமைந்துள்ள இடம் :

வட்டாரம்………ஆதன இல. : …………

(ii) வீதியின்பெயர் : ………………………………………………………………….

(iii) கிராம அலுவலர் பிரிவு இல . : ………… பிரிவின் பெயர் : ………….……………….

3.விண்ணப்பதாரியின் விபரம் :

(i) முழுப் பெயர் : ……………………………………………………………………..

(ii) நிரந்தர முகவரி : ………………………………………………………………….

(iii) கிராம அலுவலர் பிரிவு இல. : ……………………………………………….

(iv) தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ………………………………………….

(v) தொலைபேசி இல. : ………………………………………………………………….

(vi) மின்னஞ்சல் முகவரி : ………………………………………………………

4. (i) கோழி இறைச்சி விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்படும் திகதி : ……………………

(ii) கோழி இறைச்சி விற்பனை நிலைய முகாமையாளரின்/ பிரதிநிதியின்

(a) பெயர் : ………………………………………………………………………….

(b) தொலைபேசி இல. : ……………………………………………………………

5.கட்டடம் வாடகைக்கு பெறப்பட்டதாயின்

(i) உரிமையாளரின் பெயர் :……………………………………………………………

(ii) முகவரி :…………………………………………………………………………

6.கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா : ஆம் : ……………… இல்லை : ……………………

ஆம் எனில், உரிம இல. :……………………………… திகதி : ………………………………

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப் படுத்துகின்றேன். கைத்தொழிலை/தொழிலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20……… ஆண்டுக்கான கைத்தொழில்/தொழில் உரிமப்பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இது தொடர்பான சட்டவிதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

………….. ……………………………….

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

……………………………………………

தவிசாளர் / செயலாளர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

**சோலை வரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம் : …………………………………… ஆதன இல. : …………………………………

வீதியின் பெயர் : ………………………………………………………………………………

உரிமையாளரின் பெயர் : ……………………………………………………………………

ஆதன விபரம் : …………………………………………………………………………………

ஆண்டுப் பெறுமதி : ……………………………… வீத வரி நிலுவை :

…………………………………………… உண்டு……………………இல்லை…………

……… ………………………………..

திகதி நிர்வாக உத்தியோகத்தர் /

பகுதித் தலைவர்

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:-……………………………………………………………………

செலுத்த வேண்டிய கட்டணம்:……………………………………………….…… பிரிவு A B C

குறிப்பு :-……………………………………….

……………… ………………………………………

திகதி வருமானப் பரிசோதகர்

**பிரதம சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

பொதுச்சுகாதார பரிசோதகரின் அறிக்கை

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………

…………. …………………………………………

திகதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர்

**சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கை**

………………………………………………………………………………………………………..……...…..
…………………………… ………………………………………………………………………………..
……………………………………………………………………………………..……….. … …
……………………………………………………………………………………….………… …
…… …………. ……………………………………………………………………………...………
………………………………… ……………………………………………………… ………. …..

……………………………                ………………………………….
திகதி                பிரதம சுகாதார வைத்திய அதிகாரி.

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம் : ………… உபயோகம் மற்றும் : ……………………சுற்றுச் சூழல்
உரிமம் : ……………
சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை : …………………..குடிபுகு சான்றிதழ் : …………. …
மதுவரி உரிமம் : ………………

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது./ பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.

……………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………… …
……………………………………………………………………………………………………

…………………                ………………………………….
திகதி                பிரதம வருமானப் பரிசோதகர்.

**செயலாளரின் சிபாரிசு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபாரிசு செய்கிறேன்.

………………….                ……………………………
திகதி                செயலாளர்.

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/வழங்கப்படவில்லை

……………… ……………………………………

திகதி பிரதேச சபைத் தவிசாளர் /
அதிகாரமளிக்கப்பட்டஉத்தியோகத்தர்.

**நானாவித இறைப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டுஇல. :…………………………… பற்றுச்சீட்டு திகதி :……………………………………
உரிம இல. :…………………………………… உரிமத் திகதி :………………..
………………………
உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

………………… ……………………………………

திகதி இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்.

பிரதேச சபைத் தவிசாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது

……………………. …………………………………….

திகதி செயலாளர்

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

………………………. …………………………………

திகதி பிரதேச சபைத் தவிசாளர் /
அதிகாரமளிக்கப்பட்டஉத்தியோகத்தர்.

## பகுதி iii - நகர சபையின் எல்லைக்குள் பாற்பண்ணைகள், பால் விற்பனை நிலையங்கள் நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணை விதிகள்

1. பிரதேச சபையின் எல்லைக்குள் பாற்பண்ணைகள், பால் விற்பனை நிலையங்கள் நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணை விதிகள் என அழைக்கப்படலாம். *துணை விதியின் பெயர்.*

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. *நோக்கம்.*

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122 ( 1 ) ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும், 126 ( ix ) (ஐ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இத் துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. *துணை விதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

4. இந்தத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டு இருந்தால் மட்டுமே எந்தவொரு பாற்பண்ணைக்கும் பிரதேச சபைத் தவிசாளரால் அல்லது பிரதேச சபை செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் உரிமப்பத்திரம் வழங்கப்படல் வேண்டும். *நிறைவேற்ற வேண்டிய பணிகள். (4 -24)*

   (i) ஒரு விலங்கினைத் தங்க வைப்பதற்குக் குறைந்த பட்சம் 03 மீற்றர் வீதம் பாற்பண்ணையிலுள்ள விலங்குகளைத் தங்கவைப்பதற்குப் போதுமான அளவு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

   (ii) விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் சுவர்களின் உயரம் 01 மீற்றருக்கு மேல் இருத்தல் ஆகாதென்பதோடு, செங்கற்கள் அல்லது சீமெந்துக் கற்களினால் அல்லது கபூக்கல் அல்லது அலுமினியம் மற்றும் வெட்டுமரத்தினால் நிர்மாணித்து இருபக்கங்களும் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிட சுவரின் மேற்பாக எல்லையிலிருந்து கூரை வரை நிர்மாணிக்கப்படும் தூண்கள் பலம் வாய்ந்த மரத்தினாலோ அல்லது இரும்பினாலோ அல்லது கொங்கிறீற்றினாலோ கட்டப்படல் வேண்டுமென்பதோடு, அத்தூண்களின் மேல் எல்லை நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.3 மீற்றர் உயரம் இருத்தல் வேண்டுமென்பதுடன், வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் கூரை ஏதேனும் திடமான பொருட்களைக் கொண்டு அமைய வேண்டுமென்பதுடன், கூரையின் ஓரம் நிலமட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.3 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(v) விலங்குகளைத் தங்க வைத்துள்ள கட்டிடத்தின் தரை சீமெந்தினால் அமைதல் வேண்டும்.

(vi) விலங்குகளைத் தங்க வைத்துள்ள கட்டிடங்கள் நன்றாகப் பழுது பார்க்கப்பட்ட நிலையில் இருத்தல் வேண்டும்.

(vii ) பாற்பண்ணையில் விலங்குகள் குடிப்பதற்கும், குளிப்பாட்டுவதற்கும் கட்டிடத்தைக் கழுவுவதற்கும் மாசடையாத போதுமான அளவு நீர் வசதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) விலங்குகளைக் குளிப்பாட்டிய பின்னர் அகற்றும் நீர், மிருகங்கள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடத்தைக் கழுவிய நீர், சிறுநீர் மற்றும் சாணம் உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்கிற்கு இலகுவில் பாய்ந்து செல்லக்கூடியவாறு சீமெந்தினாலோ அல்லது கொங்கிறீற்றினாலோ வடிகான்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ix) விலங்குகளின் சாணம், எஞ்சியுள்ள புல் மற்றும் ஏனைய தீன் வகைகளை அகற்றுவதற்கு தனிவேறான இடமொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அந்த இடம் விலங்குகள் தங்கியுள்ள கட்டிடங்கள் மற்றும் பால் அறையிலிருந்து குறைந்தது 10 மீற்றர் தூரத்தில் இருத்தல் வேண்டும். அதே போன்று இவ்வாறான இடம் பொது நீர் வழிகள் அல்லது நீரைப்பாவிக்கும் கிணற்றிலிருந்து குறைந்த பட்சம் 10 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(x) பால் கறக்கும் இடம் மற்றும் தற்காலிகமாக பாலைக் களஞ்சியப்படுத்தும் இடம் மிருகங்கள் தங்கும் இடத்திலிருந்து குறைந்தது 06 மீற்றருக்குக் குறையாத தூரத்தில் அமைதல் வேண்டும்.

(xi) பால் கறக்கும் கட்டிடம் செங்கற்களால் அல்லது சீமெந்துக் கல்லினால் அல்லது கபுக் கல்லினால் கட்டப்பட்டு இரு பக்கங்களும் சீமெந்தினால் சாந்துப் பூச்சிடப்பட்டிருத்தல் வேண்டும். அச்சுவர்களின் ஆகக் குறைந்தது 1.2 மீற்றர் உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, சுவரின் மேலோரத்திலிருந்து கூரை வரை கட்டப்படும் தூண்கள் பலம் வாய்ந்த மரத்தினாலோ அல்லது இரும்பினாலோ அல்லது கொங்கிறீற்றினாலோ கட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(xii) பால் கறக்கும் கட்டிடத்தின் தரை சீமெந்தினால் நிர்மாணிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, தரையும் சுவரும் இணையுமிடங்கள் வட்டவளைவாக அமைதல் வேண்டும். அதே போன்று கட்டிடத்தின் கூரை விளிம்பு நில மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 1.8 மீற்றருக்கு மேலாக இருத்தல் வேண்டும்.

(xiii) பால் கறக்கும் கட்டிடத்தில் மேசை ஒன்று இருத்தல் வேண்டு மென்பதுடன், அதன் மேற்பாகம் மாபிள் ஓடுகளால் அல்லது இடைவெளிகள் அற்ற துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் அல்லது வேறு ஏதேனும் ஊடுருவமுடியாத பொருளால் விரிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(xiv) பால் கறக்கும் இடத்தில் துப்பரவேற்பாட்டு கழிவுப்பொருள் கொள்கலன் ஒன்று வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xv) பால் கறக்கும் கட்டிடம், ஏதேனும் மலசலகூடம், கழிவுகளை இடும் கிடங்கு, பசளைக் குவியல் அல்லது பசளைக் கிடங்கு, திறந்த கழிவு வடிகான் போன்றவற்றிலிருந்து குறைந்த பட்சம் 10 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

(xvi) விலங்குகள் தங்க வைத்திருக்கும் கட்டிடத்திலிருந்து குறைந்தது 20 மீற்றருக்குக் குறையாத தூரத்தில் நோய்வாய்ப்பட்ட விலங்குகளை தங்க வைப்பதற்காக தனிவேறான கட்டிடம் ஒன்று இருத்தல் வேண்டுமென்பதுடன், மிருகங்களைத் தங்கவைக்கும் கட்டிடத்திற்கான தேவைப்பாடுகளைக் கொண்டதாகவே இக்கட்டிடமும் இருத்தல் வேண்டும்.

(xvii) நோய்வாய்ப்பட்ட விலங்குகள் தங்க வைக்கும் கட்டிடத்திலிருந்து பாய்ந்தோடும் கழிவு நீர் ஏனைய விலங்குகள் தங்கவைக்கப்பட்டிருக்கும் கட்டிடத்தை நோக்கி பாயாதவாறு வடிகான் அமைக்கப்படல் வேண்டும்.

(xviii) பால் கறத்தலை இயந்திர பாவனை மூலம் மேற்கொள்வதாயின் அந்த இயந்திரங்கள் மற்றும் கறந்த பாலைச் சேகரிக்கும் பாத்திரங்கள் தினந்தோறும் கிருமி நீக்கம் செய்யத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென 4 ஆவது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை என்ற வகையில் வர்ணப்பூச்சு பூசப்படுதல் வேண்டும்.

6. நோயற்ற மற்றும் நோய்வாய்ப்பட்ட விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டிடங்களின் தரை மற்றும் சுவர்கள், குறைந்தது தினந்தோறும் ஒரு தடவையாவது கழுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7. பாற்பண்ணை மற்றும் அதன் சுற்றாடலில், வடிகான்கள், மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் சுத்தமாகவும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையிலும் வைத்திருத்தல் வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் குறைந்தது வருடத்திற்கு ஒருதடவை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் கடமையாகும்.

9. பாற்பண்ணையில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக் கவசம் மற்றும் தேவைப்படும் வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப் பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

10. பாற்பண்ணையில் பால் கறக்கும் பணியில் ஈடுபடுவதற்கு முன்னர் அவர்கள் தமது உடம்பை கழுவிக் கொள்ளல் வேண்டும்

11. விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டிடங்கள் மற்றும் கறக்கும் அறையின் தரை, மேசை ஆகியவை குறைந்தது தினந்தோறும் ஒரு தடைவ வீதம் கழுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவிக்கப்படும் எல்லா பாத்திரங்களும் பால் கறத்தல் இயந்திர மூலம் மேற்கொள்ளப்படுவதாயின் அந்த உபகரணங்களும் குறைந்தது நாளொன்றுக்கு ஒரு தடவை வீதம் கிருமி நீக்கம் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், ஏனைய வேறு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தினந்தோறும் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப் பத்திரதாரரின் பணியாகும்.

13. பாற்பண்ணையில் வளர்க்கப்படும் எல்லா விலங்குகளும் குறைந்தது வருடத்திற்கு மூன்று தடவைகள் ஒரு மிருக வைத்தியரால் அல்லது அவரால் பெயர் குறிக்கப்பட்ட எவரேனும் பிரதிநிதியின் மேற்பார்வைக்கு உட்படுத்தி அவசியமான வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும். அத்தகைய ஆலோசனைகளுக்கு அமைய செயற்படல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் கடமையாகும்.

14. பாற்பண்ணையில் எந்தவொரு விலங்கிற்கும் ஏதேனும் நோய் பீடிக்கப்பட்டுள்ளதென அறிந்த உடனேயே அந்த விலங்கை விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடத்திலிருந்து அகற்றி நோயுற்ற விலங்குகள் தங்கவைக்கும் கட்டிடத்தில் தங்கவைத்து அது சம்பந்தமாக மிருக வைத்தியருக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு அனுமதிப்பத்திரம் பெறுநரின் கடமையாகும்.

15. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவனைக்குரிய புல் மற்றும் வைக்கோல் தவிர்ந்த ஏனைய மிருக உணவுகளை எலிகள் புகாதவாறு பொருத்தமான பாத்திரங்களில் வைத்தல் வேண்டும்.

16. (அ) அனுமதிப் பத்திரம் பெற்ற இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள் -

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;

(ii) கண்ணாடிப் பொருட்கள் ;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன், பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சேர்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் வகைகளைச் சேர்ந்த பொருட்களின் பகுதிகள்.

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ; என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

(ஆ) - (அ) பிரிவில் கூறியவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், பிரதேச சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப் படுத்துவதாயினன்றி பிரதேச சபை தவிசாளரால் அல்லது பிரதேச சபை செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் கட்டளையிடப்பட்டவாறு இறுதியான அப்புறப்படுத்துகை இடம் பெறல் வேண்டும்.

(இ) - (ஆ) பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் (அ) பந்தியின் (i ) உபபிரிவில் கூறப்பட்டுள்ள உயிர்ச் சிதைவு கழிவுப் பொருட்களாகக் கொள்ளப்படுகின்ற விலங்குகளின் சாணம் மற்றும் எஞ்சிய புற்களின் பாகங்கள் பசளையாக உபயோகிப்பதற்கு அத்தகைய பணிப்பு தடையாக அமைதல் ஆகாது. எனினும், அத்தகைய கழிவுப் பொருட்களை பாற்பண்ணையிருந்து வெளியே எடுத்துச் செல்வதாயின் மூடி எடுத்துச் செல்வதாயினன்றி பாற்பண்ணை அமைந்துள்ள வளவுக்கு வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது.

17. கறக்கப்பட்ட பால் சேமித்து வைப்பதற்கு அதற்காகவே ஒதுக்கப்பட்ட வேறான அறையொன்று இருத்தல் வேண்டுமென்பதோடு அந்த அறை காற்றோட்டமுள்ளதும் இலையான்கள் அல்லது பிற பூச்சிகள், வண்டுகள் மற்றும் எலிகள் புகாதவாறு பாதுகாப்புடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.

18. பாற்பண்ணையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் பொருட்டு குறைந்தது பத்துப்பேருக்கு ஒன்றென்ற வகையில் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதுடன், பெண்கள் மற்றும் ஆண்களுக்கென வெவ்வேறாக மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும், அத்துடன் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும், அத்துடன் மலசலகூடங்கள் பாற்பண்ணையில் விலங்குகள் தங்கவைக்கப்பட்டிருக்கும் கட்டிடங்கள், பால்கறக்கும் இடங்கள் மற்றும் பாலைச் சேகரித்து வைக்கும் அறைகளிலிருந்து குறைந்தது 15 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

19. பாற்பண்ணையில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தப்படுத்தும் தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

20. பாற்பண்ணையின் உரிமம் பெற்றவர் ஒவ்வொருவரும், அவரது பெயரும் "உரிமம் பெற்ற பாற்பண்ணை" என்ற வசனத்தை மும்மொழிகளில் எழுதப்பட்ட பலகையொன்று உரிமப்பத்திரம் பெற்ற இடத்தில் வெளிப்படையாக காட்சிக்கு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

21. பாற்பண்ணையின் உரிமம் பெற்றவர் ஒவ்வொருவரும் வழங்கப்பட்ட உரிமப்பத்திரத்தின் பிரதியை உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் வெளிப்படையாக காட்சிக்கு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமொருவரால் நியாயமான எல்லா நேரங்களிலும் சோதனையிடக்கூடிய வகையில் பாற்பண்ணையில் எல்லா ஊழியர்களதும் பெயர், முகவரி பற்றிய நிரலொன்றை அவர் வைத்திருத்தல் வேண்டும்.

22. மேலே உள்ள துணைவிதிகளில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் பாலை கொள்வனவு செய்து விற்பனை செய்யுமிடத்து பால் விநியோகிப்போர்க்கும் உரிய மாதிரிப் படிவத்தில் பதிவு செய்யப்பட்ட அட்டைக்கு விண்ணப்பித்தலும் தொடர் இலக்கமிடப்பட்ட அட்டையை வருடாந்தம் பிரதேச சபைத் தவிசாளரிடமிருந்து பெற்றுக் கொள்வதும் பாற்பண்ணை நடாத்தும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாகும். மேற்படி அட்டையில் பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு பால் விநியோகிப்பவரின் பெயர், முகவரி, கொள்வனவு செய்யும் இடம் ஆகியன குறிப்பிடப்படுவதுடன் பால் விநியோகிப்போரின் புகைப்படப் பிரதி ஒன்றும் ஒட்டியிருத்தல் வேண்டும்.

23. பால் பண்ணையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல அங்காடி பால் வியாபாரிகளுக்கும் உரிய மாதிரிப்படிவத்தில் பதிவுசெய்யப்பட்ட அட்டைக்கு விண்ணப்பித்தலும் தொடர் இலக்கமிடப்பட்ட அட்டையை வருடாந்தம் பெற்றுக்கொள்வதும் பால் பண்ணையாளரின் பொறுப்பும் கடமையுமாகும். மேற்படி அட்டையில் பால்வியாபாரியின் பெயர், முகவரி, விற்பனைசெய்யும் இடங்கள் ஆகியன குறிப்பிடப்படுவதுடன் வியாபாரியின் புகைப்படப்பிரதி ஒன்றும் ஒட்டிஇருத்தல் வேண்டும்.

24. 22 ஆம் துணைவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் உரிமம் பெற்றுள்ள பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் அதன் அங்கத்தவர் களிடமிருந்து பாலை கொள்வனவு செய்து விற்பனை செய்யுமிடத்து கூட்டுறவுச் சங்கத்திற்கு பால் வழங்குபவர்களும் பண்ணையாளர்களாக கருதப்படுவார்கள். பால் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக பாலை மொத்தமாக கொள்வனவு செய்யும் தனியார் நிறுவனங்களும் அந் நிறுவனங்களுக்கு பாலை மொத்தமாக விற்பவர்களும் இத் துணைவிதிகளின் கீழ் பண்ணையாளர் களாக கருதப்படுவார்கள்.

நிறைவேற்றக் கூடாத பணிகள். (25 - 38)

25. பிரதேச சபைத் தவிசாளரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் பிரதேச சபை பிரதேசத்தினுள் பாற்பண்ணை ஒன்றை அல்லது பால் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்துதல் ஆகாது.

26. ( அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் எவ்வகையுமான கருமங்களில் அல்லது அத்தகைய கருமங்களில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

( ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந் தாலன்றி எந்தவொரு ஆளினாலும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

27. பால் கறப்பதற்கு, பாலைச் சேமித்து வைக்கும் மற்றும் பாலை எடுத்துச் செல்வதற்கு உபயோகிக்கப்படும் கொள்கலன்கள் மெருகிடப்பட்ட களிமண், கல்வனைஸ் பண்ணப்பட்ட இரும்பு அல்லது தகரம், எனாமல் முலாமிடப்பட்ட இரும்பு, மிருதுவாக்கப்பட்ட அலுமினியம், போத்தல் அல்லது போசிலெயின் போன்ற வகையான கொள்கலன்களை உபயோகிக்க வேண்டுமென்பதோடு, அவற்றை விலங்குகள் தங்கவைக்கப்பட்டிருக்கும் கட்டிடத்தினுள் களஞ்சியப்படுத்தி வைத்தல் ஆகாது.

28. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவிக்கப்படும் பாத்திரங்கள், அவற்றுக்குரிய கருமங்களைத் தவிர்ந்த வேறு கருமங்களுக்கு உபயோகித்தல் ஆகாது .

29. பால் கறத்தலை ஆரம்பிப்பதற்கு முன்னர் -

(i) எந்தவொரு கறவைப் பசுவினதும் மடிகளைச் சுத்தமான நீரினால் கழுவியிருந்தால்;

(ii) பால் கறப்பவர் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவத்தினால் கைகள் இரண்டையும் கழுவியிருந்தால் ;

(iii) இயந்திரங்கள் மூலம் பால் கறப்பதாயின் அந்த உபகரணங்கள் யாவும் கிருமி நீக்கம் செய்யப்பட்டிருந்தால் அன்றி பால் கறப்பதற்கு இடமளித்தல் ஆகாது.

30. பால் மடியில் அல்லது வேறு இடத்தில் உண்டாகும் காச நோய், பால் மடி, குளப்பு மற்றும் வாய் சார்ந்த நோய்கள், அன்திரெக்ஸ் நோய் அல்லது பால் மடியில் அன்னொமைகோசிஸ் நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது புருசெல்லோசிஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதென மிருக வைத்தியரால் தீர்மானிக்கப்பட்ட எந்தவொரு மிருகத்தினதும் பாலை விற்பதற்கு அல்லது விற்பதற்கு இடமளித்தல் அல்லது மனித பாவனைக்காக உள்ள வேறு ஏதேனும் விலங்குகளின் பாலில் கலத்தலோ அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தலோ எந்தவொரு ஆளினாலும் மேற்கொள்ளப்படல் ஆகாது.

31. பாலைக் களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் தயாரித்தல் கருமங்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு கருமத்திற்கும் பால் அறையை உபயோகித்தல் அல்லது உபயோகிக்க இடமளித்தல் ஆகாது.

32. எந்தவோர் ஆளினாலும் நீர் அல்லது வேறு புறப்பொருள் அல்லது பொருட்களைக் கலந்து பாலின் தரத்தைக் குறைத்தல் ஆகாது.

33. இப்பிரிவின் துணைவிதிக்கமைய அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எந்தவொரு இடத்திலும், எந்தவோர் ஆளும் நித்திரை செய்தல் ஆகாதென்பதோடு, பாற்பண்ணைச் செயற்பாடுகளுக்காக உபயோகிக்கப்படும் உபகரணங்கள் அல்லது பொருட்கள் தவிர்ந்த வேறு எந்தவிதமான பொருட்களையும் வைத்தல் அல்லது களஞ்சியப்படுத்துதல் ஆகாது. எனினும் பாற்பண்ணையில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேறாக ஒதுக்கப்பட்டுள்ள ஓய்வெடுக்கும் அறை அல்லது சாப்பாட்டறை இதில் உள்ளடங்காது.

34. பாற்பண்ணையின் செயற்பாடுகளுக்காக பாவிக்கப்படும் நீர் நிலத்துக்கடியிலுள்ள நீர்த் தொட்டியில் களஞ்சியப்படுத்துவதாயின் அவ்விடத்திலிருந்து 18 மீற்றருக்குக் குறைந்த தூரத்தில் குப்பைக் கிடங்கு, பசளைக் கிடங்கு அல்லது சாம்பல் கிடங்கு இருத்தல் ஆகாது.

35. ஏதேனும் பாற்பண்ணையில் பெறப்பட்ட பால், தூசி அல்லது வேறு கழிவுப் பொருட்கள் உட்புகாதவாறு நன்றாக மூடப்பட்ட பாத்திரங்களிலன்றி பாலை, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது.

36. பாற்பண்ணையொன்றின் உரிமம் பெற்றவர் எவரும், பாலுடன் நீரை அல்லது வேறேதேனும் பிற திரவத்தை அல்லது பதார்த்தத்தைச் சேர்ப்பதன் மூலம் அதனைக் கலப்படம் செய்தலோ அல்லது கலப்படம் செய்யப்பட்ட பாலை அவர் விற்றலோ, விற்க முனைதலோ வெளிக்காட்டி வைத்தலோ விற்பனைக்கென கூறி விற்றலோ அல்லது ஒப்படைத்தலோ ஆகாது.

37. (i) 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச்சட்டத்தின்கீழ் 1991.08.01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் (அதிவிசேடமானது) வெளியிடப்பட்ட கீழே அட்டவணை 01 இல் காட்டப்பட்டுள்ள பாலுக்கு தேவைப்படும் குறைந்தபட்ச சேர்மானப்பொருட்களை கொண்டிருக்காத தரக்குறைவான பால், பால்பொருட்கள் எதனையும் யாராயினும் உரிமம்பெற்றவர் வைத்திருத்தல் அல்லது விற்பனைசெய்தல் ஆகாது.

(ii) மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற பழுதடைந்த அல்லது கலப்படம் செய்யப்பட்ட முழு ஆடைப்பால் எதனையும் எவரும் வைத்திருத்தல், விற்பனை செய்தல் கூடாது.

38. பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் நடப்பு ஆண்டிற்காக வழங்கப்பட்ட அட்டை இருந்தாலன்றி எவரொருவரும் பாலைவிற்றல், இடத்துக்கு இடம் கொண்டுசெல்லல், விற்பதற்காக காட்சிப்படுத்தல் ஆகாது.

பிரதேச சபையின் பணி. (39 - 41)

39. பிரதேச சபைத் தவிசாளரால் அல்லது பிரதேச சபை செயலாளரால் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரால் ஏதேனும் பாற்பண்ணையில் பாலை அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாகும்.

40. இந்த துணைவிதியின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள பாற்பண்ணை, பால் விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்கு உத்தரவுப்பத்திரம் பெற்றவர் இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு பிரிவிற்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபைத் தவிசாளரால் அல்லது பிரதேச சபைச் செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இந்த உரிமப்பத்திர தாரரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

41. 23 ஆம் துணை விதிக்கு அமைவாக இப்பகுதியின் துணைவிதிகளின் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுமிடத்து பொருத்தமான அடையாள அட்டைகளை வழங்குதல் பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணியாகும்.

அறவீடுகளும் கட்டணங்களும்.

42. பாற்பண்ணையை நடாத்திச் செல்வதற்காக வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுக்கு அமைவாக உச்சக்கட்டணத்தை விஞ்சாத வகையில் அறவிடுவதற்கு பிரதேச சபைச் செயலாளருக்கு தத்துவமுண்டு.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

43. இத் துணைவிதியில் பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்ட பூர்வமானதாகும்.

உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.

44. இந்தத் துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப் பத்திரங்களும் முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

பரிசோதனை நடைமுறையும் தத்துவமும்.
(25-49)

45. சுகாதார வைத்திய அதிகாரியால் அல்லது கால்நடை வைத்தியரால் அல்லது பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரொருவராலும் அனுமதிப் பத்திரம் பெற்ற பாற்பண்ணை உரிமையாளர் அல்லது விற்கும், விற்பதற்காக இடத்திற்கிடம் கொண்டுசெல்லும் அல்லது விற்பதற்காக காட்சிப்படுத்தும் எவரிடமாவது எந்தவொரு நேரத்திலும் பரிசோதனை நோக்கத்திற்காக பால் மாதிரியொன்றைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தும் ஒரு பதிவுசெய்யப்பட்ட பால் பண்ணையாளர் அல்லது எவராவது ஒருவர் குற்றமிழைப்பவர் ஆவார்.

46. அங்காடி பால் வியாபாரிகளுக்கு வருடாந்தம் விநியோகிக்கப்படும் அடையாள அட்டையை பரீட்சிப்பதற்கு அதிகாரம்பெற்ற பிரதேச சபை உத்தியோகத்தருக்கு அல்லது பொலிஸ் உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு சமர்ப்பிக்கத் தவறுமிடத்து அவர் குற்றவாளி ஆவார். குறித்த உத்தியோகத்தர் அவரைக் கைதுசெய்து அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு உடன் கொண்டு செல்லல் வேண்டும். அவர் குற்றவியல் வழக்கொன்றின் சட்டவிதிகளின்படி அழைப்பாணை இன்றி பொலிஸ் உத்தியோகத்தரால் கைது செய்யப்பட்டவராக அந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் செயற்படல் வேண்டும். மேலே குறிப்பிட்ட அட்டையை இரத்துச்செய்தல் பொதுமக்களின் சுகாதாரம் பற்றி தேவையென பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தெரியவரின் அது எந்தச் சந்தர்ப்பமாயினும் அவ்வாறு இரத்துச் செய்யமுடியும்.

47. பால்மாதிரியை பெறுமிடத்து சுகாதார வைத்திய அதிகாரி அல்லது கால் நடை வைத்தியர் அல்லது அதிகாரம் பெற்ற பிரதேச சபை உத்தியோகத்தரால் மூன்று மாதிரிகளை பெற்றுக் கொள்ள வேண்டுவதுடன் அதைப் பெற்றுக் கொண்ட பதிவுசெய்யப்பட்ட பால் பண்ணையாளர் அல்லது உரிமப்பத்திரதாரர் முன்னிலையிலே அவற்றிற்கு முத்திரையிட்டு அவற்றில் ஒன்றை பால் பண்ணையாளருக்கு அல்லது உரிமப் பத்திரதாரருக்கு கொடுத்து இரண்டாவதை பிரதேச அல்லது அரச இரசாயன பரிசோதனயாளருக்கும் மூன்றாவதை பிரதேச சபை காரியாலயத்திற்கும் அனுப்புதல் வேண்டும். மாதிரியாக பெற்றுக்கொண்ட பால் தரம்குறைவாக இருந்ததென்பதற்கு பிரதேச சபை அல்லது அரச இரசாயன பரிசோதகரால் கையொப்ப மிடப்பட்ட தரச்சான்றிதழ் சான்றாகும்.

48. 40 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும்.ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குத் தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

49. 48 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறும் பட்சத்தில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அலுவலருக்கு சட்டரீதியான தத்துவம் உண்டு.

50. உரிமப்பத்திரதாரர் அல்லது யாராயினுமொருவர் எழுத்து மூலமான அல்லது வாய்மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ் அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு 14 நாட்களுக்குள் தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

51. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும்.

துணைவிதிகளை மீறுதல்.

52. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ( 2 ) ஆம் பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122( 2 ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

அபராதமும் தண்டனையும்.

பொருள்கோடலும் வரைவிலக்கணமும்.

53. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

"பிரதேச சபை செயலாளர்" என்பவர் ஏதேனும் பிரதேசம் தொடர்பிலாயின் இந்த பிரதேச சபைக்கு பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படுகின்ற அல்லது கூட்டிணைக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற பிரதேச சபையின் செயலாளர் எனப் பொருள்படும். இந்த பிரதேச சபையின் செயலாளராக செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளொருவரும் செயலாளரின் தத்துவங்களுள் அல்லது கடமைகளுள் எவற்றையேனும் புரிவதற்கு அல்லது அதன் கீழ் நிறைவேற்றுவதற்கு பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் தத்துவமளிக்கப்பட்டுள்ள எவரேனும் அலுவலர் ஒருவரும் இந்த அலுவலருக்கு அவ்வாறு தத்துவம் கையளிக்கப் பட்டுள்ள அளவும் இதில் உள்ளடங்கும்.

"பிரதேச சபை" என்பது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பவர் உரிய பணிக்கு பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட ஏற்புடைய பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

"உரிமப்பத்திரதாரர்" என்பவர் இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப் பட்டுள்ள நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

"உரிமப்பத்திரம் பெற்ற இடம்" என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளுக்குமாகப் பயன்படுத்தப்படுவதுமான இடம் அல்லது இடங்கள் எனப் பொருள்படும்.

"பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்" என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

"பாற்பண்ணை" என்பது, பாலைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பாலை விற்பனை செய்தல் போன்ற முக்கிய கருமங்களை மேற்கொள்வதற்காக ஒரே இன விலங்குகள் அல்லது பல்லின விலங்குகளைத் தங்க வைக்கும் கட்டிடங்களும் அதன் சுற்றாடலும் எனக் கருதப்படுவதோடு, அந்த விலங்குகளையும் உள்ளடக்கும்.

"பால் விற்பனை நிலையம்" என்பது பாலை கொள்வனவு செய்தலையும், கொள்வனவு செய்து விற்பனை செய்தலையும் நடாத்தும் நிலையம் எனக் கருதப்படும்.

"மிருக வைத்திய உத்தியோகத்தர்" என்பவர், பிரதேச சபை பிரதேசத்தை உள்ளடக்கிய பகுதிக்கு என நியமிக்கப்படும் அரச மிருக வைத்திய உத்தியோகத்தர் எனவும் கருதப்படும்.

"விலங்கு" என்பது, மாடு, எருமை மாடு, செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு போன்ற இனங்களைச் சேர்ந்த விலங்குகள் எனவும் கருதப்படும்.

54. இந்நியமத் துணைவிதியின் தமிழ், சிங்கள, ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.

**அட்டவணை 1 – பாலுக்குத் தேவைப்படும் சேர்வைப்பொருள்**

| நிரை I<br><br>**பாலின் இனம்** | நிரை II<br><br>**பால் வகை** | நிரை III<br><br>**பாற்கொழுப்பு ஆகக்குறைந்த நூற்றுவீதம்** | நிரை IV<br><br>**பாற்கொழுப்பு தவிர்ந்த பாற்திண்மங்களின் ஆகக் குறைந்த நூற்று வீதம்** |
|---|---|---|---|
| 1.எருமைப்பால் | பச்சை, பாசிச்சர் முறையில் காய்ச்சப்பட்டது அல்லது கிருமி நீக்கப்பட்டது. | 7.0 | 9.0 |
| 2. பசுப்பால் | மேற்படி | 3.5 | 8.5 |
| 3. தரப்படுத்தப் பட்டது | பாசிச்சர் முறையில் காய்ச்சப்பட்டது அல்லது கிருமி நீக்கப்பட்டது. | 3.25 | 8.25 |
| 4. தணிக்கப்பட்டது | மேற்படி | 2.0 | 8.5 |
| 5. சுவையூட்டப் பட்டது | மேற்படி | 2.0 | 7.2 |
| 6. ஆடை நீக்கியது அல்லது கொழுப்பற்றது | மேற்படி | - | 8.5 |

***இணைப்பு 01***

**பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பாற்பண்ணைகள், பால் விற்பனை நிலையங்களை நடாத்துவதற்கான வியாபார வரி / வியாபார உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் - 20** .........

1. பாற் பண்ணை/ பால்விற்பனை நிலையத்தின் பெயர்:...........................................

2. (i ) பாற் பண்ணை/ பால் விற்பனை நிலையம் அமைந்துள்ள இடம்:

வட்டாரம் ……..……..……..…….. ஆதன இல. …………..

(ii ) வீதியின் பெயர் :...............................................................................

(iii ) கிராம அலுவலர் பிரிவு இல. :………… …………பிரிவின் பெயர் : ……………………

3. விண்ணப்பதாரியின் விபரம் : ...................................................................

(i) முழுப்பெயர் : ...............................................................................

(ii) நிரந்தர முகவரி : ...........................................................................

(iii) கிராம அலுவலர் பிரிவு :.................................................................

(iv) தேசிய ஆள் அடையாள அட்டை இல :.....................................................

((v) தொலைபேசி இல. : ..........................................................................

(vi) மின்னஞ்சல் முகவரி : ....................................................................

4.(i ) பாற் பண்ணை/ பால் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்படும் திகதி :……………………

(ii ) பாற் பண்ணை/ பால் விற்பனை நிலைய முகாமையாளரின்/பிரதிநிதியின்

(a) பெயர் : ..........................................................................

(b) தொலைபேசி இல. :...........................................................................

5.கட்டடம் வாடகைக்கு பெறப்பட்டதாயின்

(i ) உரிமையாளரின்பெயர் : ..........................................................................

(ii ) முகவரி :..........................................................................

6.கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா ? : ஆம் :……………… இல்லை :…………………

ஆம் எனில் உரிம இல :…………………………… திகதி :…………………………………

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப்படுத்துகின்றேன். கைத்தொழிலை/ தொழிலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20………ஆண்டுக்கான கைத்தொழில்/தொழில் உரிமப்பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இது தொடர்பான சட்டவிதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

………….. ………………………………..

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

………………………………………………

பிரதேச சபை செயலாளர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

**சோலை வரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம் :…………………………………… ஆதன இல. :……………………………………

வீதியின் பெயர் : ………………………………………………………………………………

உரிமையாளரின் பெயர் : ……………………………………………………………………

ஆதன விபரம் : ………………………………………………………………………………

ஆண்டுப் பெறுமதி : …………………..………. வீதவரி நிலுவை…………..………………

உண்டு…….…………………இல்லை…..………

…………….. ………………………………..

திகதி நிர்வாக உத்தியோகத்தர்

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:……………………………………………………………………………………

செலுத்த வேண்டிய கட்டணம்:………………………………………………....... பிரிவு A B C

குறிப்பு…………………………………………………….

……………………. ………………………………………...

திகதி வருமானப் பரிசோதகர்

**பிரதம சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கை

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………

………..……………………. …………………………………………

திகதி பொதுச்சுகாதார பரிசோதகர்

**சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை**

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………

…………………… ……………………………………………

திகதி பிரதம சுகாதார வைத்திய அதிகாரி

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம் :………… உபயோகம் மற்றும் : ………… சுற்றுச் சூழல் உரிமம்:…………

MOH அறிக்கை :…………….குடிபுகு சான்றிதழ் :…………. மதுவரி உரிமம்:………………

விண்ணப்பம் சிபார்சு செய்யப்படுகின்றது/ பின்வரும் காரணங்களிற்காக சிபார்சு செய்யப்படவில்லை.

……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

……………………… ……………………………………

திகதி பிரதம வருமானப் பரிசோதகர்

**கணக்காளாரின் சிபாரிசு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபாரிசு செய்கிறேன்.

…………………. ………………………………………

திகதி கணக்காளர்

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/வழங்கப்படவில்லை.

……………… ………………………… ……………

திகதி பிரதேச சபை தவிசாளர்/பிரதேச சபை செயலாளர் /அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**நானாவித இறைவரிப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல. : ……………….………… பற்றுச் சீட்டு திகதி :…………………………

உரிம இல : ………………………………… உரிமத் திகதி : ………………..……..…..……

உரிமப்பத்திரம் வழங்க சிபார்சு செய்யப்படுகின்றது.

……………………………. …………………………………….

திகதி இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்

பிரதேச சபை செயலாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

……………………. …………………………………….

திகதி கணக்காளர்

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

………………………. ……………………..………………

திகதி பிரதேச சபைத் தலைவர்/நகரசபை செயலாளர் /அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

## பகுதி iv - பிரதேச சபையின் எல்லைக்குள் அந்தியகால சேவைநிலையங்கள் நடாத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள்

1. பிரதேச சபையின் எல்லைக்குள் அந்தியகால சேவை நிலையங்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணைவிதிகள் என அழைக்கப்படலாம். துணைவிதியின் பெயர்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. நோக்கம்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ( 1 ) ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும் 126 (ix) (ஓ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. துணைவிதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

4. இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டு இருந்தால் மட்டுமே எந்தவொரு அந்தியகால சேவை நிலையத்தை நடாத்துவதற்கு பிரதேச சபைத் தவிசாளரால் அல்லது பிரதேச சபைச் செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உரிமப்பத்திரம் வழங்கப்படல்வேண்டும். நிறைவேற்ற வேண்டிய பணிகள். (4 -19)

   (i) அந்தியகால சேவை நிலையமொன்று நடாத்தப்பட்டுவரும் கட்டிடத்தின் உள்ளே பூதவுடல்களைத் தயார் செய்வதன் பொருட்டு தனிவேறான அறையொன்று இருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய அறையானது ஒரு ஆளின் பூதவுடலைத் தயார் செய்வதற்கு குறைந்தபட்சம் 80 சதுர அடிகளுக்குக் குறையாத இடவசதி இருத்தலும் வேண்டும். அத்துடன் அக்கருமத்திற்காகப் பயன்படுத்த போதியளவு கொங்கிறீற் மேடையொன்று இருக்க வேண்டுமென்ப தோடு, அது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

.

(ii) மரணச்சடங்கு சேவைகள் வழங்கும் நிலையத்தில் பூதவுடலைத் தயார் செய்யும் அறைக்கு வெளி ஆட்கள் உத்தரவின்றி உட்பிரவேசிப்பது தடை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) பூதவுடலைத் தயார் செய்யும் அறையின் உள்ளே சுத்தமான காற்றோட்டம் கிடைக்கக்கூடிய வகையில் பாவிக்கும் அறையின் பரப்பளவின் ஏழிலொரு (1/7) பங்குக்குக் குறையாத பரப்பளவைக் கொண்ட ஜன்னல்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கருமத்தில் ஈடுபட்டிருப்பதை எந்தவொரு பிறஆளும் பார்க்க முடியாதவாறு இருத்தல் வேண்டும். அத்தகைய ஜன்னல்கள் மரணச் சடங்கு சேவை நிலையம் அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையில் உள்ள காணிகளில் உள்ள வீடுகளுக்கு நேரடியாக பார்க்க முடியாதவாறு இருத்தல் வேண்டும்.

(iv) பூதவுடலைத் தயார் செய்யும் போது அகற்றப்படும் பூதவுடலின் பாகங்கள் தற்காலிகமாகப் போடுவதற்கு போதியளவு பாத்திரங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கருமத்தில் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பத்தில் பூதவுடலிலிருந்து வெளியாகும் இரத்தம் அல்லது வேறு ஏதேனும் நீர்ப்பதார்த்தங்கள் அல்லது பூதவுடலைக் கழுவுவதாயின் அத்தகைய கழிவுநீர் போன்றவற்றைச் சேகரிப்பற்கு ஊடறுக்க முடியாததும், இலையான்கள், எலிகள், ஏனைய பிராணிகள் உட்பிரவேசிக்க முடியாததுமான, நன்றாக மூடிவைக்கக்கூடிய பாத்திரங்கள் இருத்தல் வேண்டும்.

(v) உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பொதுமக்கள் மரியாதை செலுத்தும் பொருட்டு பூதவுடலை வைப்பதற்கு இடமளிக்கப் படுவதாயின், ஏதேனும் பூதவுடலுக்கு மரியாதை செலுத்துவதற்கு வருகை தருபவர்களின் வசதி கருதி போதுமானளவு கதிரைகளை வைப்பதற்கும் அவ்வாறு வருகை தருவோரின் வாகனங்களை நிறுத்திவைப்பதற்கு போதுமானளவு இடவசதியும் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) மரியாதை செலுத்துவதற்காக பூதவுடல் வைக்கப்பட்டுள்ள இடம், அந்த மரணச்சடங்கு சேவை நிலையத்தின் காட்சி மண்டபத்திலிருந்தும் சடலம் தயார் செய்யும் அறையிலிருந்தும் தனிவேறாகப் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(vii ) இப்பிரிவின் துணைவிதிகளின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரித்துக் கொள்ளப்பட்ட பதிவேடொன்று இருத்தல் வேண்டும்.

5. மரணச்சடங்கு சேவை நிலையமொன்றுக்கு உரிமப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் தேவையுள்ள எந்தவொரு ஆளும் இப்பிரிவின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரமொன்றை பிரதேச சபைத் தவிசாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. பூதவுடலைத் தயார் செய்யும் போது அகற்றப்படுகின்ற அல்லது அகற்றப்படும் பூதவுடலின் பாகங்கள், நீதிவான் அல்லது திடீர் மரண விசாரணை அதிகாரியால் அது சம்பந்தமாக வழங்கப்பட்ட பணிப்புரை ஒன்றில்லையேல், அத்தகைய பாகங்கள் அக்கருமம் முடிவடைந்து ஆறு மணித்தியாலங்கள் கழிந்த பின்னர் நிலத்தின் மேலிருந்து நான்கு அடி ஆழமான கிடங்கில் புதைத்து நன்றாக மூடப்படல் வேண்டும்.

7. பூதவுடலைத் தயார் செய்யும் போது அகற்றப்படுகின்ற அல்லது அகற்றப்படும் பூதவுடலின் பாகங்கள், நீதிவான் அல்லது திடீர் மரண விசாரணை அதிகாரியால் அது சம்பந்தமாக வழங்கப்பட்ட பணிப்புரை ஒன்று இருப்பின், அப்பணிப்புரைக்கு இணங்க செயற்படல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

8. 6 ஆவது துணைவிதியின் கருமங்களுக்காகப் போதியளவு இடவசதி, மரணச் சடங்கு சேவை நிலையத்திற்கு இல்லாத பட்சத்தில், சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் கட்டணத்தை செலுத்திய பின்னர் அத்தகைய கருமங்களை பிரதேச சபையின் பொதுமயான பூமியில் அத்துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள ஆழத்தில் புதைத்து மூடிவிடுதல் வேண்டும்.

9. பூதவுடலைத் தயார் செய்யும் அறை எப்பொழுதும் கிருமி நாசினிகள் பாவித்து கழுவிச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். அதேபோன்று அவசிய சந்தர்ப்பத்தில் பணியாட் தொகுதியின் பாவனைக்காகப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு அத்தகைய நிலையத்தில் போதியளவு முதலுதவி மற்றும் வேறு அவசிய உபகரணங்கள் இருத்தல் வேண்டும்.

10. மரணச்சடங்கு சேவைகள் வழங்கும் நிலையத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள பணியாட் தொகுதி உறுப்பினர்கள் பற்றிய அறிக்கையைப் பேணுதல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

11. பூதவுடலைத் தயார் செய்யப்படும் அறைகளில், கடமையில் ஈடுபட்டுள்ள சகல ஊழியர்களுக்கும் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் சிபார்சு செய்யப்பட்டவாறு பாதுகாப்பான உடைகள், முகக்கவசம் மற்றும் கைக்கவசம் வழங்கப்படுதலும், பூதவுடலைத் தயார்செய்யும் போது அத்தகைய ஊழியர் அந்த உடைகளையும் அணிகளையும் அணிந்து ஏற்புடைய பணியில் ஈடுபடுவதை உறுதிசெய்து கொள்ளல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களையும் குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியமை அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

13. பூதவுடலை எடுத்துச் செல்லும் வாகனம் அல்லது வாகனத்துள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒருதடவையாவது தூசி உறிஞ்சி ( vacuum cleaner ) மூலமாக சுத்தம் செய்து கிருமி நாசினி இடுதல் வேண்டும்.

14. நீதிவான் அல்லது திடீர் மரண விசாரணை அதிகாரியால் நடத்தப்பட்ட திடீர் மரண விசாரணையின் பின்னர் வழங்கப்படும் அறிக்கையின் மூலம் அத்தகைய பூதவுடலின் இறுதிக் சடங்குகள் தொடர்பாக வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரை இருப்பின் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அத்தகைய பணிப்புரையின் ஏற்பாடுகள் கடை பிடிக்கப்படல் வேண்டும்.

15. பொதுமக்களின் மரியாதைக்காக பூதவுடல் வைக்கும் சேவையைப் பேணிவரும் இடம் தொடர்பில் அத்தகைய இடத்தில் வைக்கப்படும் ஏதேனும் பூதவுடலுக்கும் அத்தகைய பூதவுடலின் உரிமையாளர்களுக்கும் உரிய மரியாதை கிடைக்கக்கூடிய வகையில் பூதவுடல் காட்சிக்கு வைக்கப்படல் வேண்டும்.

16. பொதுமக்கள் மரியாதைக்காக பூதவுடலை வைக்கப்படும் இடம் சுத்தமாகவும் சுகாதாரப் பாதுகாப்புடனும் பேணுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

17. (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகல விதமான கழிவுப்பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப்பொருட்கள்-

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;

(ii) கண்ணாடிப் பொருட்கள் ;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப்பாகங்கள்;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள்;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்;

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப்பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான மூடிவைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடுவது அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

(ஆ) - (அ) பிரிவின் (i) உபபிரிவில்இருந்து (vii) உப பிரிவு வரை கழிவுப் பொருட்கள் என்பது, ஏதேனும் பூதவுடலின் பாகங்கள் உள்ளடக்கலாகா தென்பதோடு, பூதவுடலிலிருந்து அகற்றப்பட்ட ஏதேனும் பூதவுடலின் பாகம் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு 6 ஆவது துணைவிதி அல்லது 7 ஆவது துணைவிதியில் குறிப்பிட்டுள்ளவாறு அப்புறப் படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

(இ) - மேலே (அ) பிரிவில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடப்பட்ட கழிவுப்பொருட்கள், பிரதேச சபை கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ வேலைத் திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்து வதாயினன்றி பிரதேச சபை தவிசாளரின் அல்லது பிரதேச சபைச் செயலாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பணிப்பிற்கமைய இறுதியான அப்புறப் படுத்துகை இடம் பெறல் வேண்டும்.

18. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசீலனை செய்வதற்கு பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது பிரதேச சபைச் செயலாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அலுவலருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமாகவும் கருதப்படும்.

19. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அல்லது வேறு வெளியிடத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து சடலங்களின் தயாரிப்பு வேலை மற்றும் மரணச்சடங்கு சேவைகளை வழங்குதல் தொடர்பாக இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரித்துக் கொள்ளப்பட்ட பதிவேடொன்றைப் பேணுதலும் அத்தகைய பதிவேடு பிரதேச சபைத் தவிசாளரினாலோ பிரதேச சபைச் செயலாளரினாலோ அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரினாலோ அல்லது எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தராலோ வேண்டப்படும் போது பரிசீலனைக்காகச் சமர்ப்பித்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

நிறைவேற்றக் கூடாத பணிகள். (20 - 26)

20. பிரதேச சபைத் தவிசாளரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் பிரதேச சபைப் பிரதேசத்தினுள் அந்தியகால சேவை நிலையம் ஒன்றை நடாத்துதல் ஆகாது.

21. அதிக காயங்கள் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக தயார் செய்ய முடியாத நிலையிலுள்ள பூதவுடல்கள் தவிர்ந்த ஏனைய பூதவுடல்களை வைக்கும் பிரேதப்பெட்டிக்கு உள்ளே அல்லது பூதவுடல் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை மூடுவதற்காக பொலித்தீன் அல்லது உக்கிப்போகாத வேறு ஏதேனும் பொருளைப் பாவித்தல் ஆகாது.

22. அனைத்து அனுமதிப்பத்திரம் பெறுநரால் முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட ஆள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளினால் ஏதேனும் பூதவுடலைத் தயார் செய்யவோ அல்லது பூதவுடலை எடுத்துச் செல்லவோ இடமளித்தல் ஆகாது.

23. பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் பணிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைய அவரால் அதற்காக அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்கப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றி வாந்திபேதி, டெங்கு, அம்மை, பெரியம்மை, கொள்ளைநோய்,மஞ்சட்காய்ச்சல் மற்றும் எயிட்ஸ் நோயினால் மரணமடைந்ததாகக் கருதப்படும் எவரேனும் ஆளின் பூதவுடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திற்கு எடுத்து வருதல் அல்லது எடுத்துவருவதற்கு இடமளித்தல் எந்தவொரு ஆளினாலும் மேற்கொள்ளப்படல் ஆகாது.

24. ஏதேனும் பூதவுடலைத் தயார் செய்வதற்கும், மரணச்சடங்கு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதற்குமென பொறுப்பேற்பதற்கு முன்னர் அத்தகைய மரணம் சம்பந்தப்பட்ட மரணப் பதிவாளரினால் வழங்கப்பட்ட முறையான மரண சான்றிதழ் தமக்கு சமர்ப்பிக்கப்பட்டாலன்றி அத்தகைய கருமத்திற்காக அனுமதிப்பத்திரம் பெறுநர் பூதவுடலைப் பொறுப்பேற்றல் ஆகாது.

25. ஏதேனும் பூதவுடலுக்கு ஏற்புடைய மரணம் திடீர் மரணமெனின் அல்லது மரணம் சந்தேகத்திற்கிடமானதெனின் நீதிவான் அல்லது திடீர் மரண விசாரணை அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட திடீர் மரண விசாரணையின் பின்னர் வழங்கப்படும் அறிக்கை தமக்கு சமர்ப்பிக்கப்பட்டாலன்றி அத்தகைய பூதவுடலைப் தயார் செய்தலோ அல்லது தயார்செய்வதற்காக பொறுப் பேற்றலோ எந்தவொரு ஆளினாலும் மேற்கொள்ளப்படல் ஆகாது.

26. மரணச்சடங்கு சேவை வழங்கும் இடத்திற்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு இடையூறாக அல்லது தொல்லை கொடுக்கும் வகையில் எந்தவொரு கருமத்தையும் மரணச்சடங்கு சேவைகளை வழங்கும் இடத்தின் சுற்றாடலில் புரிதலோ அல்லது அவ்வாறு புரிவதற்கு இடமளித்தலோ எவரேனும் ஆளினால் மேற்கொள்ளப்படல் ஆகாது.

27. இந்த துணைவிதியின் கீழ் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள அந்தியகால சேவை ஒன்று நடாத்திச் செல்லப்படுகின்ற இடமானது இப்பகுதியின் 4 ஆம் துணை விதியின் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நியதிகளுக்கும் ஏற்புடையவாறு பேணப்படுவது நிறைவடையாவிடத்து அல்லது இந்த துணைவிதிகளில் பிற ஏதேனும் ஒரு துணைவிதியின் நியதிகளுக்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப் பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சபை செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இந்த உரிமப்பத்திரதாரரிடம் கையளித்தல் வேண்டும்.

பிரதேச சபையின் பணி.

28. அந்தியகால சேவைக்கான வருடாந்த உரிமப்பத்திர கட்டணத்தை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுக்கு அமைவாக உச்ச கட்டணத்தை விஞ்சாத வகையில் அறவிடுவதற்கு பிரதேச சபைச் செயலாளருக்கு தத்துவமுண்டு

அறவீடுகளும் கட்டணங்களும்.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

29. இத்துணைவிதியில் பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபைச் செயலாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.

30. இந்த துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

பரிசோதனை நடைமுறையும், தத்துவமும்.

(31-32)

31. இத் துணைவிதிகளின் 27 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபைச் செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குத் தத்துவம் உண்டு. எவ்வாறாயினும், இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்

32. இப்பகுதியின் 31 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறும் பட்சத்தில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சட்ட ரீதியான தத்துவம் உண்டு .

முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

33. உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபையின் செயலாளரிற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிற்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ் அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு 14 நாட்களுக்குள் தீர்வு வழங்கப்படல்வேண்டும்.

34. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும்.

துணைவிதிகளை மீறுதல்.

35. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ( 2 ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122( 2 ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

அபராதமும் தண்டனையும்.

36. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

பொருள்கோடலும் வரைவிலக்கணமும்.

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

"பிரதேச சபையின் செயலாளர்" என்பவர் ஏதேனும் பிரதேசம் தொடர்பிலாயின் அந்த பிரதேச சபைக்கு பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படுகின்ற அல்லது கூட்டிணைக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற பிரதேச சபையின் செயலாளர் எனப் பொருள்படும். இந்த பிரதேச சபையின் செயலாளராக செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளொருவரும் செயலாளரின் தத்துவங்களுள் அல்லது கடமைகளுள் எவற்றையேனும் புரிவதற்கு அல்லது அதன் கீழ் நிறைவேற்றுவதற்கு பிரதேச சபைகள் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் தத்துவமளிக்கப்பட்டுள்ள எவரேனும் அலுவலர் ஒருவரும் இந்த அலுவலருக்கு அவ்வாறு தத்துவம் அளிக்கப்பட்டுள்ள அளவும் இதில் உள்ளடங்கும்.

"பிரதேச சபை" என்பது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

“அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்” என்பவர் உரிய பணிக்கு பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட ஏற்புடைய பிரதேச சபை சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

"உரிமப்பத்திரதாரர்" என்பவர் இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப் பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவர் எனவும் பொருள்படும்.

"உரிமப்பத்திரம் பெற்ற இடம்" என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் இந்தத் துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளுக்குமாகப் பயன்படுத்தப் படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

“பரிசோதனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரியகாலம்” என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

“மரணச்சடங்கு சேவைகள் நிலையம்” என்பது, ஏதேனும் பூதவுடலை நீண்டகாலம் பழுதடையாது வைப்பதன் பொருட்டு தயார்செய்யப்படும் அல்லது பூதவுடலின் இறுதிச்சடங்கு நடவடிக்கைகளுக்காக தயாரிக்கப்படும் அல்லது இறுதிச்சடங்கு நடவடிக்கைகளுக்காக மயானத்திற்கு எடுத்துச்செல்லும் வரை ஏதேனும் பணத்தை அறவிட்டு பொதுமக்களின் மரியாதைக்காக வைக்கப்படும் இடமும் எனக் கருதப்படும்.

“பூதவுடலைத் தயார் செய்தல்” என்பது, மரணமடைந்த ஒருவரின் பூதவுடலை இறுதி மரியாதைக்காக நீண்டகாலம் பழுதடையாதவாறு தயாரித்தல், அத்தகைய பூதவுடலுக்கு உடை அணிவித்தல், பூதவுடலை ஏதேனும் பெட்டியில் வைத்தல் மற்றும் அத்தகைய கருமங்களுக்கு அவசியமான வேறு எந்தவொரு கருமத்தைச் செய்தலும் எனக் கருதப்படும்.

“பூதவுடலின் பாகங்கள்” என்பது, மரணமடைந்த ஆளொருவரின் பூதவுடலிலிருந்து அப்புறப்படுத்தப்படும் ஏதேனும் உடலின் பகுதிகள் அல்லது அவற்றின் ஒரு பகுதி அல்லது உள்ளக பாகம் அல்லது பூதவுடலிலிருந்து வெளியாகும் அல்லது வெளியேற்றப்படும் இரத்தம் அல்லது வேறு ஏதேனும் நீர்ப்பதார்த்தம் அல்லது இறந்தவர் அச்சந்தர்ப்பத்தில் அணிந்திருந்த ஏதேனும் உடை அல்லது உடைகள் அல்லது இறந்தவரின் உடலில் இருந்த ஏதேனும் காயத்தில் அல்லது வேறு காரணமாக அவரின் உடலின் உள்ளே இருந்த அல்லது இருக்கின்ற கட்டுத்துணிகள், பஞ்சு அல்லது வேறு ஏதேனும் பொருளும் எனக் கருதப்படும்.

ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.

37. இந்நியமத் துணைவிதியின் தமிழ். சிங்கள, ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## முதலாவது அட்டவணை

## மரணச்சடங்கு சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் பெயர் :........................................................................................
2. முகவரி :..........................................................................................................................
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :.................................................................................
4. மரணச்சடங்கு சேவைகள் நிலையத்தின் வர்த்தகப் பெயரும் அத்தகைய இடத்தின் முகவரியும் :.........................................................................................................................
5. ஒரே தடவையில் தயார் செய்யும் பொருட்டு வைக்கக்கூடிய பூதவுடல்களின் எண்ணிக்கை :..........
6. நிறுவனத்திற்குச் சொந்தமாகவுள்ள பிரேத வண்டிகள் :........................................................
7. பூதவுடலைத் தயார்செய்யும் முன்னர் எடுத்துச்செல்வதற்கு ஈடுபடுத்தவுள்ள வாகனங்களின் எண்ணிக்கை : ........
8. அகற்றப்பட்ட பூதவுடலின் பாகங்களை அப்புறப்படுத்துகின்ற விதம் :................................
9. மரியாதை செலுத்துவதற்காக பூதவுடலை வைப்பதற்கு பொறுப்பேற்பதாயின் :
   (i ) ஒரே தடவையில் வைக்கக்கூடிய பூதவுடல்களின் எண்ணிக்கை :......................
   (ii ) மரியாதை செலுத்துவதற்கு வருகை தருபவர்களின் எத்தனை வாகனங்கள் ஒரே தடவையில் நிறுத்த முடியும்?......................
10. இயற்கையான மலர்கள் வைத்தல் மற்றும் விற்பனை செய்யப்படுகிறதா? ஆம்/இல்லை
11. அகற்றப்படும் இயற்கை மலர்கள் அல்லது தாவரப் பாகங்களை அப்புறப்படுத்த எதிர்பார்க்கும் விதம் ..........................................................................................
12. நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை :.............................
13. முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பின்:
    (i ) பெயர் :...................................................................................................
    (ii ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :..........................................................

மரணச்சடங்கு சேவைகள் நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்பாடு பற்றிய துணைவிதிகளின் ஏற்பாடுகளை அவ்வாறே கடைப்பிடிப்பதற்கும், காலத்திற்குக் காலம் பிரதேச சபையினால் பணிக்கப்படும் வேறு சுகாதார பிரமாணங்களை கடைப்பிடிப்பதற்கும் இணங்குவதாக இங்கு கீழே கையொப்ப மிட்டு ஏற்றுக்கொள்கிறேன்.

....................................................

திகதி :...................... விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**இரண்டாவது அட்டவணை**

**மரணச்சடங்கு சேவை நிலையங்கள் அல்லது வேறு ஏதேனும் வெளி இடத்தில் தயார் செய்யப்படும் பூதவுடல்கள் பற்றிய விபரங்களின் பதிவேடு**

மரணச் சடங்கு சேவைகளை வழங்கும் நிறுவனத்தின் பெயர்:...................................................

முகவரி :...........................................................................................................................

| தொடர் இல. | மரணமடைந்தவரின் பெயர் | தே. அ. அ. இல. | ஆண் / பெண் பால் நிலை | மரணமடைந்த திகதி | மரணச் சான்றிதழ் பதிவு | | பூதவுடல் பொறுப்பேற்ற | | பூதவுடலின் உறவினர் | | | | திடீர் மரண பரிசோதகரின் கட்டளை | | உறவினர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இலக்கம் | திகதி | திகதி | நேரம் | பெயர் | இறந்தவருக்கு உள்ள உறவு முறை | முகவரி | தே. அ. அ. இல. | தொடர்பு இல. | திகதி | |
| 1 | | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | | | | |

## பகுதி V - பிரதேச சபையின் எல்லைக்குள் தொழிற்சாலைகளையும் கைத்தொழிற்சாலைகளையும் முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத்துணை விதிகள்

1. பிரதேச சபையின் எல்லைக்குள் தொழிற்சாலைகளையும் கைத் தொழிற்சாலை களையும் முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியமத் துணை விதிகள் என அழைக்கப்படலாம். துணைவிதியின் பெயர்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைவாக பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் சுகாதாரத்தை பேணிப் பாதுகாத்தலும், தொல்லைகளை அடக்குதலும் கைத்தொழிற் கழிவுகளை ஒழுங்குபடுத்தல் கட்டுப்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக இத்துணைவிதிகள் ஆக்கப்படுகின்றன. நோக்கம்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1)ம் பிரிவுடன் வாசிக்கப்படும் 126(ix )(ந) மற்றும் (ப) உபபிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இத்துணைவிதிகள் ஆக்கப்படுகின்றன. துணைவிதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

4. இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டு இருந்தால் மட்டுமே எந்தவொரு தொழிற்சாலையையும் கைத்தொழிற்சாலையையும் கொண்டு நடாத்துவதற்கு பிரதேச சபைத் தவிசாளரால் அல்லது பிரதேச சபைச் செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் உரிமப்பத்திரம் வழங்கப்படல் வேண்டும். நிறைவேற்ற வேண்டிய பணிகள். (4 -10)

(i)இடம் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

(ii) தொழிற்சாலையின் கட்டடங்கள் அனைத்தும் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் கொண்டதாகப் பேணப்படுதல் வேண்டும். சகல அறைகளுக்கு திறந்து வைக்கப்படக்கூடியதாக ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு அறைகளினதும் யன்னல்களைத் திறக்கும்போது அத்தகைய ஜன்னல்களின் பரப்பளவு அறையின் தரையின் பரப்பளவின் பதினைந்தில் ஒரு பங்குக்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஆயினும் தொழிற்சாலையின் உற்பத்தித் தொழிற்பாடுகள் மூடப்பட்ட கட்டிடத்தில் கொண்டு நடாத்தப்படவேண்டிய தொழிற்சாலைகள் அல்லது தொழிற்சாலைக் கட்டிடம் எயர்கொண்டிஷன் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்திலும் இப்பிரமாணம் ஏற்புடையதாகாது எனக் கருதப்படல் வேண்டும்.

(iii) சகல அறைகளினதும் சுவர்களின் குறைந்த பட்ச உயரம் 2.14 மீற்றருக்குக் குறையாதிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்டிருப்பின் சீமெந்துச் சாந்து பூசப்பட்டு உட்பக்கம் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தலும் வேண்டும். அவ்வாறில்லையேல், அலுமீனியம் அல்லது வேறு உலோகப் பொருளுடன் மரப்பலகை சேர்த்து முடிவுறுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் மரப்பலகையின் மீது வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv ) இடத்திலுள்ள அனைத்து அறைகளுக்கும் உட்கூரைகள் அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய உட்கூரைகள் நிலத்திலிருந்து குறைந்த பட்சம் 2 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(v) கூரைக்கு உபயோகிக்கப்பட்ட இரும்பு, ஏனைய உருக்கு அல்லது மரத்தின் மீது எண்ணெய்ச் சாயம் அல்லது வர்ணப்பூச்சுப் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) தரை சீமெந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(vii) தொழிற்சாலையில் கடமையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் பாவனைக்காகக் குறைந்தது பத்துப் பேருக்கு ஒன்று என்ற வீதம் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனிவேறாகவும் போதுமானளவு மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும்.

(viii) பிரதேச சுகாதார சேவைகள் வைத்திய அதிகாரியால் சிபாரிசு செய்யப்பட்ட நியமங் களுக்கமைய நீர் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ix) உற்பத்தி நடவடிக்கைக்காக உபயோகிக்கப்பட்ட பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் சுத்திகரிப்புக்கு உட்படுத்த இயலாத சந்தர்ப்பத்தில் அத்தகைய கழிவு நீர், பிரதேச சுகாதார பணிப்பாளரால் அல்லது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவரால் சிபாரிசு செய்யப்பட்டவாறு உறிஞ்சியிழுக்கும் கிடங்கில் பாய்ந்து செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறே அத்தகைய உறிஞ்சியிழுக்கும் கிடங்கு காற்றோட்டத்தில் கலக்காதிருத்தல் வேண்டு மென்பதோடு, அருகாமையிலுள்ள பொது நீர் வழியிலிருந்தும் கட்டப்பட்டுள்ள கிணற்றிலிருந்தும் ஐம்பது மீற்றருக்குக் குறையாத தொலைவில் அமைதல் வேண்டும்.

(x) தொழிற்சாலைக்காகப் பாவிக்கப்படும் கட்டிடத்தின் உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்பு கருதி போதியளவு தீயணைப்பு நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xi ) தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக உபயோகிக்கப்படும் அறைகளிலிருந்தும், ஊழியர்களின் குளியல் அறைகளிலிருந்தும் வெளியேற்றப் படும் கழிவு நீர் தடையின்றிப் பாய்ந்து செல்வதற்குப் போதிய அளவு வடிகான் நடை முறைகள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xii) உற்பத்திக்காகப் பாவிக்கப்படும் மூலப் பொருட்கள், ஏனைய இரசாயனப் பொருட்கள், ஏதேனும் உற்பத்தியின் பொருட்டு பொதியிடுவதற்காக உபயோகிக்கும் போத்தல்கள் அல்லது வேறு ஏதேனும் பொதியிடும் பொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக குறைந்த பட்சம் ஒரு அறையாவது தனிவேறாக வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்தோடு, அத்தகைய அறை எலிகள், பூச்சிகள் மற்றும் பிற பிராணிகள் உட்புகாதவாறு பேணுவதற்கு போதிய அளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(xiii) தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகள் மனித நுகர்வுக்கு அல்லது விலங்குகளின் நுகர்வுக்கான உணவு அல்லது பான வகையாகும்போது அவற்றுக்காக பாவிக்கப்படும் நீர் மனித நுகர்வுக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச்சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, குறைந்தபட்சம் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் இத்தரச்சான்றிதழ் பெறப்படல் வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீரைப் பயன்படுத்துவதாயின் அத்தகைய தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

(xiv) தொழிற்சாலையின் பாவனைக்காக நீரைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடைவதையும் நுளம்பு மற்றும் வேறேதும் பரவுதலைத் தடுக்கும் பொருட்டு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய நீரை நிலத்திற்கடியில் நீர்த்தொட்டியில் களஞ்சியப்படுத்தும் சந்தர்ப்பத்தில் தொழிற்சாலையில் அமைக்கப்படும் கழிவுப் பொருட் கிடங்கு அல்லது பசளைக் கிடங்கு அல்லது சாம்பல் கிடங்கு என்பன நீரை நிலத்திற்கடியில் நீர்த்தொட்டியில் களஞ்சியப்படுத்தும் இடத்திலிருந்து 18 மீற்றருக்கு அப்பாலே அமைதல் வேண்டும்.

(xv) முன்னர் பாவித்த பொதிகளைக் கழுவுவதற்காக உபயோகிக்கும் இடம் தொழிற்சாலையின் உற்பத்திக் கருமங்கள் இடம்பெறுகின்ற அறைகளிலிருந்து தனிவேறான இடத்தில் இருத்தல் வேண்டுமென்பதோடு, மேலே (xiii ) ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு தரச்சான்றிதழ் வழங்கப்பட்ட நீரை மாத்திரமே உபயோகித்தல் வேண்டும்.

(xvi) தொழிற்சாலையின் கருமங்களின் காரணமாக பிறப்பிக்கப்படும் கழிவுப் பொருட்கள் 10 ஆவது துணைவிதியில் குறிப்பிட்டுள்ளவாறு வகைப்படுத்தி அப்புறப்படுத்தற்கேதுவாக ஒதுக்கப்பட்ட பாத்திரங்கள் அல்லது தொட்டிகள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. தொழிற்சாலை பேணிவரப்படும் இடத்தில் சகல பகுதிகளும் முட்புதர்கள் அல்லது செடிகொடிகள் இன்றியும் நுளம்புகள் அல்லது வேறு ஏதேனும் பரவாதவாறும் நீர்தேங்கி நிற்பதைத் தடுத்துக் கொள்வதும் உரிமப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

6. 4 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென பணிக்கப்பட்டுள்ள பாகங்களுக்கும் குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

7. தொழிற்சாலையின், கைத் தொழிற்சாலையின் அனைத்து அறைகள் அத்துடன் அவற்றின் சுற்றாடல் வடிகான்கள், மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவை நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

8. உற்பத்திப் பொருட்களைப் பொதியிடப் பாவிக்கப்பட்ட பொருட்களைச் சுத்தம் செய்து மீண்டும் பாவித்து உற்பத்திகளை பொதி செய்வதற்காக அத்தகைய பொருட்களை உபயோகிக்கும் ஏதேனும் தொழிற்சாலையில், கைத்தொழிற் சாலையில் அத்தகைய பாவிக்கப்பட்ட பொருட்களை சுத்தம் செய்கையில்-

(அ) அத்தகைய பொதியிடும் பொருட்களில் முன்னர் ஒட்டப்பட்டிருந்த லேபிள்களை அகற்றுவதற்கு முதற் சுற்றில் சுத்தம் செய்வதற்காக தொட்டி யொன்றும்;

அத்துடன்

(ஆ) அத்தகைய பொதியிடும் பொருட்கள் இறுதிச் சுற்றில் சுத்தம் செய்வதற்கு பிறிதொரு தொட்டியும் என்றவாறு குறைந்த பட்சம் இரண்டு தொட்டிகள் பாவிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய இறுதிச் சுத்திகரிப்பு ஓடும் நீரில் கழுவப்படுதல் வேண்டுமென்பதை கருத்திற்கொள்ளல் வேண்டும்.

9. தொழிற்சாலையில், கைத்தொழிற்சாலையில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக்கவசம் மற்றும் தேவைப்படும் வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ் ஊழியர்கள் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதிசெய்து கொள்ளலும் உரிமப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

10. (i) உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் உருவாக்கப்படுகின்ற சகல கழிவுப் பொருட்களும் மீள்சுழற்சிக்குட்படுமாயின் அவற்றை பின்வரும் வகைகளுக்கமைவாக வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(அ) உக்கக்கூடிய கழிவுப்பொருட்கள்

(ஆ) கண்ணாடி

(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்

(ஈ) பொலித்தீன், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சார்ந்த பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக வகைகளைச் சார்ந்த பொருட்களின் பகுதிகள்

(ஊ) உற்பத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற பிற மூலப்பொருட்களின் மீதிப்பகுதிகள் அல்லது உற்பத்தி செயற்பாட்டின்போது கிடைக்கின்றதும் ஏனைய உற்பத்திப் பொருட்களின் பகுதிகளும்

(எ) அபாயகரமான கழிவுகள்

இவ்வாறான ஒவ்வொரு வகையான கழிவையும் மூடிவைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதான வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் வைப்பது உரிமப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ii) மேலே (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி கொள் கலன்களில் அல்லது தாங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை பிரதேசசபை அமுல்படுத்தியுள்ள கழிவுப்பொருள் முகாமைத்துவ வேலைத் திட்டத்தின் கீழ் அகற்றுவதாயின் பிரதேசசபைத் தவிசாளரினால் அல்லது பிரதேசசபைச் செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பணிப்பு விடுக்கின்றவாறு இறுதி அகற்றலானது மேற் கொள்ளப்படல் வேண்டும்.

11. தொழிற்சாலையின் அமைவிடம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினதும் நகர அபிவிருத்தி அதிகார சபையினதும் தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தினதும் நியமங்களிற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

12. தொழிற்சாலையின், கைத்தொழிற்சாலையின் அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தல் உரிமப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

நிறைவேற்றக் கூடாத பணிகள். (13 - 19)

13. பிரதேச சபையின் தவிசாளரால் அல்லது பிரதேச சபையின் செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் குறித்த கருமத்திற்காக வழங்கப்பட்ட செல்லுபடியாகும் உரிமப்பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் பிரதேச சபை பிரதேசத்தினுள் தொழிற்சாலையொன்றை, கைத்தொழிற்சாலை யொன்றை நடாத்துதல் ஆகாது.

14. துர்நாற்றம் அல்லது நச்சுப்பொருந்திய ஏதேனும் வாயுவகைகள் வெளியேறு வதைத்தடுப்பதற்கு அவசியமான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருத்தாலே யொழிய ஏதேனும் நச்சுத்தன்மை வாய்ந்த அல்லது தொல்லை தரும் துர்நாற்றம் வீசும் ஏதேனும் பொருள் தொழிற்சாலை, கைத்தொழிற்சாலை வளவில் களஞ்சியப்படுத்துதல், பாவனைக்கு எடுத்தல் அல்லது அவ்வாறு செய்வித்தல் எவராலும் புரியப்படலாகாது.

15. 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 32 ஆவது பிரிவின் கீழ் சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் ஆக்கப்பட்டதும் அத்தகைய ஒழுங்குவிதிகளில் காலத்திற்குக்காலம் மேற் கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கு அமைவாகவும் ஒலி மாசுபாடு ஏற்படக் கூடிய எல்லையைப் பார்க்கிலும் குறைவான எல்லைக்குள் ஒலிக்கட்டுப்பாடு பேணப்பட்டு வந்திருந்தாலேயன்றி எந்தவொரு தொழிற்சாலையிலும் ஒலியைப் பிறப்பிக்கக்கூடிய ஏதேனும் இயந்திர சாதனங்களோ நீராவிக் கொதிகலன்களோ இயக்கப்படும்போது ஒலியைப் பிறப்பிக்கின்ற ஏதேனும் கருவி பாவிக்கப் படலாகாது.

16. ஏதேனும் சூளையிலிருந்து உண்டாகும் புகையை வெளியேற்றுவதற்கு 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கமுடைய தேசிய சுற்றாடல் சட்டத்தின் 32 ஆவது பிரிவின் கீழ் சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் ஆக்கப்பட்டதும் அந்த கட்டளைகளுக்கு காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய புகைபோக்கி கட்டப்பட்டிருந்தாலேயொழிய, எந்த வொரு தொழிற்சாலையிலும் புகையை பிறப்பிக்கின்ற சூளை பாவிக்கப்படல் ஆகாது.

17. எந்தவொரு தொழிற்சாலையில் அல்லது கைத்தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களையோ அல்லது சேவையில் ஈடுபட்டுள்ளவர்களையோ அழைப்பதற்காக அல்லது கருமங்களை ஆரம்பிப்பதற்காக அல்லது கருமங்களை முடிவுறுத்துவதற்காக அல்லது வேறு ஏதேனும் விடயத்திற்காக சமிக்ஞையை விடுப்பதற்கு ஏதேனும் நீராவிச் சங்கு அல்லது நீராவி ஊதுகுழல் அல்லது சைரன் அழைப்பு மணி பாவிக்கப்படுதல் ஆகாது. இப்பிரிவின் துணைவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கும் திகதியில் அவ்விதமான நீராவிச் சங்கு அல்லது நீராவி ஊதுகுழல் அல்லது சைரன் அழைப்புமணி பாவிக்கப்படுகின்ற ஏதேனும் தொழிற்சாலை உள்ளவிடத்து அத்தகைய தொழிற்சாலையில் பாவிக்கப்படுகின்ற அத்தகைய அழைப்பு சமிக்ஞைகளை இத்துணைவிதிகளின் பணிப்புரைகளுக்கமைய திருத்திக் கொள்வதற்கு அத்தகைய தினத்திலிருந்து மூன்று மாதகாலம் உரித்தாவதோடு, அத்தினத்திற்குப் பின்னர் அத்தகைய அழைப்பு சமிக்ஞை பாவிக்கப்படல் ஆகாது.

18. எந்தவொரு தொழிற்சாலையிலும், கைத்தொழிற்சாலையிலும் பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவுநீரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொதுநீர் வழிகளுக்குப் பாய்ச்சுதல் ஆகாது.

19. இப்பிரிவின் துணைவிதிகளுக்கு அமைய உரிமப்பத்திரம் பெற்றிருப்பினும் ஏதேனும் தொற்றுநோய், தொடுகை அல்லது தோல் நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எவரேனும் நபரும் அல்லது அத்தகைய நோயாளியை வீட்டில் வைத்திருக்கும் நபரும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் நபரும் தொற்றுநோய் அல்லது நோய் விருத்திக்காலம் நிறைவடைந்திருந்தால் ஒழிய பணியில் ஈடுபடலாகாது.

20. இந்த துணைவிதிகளின் கீழ் உரிமப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள தொழிற்சாலை, கைத்தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்கு உத்தரவுப்பத்திரம் பெற்றவர் இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு பிரிவிற்கு முரண்படும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரே உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைத்தான நிலைமைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உரிமப்பத்திரதாரருக்குப் பணிப்பு விடுக்கும் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபை தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் இந்த உரிமப்பத்திர தாரரிடம் கையளித்தல் வேண்டும். பிரதேச சபையின் பணி.

அறவீடுகளும் கட்டணங்களும்.

21. தொழிற்சாலையை அல்லது கைத்தொழிற்சாலையை நடாத்திச்செல்வதற்காக வருடாந்த உரிமப்பத்திரக் கட்டடத்தை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுக்கு அமைவாக உச்சக்கட்டணத்தை விஞ்சாத வகையில் அறவிடுவதற்கு பிரதேச சபைச் செயலாளருக்கு தத்துவமுண்டு.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

22. இத்துணைவிதியில் பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.

23. இந்த துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

பரிசோதனை நடைமுறையும், தத்துவமும்.

(24-27)

24. இப்பகுதியின் துணை விதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை உரிய காலப் பகுதிக்குள் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பரிசோதனைக்குட் படுத்துவதற்கு பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபை செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு.

25. இப்பகுதியின் துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள இடமொன்றை பரிசோதனை செய்வதற்கு பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபை செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது உரிமப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்காகத் தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

26. இப்பகுதியின் 20 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலின் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

27. இப் பகுதியின் 26 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறும்பட்சத்தில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபை செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சட்ட ரீதியான தத்துவம் உண்டு.

28. உரிமப்பத்திரதாரரோ அல்லது யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபையின் செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ் அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு 14 நாட்களுக்குள் தீர்வு வழங்கப்படல் வேண்டும். முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

29. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும். துணைவிதிகளை மீறுதல்.

30. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனு மொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும். அபராதமும் தண்டணையும்.

31. இந்த துணைவிதிகளில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப் படுத்தினாலொழிய - பொருள்கோடலும் வரைவிலக்கணமும்.

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

"செயலாளர்" என்பவர் ஏற்படைய பிரதேச சபையின் செயலாளர் அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கடமைகள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

"பிரதேச சபை" என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பவர் உரிய பணிக்கு பிரதேச சபைத் தவிசாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட ஏற்புடைய பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

"உரிமப்பத்திரதாரர்" என்பவர் இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள் படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப் பட்டுள்ள நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொரு வராவார்.

"உரிமப்பத்திரம் பெற்ற இடம்" என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் பயன்படுத்தப்படுவதுமான இடம் எனப் பொருள்படும்.

"பரிசீலனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்" என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

"பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரம்" என்பது உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிப்பு அல்லது உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள எந்தவொரு சந்தர்ப்பமும் எனக் கருதப்படும்.

"தொழிற்சாலை" என்பது 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க கைத்தொழில்கள் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதேனும் மூலப்பொருளை உபயோகித்து பண்டமொன்றை அல்லது வேறு பொருளொன்றை உற்பத்தி செய்கின்ற அல்லது வேறு தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் உற்பத்தியை உபயோகித்து வேறு ஏதேனும் பண்டத்தை அல்லது பொருளை

ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.

32. இந்நியமத் துணைவிதியின் தமிழ், சிங்கள, ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

***இணைப்பு 01***

**பிரதேச சபை அதிகார எல்லைக்குள் தொழிற்சாலைகளையும் கைத்தொழிற்சாலைகளையும் நடாத்துவதற்கான வியாபார வரி / வியாபார உரிமம் பெறுவதற்கான**

**விண்ணப்பப்படிவம் - 20 ………………**

1. தொழிற்சாலை/கைத்தொழிற்சாலையின் பெயர்:……………………………………………

2.(i ) தொழிற்சாலை/கைத்தொழிற்சாலை அமைந்துள்ள இடம்:

வட்டாரம்……………… ஆதன இல. ……………

(ii ) வீதியின் பெயர் :……………………………………………………………………………

(iii ) கிராம அலுவலர் பிரிவு இல. :………… பிரிவின் பெயர் : ……………………………

3. விண்ணப்பதாரியின் பெயர் : ……………………………………………………………

(i) முழுப்பெயர் : ……………………………………………………………………………

(ii) நிரந்தர முகவரி : ………………………………………………………………………

(iii) கிராம அலுவலர் பிரிவு :…………………………………………………………………

(iv) தேசிய ஆள் அடையாள அட்டை இல :…………………………………………………

(v) தொலைபேசி இல. :………………………………………………………………………

(vi) மின்னஞ்சல் முகவரி :……………………………………………………………………

4.(i ) தொழிற்சாலை/கைத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் திகதி : ………………………….

(ii ) தொழிற்சாலை/கைத்தொழிற்சாலை முகாமையாளரின்/பிரதிநிதியின்

(a ) பெயர் : ……………………………………………………………………

(b ) தொலைபேசி இல. :…………………………………………………………………

5.கட்டடம் வாடகைக்கு பெறப்பட்டதாயின்

(i ) உரிமையாளரின் பெயர்:…………………………………………………………………

(ii ) முகவரி :…………………………………………………………………………

6.கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா : ஆம் : ……………… இல்லை :………………

ஆம் எனில் உரிம இல. : ……………………… திகதி :……………………………

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப்படுத்துகின்றேன். கைத்தொழிலை/தொழிலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு 20………ஆண்டுக்கான கைத்தொழில்/தொழில் உரிமப் பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இது தொடர்பான சட்ட விதிகளிற்கு நான் இணங்குகிறேன்.

………….. ………………………………..

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**அலுவலகப் பாவனைக்கு**

கீழே வேண்டப்பட்டவாறு அறிக்கை இடுவதற்காக

………………………………………………

பிரதேச சபை செயலாளர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

**சோலை வரிப்பகுதி அறிக்கைக்காக**

வட்டாரம் :…………………………………… ஆதன இல. :……………………………

வீதியின் பெயர் : ………………………………………………………………………………

உரிமையாளரின் பெயர் :……………………………………………………………………….

ஆதன விபரம் : ……………………………………………………………………………………

ஆண்டுப் பெறுமதி : …………………..………வீதவரி நிலுவை…………..…….…………

உண்டு…….…………………இல்லை….….……

…………….. ………………………………..

திகதி நிர்வாக உத்தியோகத்தர்

**வருமானப் பகுதி அறிக்கைக்காக**

வியாபாரத்தின் தன்மை:

……………………………………………………………………………………………………

செலுத்த வேண்டிய கட்டணம்:……………………………………………………. பிரிவு A B C

குறிப்பு…………………………………………………………………………………………

……………………. …………………………………………..

திகதி வருமானப் பரிசோதகர்

**பிரதம சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக**

பொதுச்சுகாதார பரிசோதகரின் அறிக்கை

………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………

……….……………………. …………………………………………….

திகதி பொதுச் சுகாதார பரிசோதகர்

**சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை**

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………… …
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

…………………… ……………………………………………

திகதி பிரதம சுகாதார வைத்திய அதிகாரி

**பிரதம வருமானப் பரிசோதகர் அறிக்கைக்காக**

வாடகை ஒப்பந்தம் :……… உபயோகம் மற்றும் :………………சுற்றுச் சூழல் உரிமம் : ………

MOH அறிக்கை :……………குடிபுகு சான்றிதழ் :…………. மதுவரி உரிமம் :………………

விண்ணப்பம் சிபாரிசு செய்யப்படுகின்றது/ பின்வரும் காரணங்களிற்காக சிபாரிசு செய்யப்படவில்லை.

……………………………………………………………………………………………….
……………………………………………………………………………………………….
…………………………… ……………………………………………………………………

………………………………….. ………………………………….

திகதி பிரதம வருமானப் பரிசோதகர்

**கணக்காளரின் சிபாரிசு**

உரிமப்பத்திரம் வழங்குவதற்கான அங்கீகாரத்திற்கு சிபார்சு செய்கிறேன்.

…………………. ……………………………………

திகதி கணக்காளர்

அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/வழங்கப்படவில்லை

……………… ………………………………………

திகதி பிரதேச சபைத் தலைவர்/பிரதேச சபைச் செயலாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

**நானாவித இறைவரிப்பகுதி அறிக்கைக்காக**

பற்றுச்சீட்டு இல. :………………………….  பற்றுச்சீட்டுத் திகதி :…………………………

உரிம இல. : ………………………………  உரிமத் திகதி :…………………..……………

உரிமப்பத்திரம் வழங்க சிபாரிசு செய்யப்படுகின்றது.

………………………  ………………………………………

திகதி  இறைவரி நிர்வாக உத்தியோகத்தர்

பிரதேச சபை செயலாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது

…………………….  …………………………………….

திகதி  கணக்காளர்

உரிமப்பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

……………………….  …………………..………………

திகதி  பிரதேச சபை தலைவர்/பிரதேச சபைச் செயலாளர்/
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

## அத்தியாயம் - 8

**பகுதி i – பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிகழக்கூடிய அனர்த்தங்களை முகாமை செய்தல், அனர்த்தத்திற்குட்பட்ட ஆட்களுக்கு நிவாரணம் அளித்தல், அனர்த்த ஆபத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் தொடர்பான நியமத்துணை விதிகள்.**

1. பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிகழ்கால அனர்த்தங்களை முகாமைசெய்தல், அனர்த்தத்திற்குட்பட்ட ஆட்களுக்கு நிவாரணம் அளித்தல், அனர்த்த ஆபத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் தொடர்பான நியமத்துணை விதிகள் என அழைக்கப்படலாம். — துணைவிதியின் பெயர்.

2. பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவுக்கமைய பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் நிகழ்வதற்கு சாத்தியமுள்ள அனர்த்த சந்தர்ப்பங்களைக் குறைத்தல், அத்தகைய ஏதேனும் அனர்த்தத்தின் போது அசௌகரியத்துக்கு உள்ளாகின்ற அல்லது உள்ளாவதற்கு சாத்தியமுள்ள ஆட்களுக்கு நிவாரணம் அளித்தல் மற்றும் பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அனர்த்த சந்தர்ப்பங்களில் அதனை எதிர்கொள்ளக்கூடிய விதத்தில் முன்கூட்டித் தயாராகுவதற்கும் அனர்த்த ஆபத்தைக் குறைப்பதற்கும் நடைமுறைப்படுத்தவேண்டிய பூர்வாங்க அனர்த்த செயற்பாடுகளுக்கும் அதனோடு தொடர்புடைய அல்லது இடைநேர் விளைவான அனைத்து விடயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமாக இத்துணைவிதி ஆக்கப்பட்டுள்ளன. — நோக்கம்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டியதும், 26 ஆம் பிரிவுக்கு அமைவாகவும் 132 ஆம் பிரிவின் (ஊ) உப பிரிவிற்கு அமைவாகவும் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. — துணைவிதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

4. பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் நிகழக்கூடிய அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அத்தகைய ஏதேனும் அனர்த்த நிலைமையொன்று நிகழ்கின்றபோது அத்தகைய அனர்த்தங்களுக்கு ஆளான அல்லது ஆளாகக்கூடிய ஆட்களுக்கு நிவாரணம் அளித்தல் மற்றும் அனர்த்த ஆபத்தைக் குறைப்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பூர்வாங்க மூலோபாயங்களைத் தீர்மானித்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காக பிரதேச சபை அனர்த்த முகாமைத்துவக்குழு ஒன்று அமைக்கப்படல் வேண்டும். — நிறைவேற்ற வேண்டிய பணிகள். (4-25)

**5.** குழுவின் அமைப்பு

(அ) 4 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை 22 க்கு மேற்படாதிருத்தல் வேண்டும். என்பதோடு பெண்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் அத்தகைய அங்கத்தவர்கள் பின்வரும் ஆட்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(i) குழுவின் தலைவர் பிரதேச சபையின் தவிசாளர் ;

(ii) குழுவின் செயலாளர் பிரதேச சபையின் செயலாளர் ;

(iii) பிரதேச சபையின் உப தவிசாளருடன் ஒவ்வொரு ஆண்டும் திசம்பர் மாதம் பிரதேச சபையின் சபைக்கூட்டத்தில் எதிர்வரும் ஆண்டுக்காக வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்து நியமிக்கப்படும் பிரதேச சபையின் மேலும் மூன்று உறுப்பினர்கள் ;

(iv) பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ;

(v) பிரதேச சபையின் தீயணைப்புப் பிரிவின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் / பிரதான தீயணைப்பாளர் ;

(vi) 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் உதவிப் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிநிதி ;

(vii) பிரதேச சபைப் பிரதேசத்தில் உள்ளடங்குகின்ற பிரதேச செயலாளர் பிரிவின்/பிரிவுகளின் பிரதேச செயலாளர்/பிரதேச செயலாளர்களினால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிநிதி ;

(viii) சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற எவரேனும் பிரதிநிதி ;

(ix) பிரதேச சபைப் பிரதேசம் உள்ளடங்குகின்ற பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிநிதி;

(x) குறைந்தபட்சம் பிரதேச சபைப் பிரதேசத்தில் செயற்படுகின்ற பிரதேச அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் மூன்று பிரதிநிதிகள்;

(xi) பிரதேச சபைப் பிரதேசத்திலுள்ள அரச பாடசாலைகள் உள்ளடங்குகின்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிநிதி

(xii) பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குரிய வணிக சபை அல்லது வர்த்தக சங்கத்தின் பிரதிநிதி;

(xiii) இலங்கை மின்சார சபையின் பிரதேச மின் அத்தியட்சகர் அல்லது அவரது பிரதிநிதி;

(xiv) நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் அல்லது அவரது பிரதிநிதி;

(xv) இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வட மாகாண டிப்போ முகாமையாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(xvi) வடமாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பிரதிநிதி;

(xvii) வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது அவரது பிரதிநிதி.

(ஆ) பிரதேச சபையின் உறுப்பினர்கள் பதவி வறிதாக்கப்படுவதன் காரணத்தினால் குழுவின் அங்கத்தவர் பதவியில் வெற்றிடம் ஏதும் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறு வெற்றிடம் ஏற்பட்டதன் பின்னர் நடாத்தப்படுகின்ற சபையின் அடுத்துவரும் கூட்டத்தின் போது குறித்த வெற்றிடத்துக்கு சபையின் வேறெவரேனும் உறுப்பினரை வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்து நியமித்தல் வேண்டுமென்பதோடு, அவ்வாறு தெரிவு செய்து நியமிக்கப்படுகின்ற உறுப்பினர் அந்த ஆண்டின் திசம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை அத்தகைய அங்கத்தவர் பதவியில் கடமை புரிதலும் வேண்டும்.

(இ) 5 ஆம் துணை விதியின் (iv ), (v ) மற்றும் (ix ) ஆம் உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனுமொரு உத்தியோகத்தரால் ஏதேனுமொரு குழுக்கூட்டத்திற்கு தனிப்பட்ட ரீதியில் சமுகமளிக்க முடியாதுள்ள சந்தர்ப்பத்தில் அவரால் பெயர் குறிப்பிடப்படுகின்ற மற்றும் அவரது கடமைகளை செய்கின்ற வேறொரு உத்தியோகத் தரை நிறுவனத் தலைவரின் அனுமதியுடன் குழுக்கூட்டத்திற்கு சமுகமளிக்கச் செய்வித்தல் வேண்டும்.

6. (i) குறைந்தபட்சம் ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாவது குழுவின் சாதாரண கூட்டமொன்று கூட்டப்படுதல் வேண்டும். குழுவின் தலைவர் பொருத்தமெனக் கருதுகின்ற ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் குழுவின் விசேட கூட்டங்களைக் கூட்டுவதற்கு குழுவின் தலைவர் அதிகாரம் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

(ii) குழுவின் ஒவ்வொரு கூட்டத்திற்கும், பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அவர் இல்லாத சந்தர்ப்பங்களில் சபையின் உப தவிசாளர் தலைமை வகித்தல் வேண்டும். சபையின் தவிசாளர் அல்லது உப தவிசாளர் ஆகிய இருவராலும் ஏதேனுமொரு குழுக்கூட்டத்திற்கு வருகைதர இயலாமற் போகின்றபோது, வருகை தந்துள்ள அங்கத்தவர்கள் 5 ஆவது துணைவிதியின் அ(iii ) உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபையின் அங்கத்தவர்களிலிருந்து ஒருவரை கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் பொருட்டு தெரிவு செய்து நியமித்தல் வேண்டும்.

(iii) குழுவின் எந்தவொரு கூட்டத்திற்குமான கூட்ட நடப்பெண் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றாதல் வேண்டும்.

(iv) குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு தீர்மானமும் அன்றைய தினம் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள குழு அங்கத்தவர்களின் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(v) குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களில் வாக்குகளின் எண்ணிக்கை சமமானதாக அமையின் அறுதியிடும் வாக்கு குழுவின் தலைவருக்கு உரித்தாதல் வேண்டும்.

(vi) குழுவில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் குழுவின் செயலாளரினால் பதிவேடொன்றில் பதிவு செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு குழுவின் அடுத்து வரும்கூட்டத்தில் தேவைப்படும் திருத்தங்களுடன் அவை ஆமோதிக்கப்பட்டதும் குழுவில் தலைமை வகிக்கும் ஆள் அதில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

7. குழுவின் எந்தவொரு செயலும் அல்லது கருமமும் அக்குழுவின் அங்கத்தவர்களிடையே வெற்றிடம் காணப்படுவதன் காரணத்தினால் அல்லது அதன் எவரேனுமொரு அங்கத்தவர் தெரிவுசெய்து

நியமிக்கப்படுவதில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படுவதன் காரணத்தினால் மட்டும் இரத்தானதாக அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

8. குழுவின் ஒவ்வொரு கூட்ட அறிக்கையும் அடுத்துவரும் பிரதேச சபையின் சபைக் கூட்டத்தின் தகவலுக்காக சபையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

9. குழுவினால் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதேனும் விதப்புரைகள் இருப்பின், அவை தொடர்பில் பிரதேச சபையின் நிதி மற்றும் கொள்கைகள் பற்றிய குழுவின் அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் பிரதேச சபையினால் பரிசீலிக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

10. இத்துணைவிதிகளின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் குழுவின் கருமங்களாயிருத்தல் வேண்டும்.

11. (i ) தவிசாளர் பிரதேச சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதேனுமொரு அலுவலகத்தின் அல்லது வர்த்தக நிலையத்தின் நாளாந்த அலுவல்களின் இறுதியில் அத்தகைய அலுவலகத்தை அல்லது வர்த்தக நிலையத்தை மூடிவிடுவதற்கு முன்னர், அந்த வளவினுள் ஏற்றப்பட்டுள்ள:

(அ) மண்ணெண்ணெய் பயன்படுத்தப்படுகின்ற விளக்கை;

(ஆ) தேங்காய் எண்ணெய் அல்லது வேறு ஏதேனும் பொருளைப் பயன்படுத்தி ஏற்றிவைக்கின்ற விளக்கை;

(இ) சந்தனக்குச்சியை அல்லது அவ்வாறான வேறு ஏதேனும் பொருளை ;

(ஈ) அத்தகைய திறந்த தீச்சுடருடன் கூடிய வேறு ஏதேனும் பொருளை, அணைத்துவிட வேண்டுமென கட்டளையிடுதல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

(ii ) பிரதேச சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதேனுமொரு அலுவலகத்தின் அல்லது வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் அல்லது கூறப்பட்ட ஏதேனுமொரு இடத்தின்

அப்போதைக்கு பொறுப்பாளராக உள்ளவர் 11 ஆம் துணை விதியின் (i ) ஆவது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை கடைப் பிடிப்பதற்கு கடப்பாடுடையவராயிருத்தல் வேண்டும் என்பதோடு, அவர் அல்லது வேறொருவர் அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்தல் அவரது கடமையாயிருத்தல் வேண்டும்.

12. (i) பிரதேச சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் முன்னர் அனர்த்தங்களுக்கு உள்ளாகிய மற்றும் உள்ளாவதற்கு சாத்தியமுள்ள பிரதேசங்களைக் காட்டுகின்ற வரைபடங்களைத் தயாரித்து தரவுத்தளமொன்றைப் பேணிவருதல் வேண்டுமென்பதோடு பொதுமக்களின் தகவலுக்காக காட்சிப்படுத்தலும் வேண்டும்.

(ii) பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அனர்த்தத்திற்கு உள்ளாகக்கூடிய பிரதேசங்களாக இனங்காணக்கூடியதான இடங்களை வரைபடமாக்கு வதற்கும் அது பற்றி பொதுமக்களுக்கு விரிவான விதத்தில் விழிப்புணர் வூட்டுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iii) அனர்த்த ஆபத்துள்ள இடங்கள் பற்றி பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் பொருட்டு மும்மொழிகளிலும் பலகைகளைப் பொருத்தி இற்றைப் படுத்துதல் வேண்டும்.

(iv) அனர்த்தத்திற்கு உள்ளாகலாம் என இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்களில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைக் குறைக்கும் பொருட்டு அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஏற்புடைய ஏனைய நிறுவனங்களை விழிப்புணர்வூட்டி அவற்றின் உதவியோடு அனர்த்தங்களைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

13. (i) அனைத்து அபிவிருத்தி மற்றும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் ஏற்புடைய அங்கீகாரம் வழங்கப்படுகின்றபோது குறித்த பிரதேசத்தில் காணப்படுகின்ற அனர்த்த நிலைமைகள் பற்றிய மதிப்பீடு மற்றும் அனர்த்தங்களைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அனர்த்த முகாமைத்துவ நிலையத்திலிருந்து பெறப்படுதல் வேண்டுமென்பதோடு, அதிக ஆபத்தான நிலைமைக்கு உள்ளாக வேண்டி வருமெனில் அனர்த்தங்களைக் குறைக்கின்ற முறையியல்களை உள்ளடக்கியதாக பட்டயம் பெற்ற கட்டடக்கலைஞர்/ புவிச்சரிதவியலாளர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழொன்றுடன் திட்ட வரைபடமொன்று சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(ii) பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் தற்போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தாபிக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு செயலாற்றுதல் வேண்டும்.

14. அனர்த்தங்களுக்கு உள்ளாகிய பிரதேசங்களை சீர்நிலைக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை செய்தல் மற்றும் ஏனைய ஏற்புடைய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அனர்த்தங்களுக்கு ஆளாகியுள்ள வர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு தற்போது அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முறையியலுடன் தொடர்பு கொண்டு செயலாற்றுதல் வேண்டும்.

15. அனர்த்த நிலைமையொன்று நிகழ்வதற்கு சாத்தியமுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் குழுவினால் இனங்காணப்பட்டுள்ள,

(i) அனர்த்த ஆபத்துள்ள வலயங்கள், அத்தகைய ஒவ்வொரு வலயத்திலும் அனர்த்தம் ஏற்படுவதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காரணிகள் மற்றும் பிரதேசத்தின் அனர்த்தத்தின்போது அதனால் பாதிப்புக்கு உள்ளாகின்றவர்களை அகற்றுவதற்கு மிகவும் பொருத்தமான வழி முறைகள் மற்றும் இடம் பெயர்ந்தவர்களை தற்காலிகமாக தங்கவைக்கக்கூடிய இடங்கள் யாவை என்பதை இலகுவாக கண்டறியக்கூடிய விதத்தில் வரைபடமாக்கல் மற்றும் அத்தகைய வரைபடங்களை இற்றைப்படுத்தி பேணிவருதல் வேண்டும்.

(ii) அனர்த்த ஆபத்துள்ள வலயங்களில் வசிக்கும் மக்களின் பொது வாழ்க்கையில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதான குறுகியகால மற்றும் நீண்டகால தாக்கங்களை வெவ்வேறாக திட்டவட்டமாக இனங்காணல்.

(iii) அனர்த்த ஆபத்துள்ள வலயங்களில் பாரிய அனர்த்தங்களின் காரணமாக இடம் பெயர நேரிடுகின்ற குடும்பங்களை தற்காலிகமாக குடியமர்த்துவதற்கு பொருத்தமானதென குழுவினால் இனங் காணப்பட்டுள்ள இடங்களுக்குத் தேவையான கருவிகளை பெறுவதற்காக உரிய நிறுவனங்களை இனங்கண்டிருத்தல்.

(iv) அனர்த்த ஆபத்து நிலைமைகளைக் குறைப்பதற்கும் அனர்த்தத்திற்கு உள்ளாகியோரை சீர்நிலைக்கு கொண்டுவரும் பொருட்டும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் கருமங்களை குழுவின் உறுப்பினர்கள், சமுதாயம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் சேர்ந்து இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(v) அனர்த்த ஆபத்து நிலைமைகளை குறைப்பதற்கும் அனர்த்தத்திற்கு உள்ளானோரை சீர்நிலைமைக்கு கொண்டு வருவதற்குமான முன்னுரிமைகளை திட்டமிடல் மற்றும் அத்தகைய திட்டங்களை இற்றைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(vi) அனர்த்த நிலைமையொன்று உருவாகியுள்ள சந்தர்ப்பத்தில் அங்கு வசிக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக குழுவினால் இனங்காணப்பட்டுள்ள குழுவின் அங்கத்தவர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவியோடு நிவாரண அலுவல்கள் பற்றிய போதியளவு பயிற்சியை பெற்றுக்கொடுத்தல் நகரசபையின் கடமையாதல் வேண்டும்.

16. (i) அனர்த்தங்கள் தொடர்பாக செயலாற்றுகின்ற தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆலோசனையின் பேரில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வெளியிடப்படுகின்ற பூர்வாங்க அபாய அறிவிப்பு அறிக்கைகளை வைத்திருக்கும் பொருட்டு பிரதேச சபையில் உத்தியோகத்தர் ஒருவரை அல்லது ஊழியர் ஒருவரை ஈடுபடுத்தல் பிரதேச சபையின் கடமையாதல் வேண்டும்.

(ii) பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதான அபாயங்களைப் பற்றிய பூர்வாங்க அபாய அறிவிப்பு அறிவித்தலை அனர்த்த முகாமைத்துவக் குழுவிற்கு, குழுவின் தலைவருக்கு அல்லது குழுவின் அங்கத்தவர்களுக்கு அறிவித்தல் அக்கடமை ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரின் அல்லது ஊழியரின் கடமையாதல் வேண்டும்.

(iii) பிரதேச சபைப் பிரதேசத்தில் ஏதேனும் அனர்த்த ஆபத்து வலயத்தில் அனர்த்த ஆபத்து நிகழ்வதற்கு சாத்தியமுள்ளபோது, அல்லது அத்தகைய ஆபத்தொன்று நிகழ்ந்துள்ளபோது, ஆபத்துக்கு உள்ளாவதற்கு சாத்தியமுள்ள அல்லது ஆபத்துக்கு உள்ளாகியுள்ள ஆட்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதைத் தீர்மானித்தல் அக்குழுவினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அனர்த்தத்திற்கு ஆளாகியுள்ளோர்களின் உயிர்ப் பாதுகாப்பு, உணவு, குடிநீர், ஆடைகள், சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருவிகள் ஆகிய வசதிகளை வழங்குதல் தொடர்பில் தீர்மானமொன்றை அல்லது தீர்மானங்களை மேற்கொள்வதற்காக குழுவைக் கூட்டுவதற்குப் போதியளவு கால அவகாசம் இல்லையென குழுவின் தலைவர் கருதுவாராயின், அச்சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டிய நிவாரணம் வழங்குதல் தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு குழுவின் தலைவர் அதிகாரம் கொண்ட வராயிருத்தல் வேண்டும். எனினும் தாம் மேற்கொண்ட தீர்மானம் அல்லது தீர்மானங்கள் யாதென்பதை மூன்று தினங்களினுள் கூட்டப்படுகின்ற குழுக்கூட்டத்தில் சமர்ப்பித்தல் குழுவின் தலைவரின் கடமையாதல் வேண்டும்.

(iv) 16 ஆம் துணைவிதியின் (iii ) ஆவது உபபிரிவில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு குழுவினால் அல்லது குழுவின் தலைவரால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் அல்லது தீர்மானங்களின் கீழ் அனர்த்தத்திற்கு ஆளாகியோருக்கு நிவாரணங்களை வழங்க முடியுமென்பதோடு அதற்கான செலவுகள் பிரதேச சபை நிதியத்திலிருந்து ஏற்கப்படக் கூடியதாதல் வேண்டும்.

(v) 16 ஆம் துணை விதியின் (iii ) ஆவது உபபிரிவில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு குழுவினால் அல்லது குழுவின் தலைவரால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், அத்தீர்மானங்களின் பிரகாரம் 16 ஆம் துணைவிதியின் (iv) ஆவது உபபிரிவின் கீழ் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதற்காக சபையின் நிதியத்திலிருந்து ஏற்கப்பட்ட செலவுகள் யாவை என்பதைப் பற்றி குழுவினால் தயாரிக்கப்பட்ட விளக்கமானதொரு அறிக்கையை குறிப்பிட்ட கருமத்தின் பின்னர் வருகின்ற பிரதேச சபையின் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பித்தல் குழுவின் கடமையாதல் வேண்டும்.

17. பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகக்கூடிய காணிகள் மற்றும் 30 பாகைக்கு மேற்பட்ட சரிவைக் கொண்ட காணிகளை இனங் காண்பதற்கு முகாமைத்துவ நிலையத்தின் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுதல் வேண்டும்.

18. பிரதேச சபைப் பிரதேசத்தில் வெள்ளப் பெருக்கு உள்ளாகக்கூடிய பிரதேசங்களை இனங்கண்டு வரைபடங்களில் அடையாளமிடுதலும், அத்தகைய ஒவ்வொரு பிரதேசத்தினதும் உயர்ந்தபட்ச நீர்மட்டம், மழைவீழ்ச்சி மற்றும் ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான முறையியலொன்றின் அல்லது கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு, வீடுகளுக்கான அத்திவார மட்டங்களுக்கான அனுமதி வழங்கப்படுதல் வேண்டும்.

19. பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் பெய்கின்ற மழைநீர் தடையின்றி வடிந்தோடுவதற்கு இயலுமான விதத்தில் மேற்புற வடிகாலமைப்பு முறைமையை நிர்மாணித்தல், பராமரித்தல் மற்றும் மழைநீர் வடிந்தோடுவதற்கு தடையாயுள்ளவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் பிரதேச சபையின் கடமையாதல் வேண்டும்.

(i) பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அரசாங்க மற்றும் தனியார் காணிகளுக்கான உப பிரிவிடுகைகளுக்கான விண்ணப்பங்கள் அங்கீ கரிக்கப்படும் போது, மழைநீர் அனர்த்த நிலைமைகள் ஏற்படாதவாறு

ஒழுங்கான விதத்தில் அகற்றுவதற்குத் தேவையான வடிகால் முறைமை காணிகளின் திட்ட வரைபடத்தில் சேர்க்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ii) பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் காணிகளின் ஏல விற்பனைக்கு அங்கீகாரம் வழங்குகின்ற போது, குறித்த காணியின், காணித்துண்டு வரைபடத்திற்கு இசைவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதென்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

20. பிரதேச சபைப் பிரதேசத்தினுள் உள்ள வீடுகளில், வர்த்தக நிலையங்களில் மற்றும் வேறேதேனும் இடங்களில் பயன்படுத்தப்படுகின்ற எரிவாயு சிலிண்டர்களுக்கு இணைக்கப்படுகின்ற துணைப் பாகங்களிலிருந்து அல்லது அத்தகைய துணைப் பாகங்களை ஒன்றுடனொன்று இணைக்கின்ற இடங்களிலிருந்து எரிவாயுக் கசிவுகள் ஏற்படாதவாறு பேணி வருதல் மற்றும் அது தொடர்பிலான முன் பாதுகாப்பு மூலோபாயங்கள் தொடர்பில் பிரதேச சபைப் பிரதேசத்தில் வசிக்கும் மற்றும் பிரதேசத்தினுள் தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற ஆட்களை விழிப்புணர்வூட்டு வதற்கு நடவடிக்கை எடுத்தல் பிரதேச சபையின் கடமையாதல் வேண்டும்.

21. பருவ மழைக்காலம் உட்பட அனைத்து சந்தர்ப்பங்களிலும் மின்னல் தாக்குதல் களிலிருந்து பாதுகாப்புப் பெறுதல் மற்றும் இடியுடன் கூடிய காலநிலை நிலைமைகள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மின் உபகரணங்களைப் பயன்படுத்தல் தொடர்பில் ஏற்புடைய தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியோடு பிரதேச சபைப் பிரதேசத்தின் மக்களை விழிப்புணர்வூட்டல் பிரதேச சபையின் கடமையாதல் வேண்டும்.

22. அனர்த்த ஆபத்துள்ள சந்தர்ப்பத்தில் உயிர்களைக் காப்பாற்றுகின்ற மற்றும் முதலுதவி வழங்குகின்ற தொண்டர் குழுக்கள் தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு ஏற்புடைய தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியோடு அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக்கொடுத்தல் பிரதேச சபையின் கடமையாதல் வேண்டும்.

23. இத் துணைவிதியின் கீழ்:

(அ) அனர்த்த அபாய சந்தர்ப்பங்களைக் குறைப்பதற்கும் மற்றும் ;

(ஆ) அனர்த்த அபாய சந்தர்ப்பங்களில் நிவாரணம் அளிப்பதற்கும்.

அனர்த்த முகாமைத்துவ நிதியத்தின் நிதித்தொகைகள் உள்ளடங்கியவாறு போதியளவு நிதி ஏற்பாடுகள் பிரதேச சபையின் வரவுசெலவுத் திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ளல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும்.

இத்துணை விதிகளின் கீழ் பிரதேச சபையின் சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் யாதென்பதை தாமதிக்காது கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுதல் பிரதேச சபைச் செயலாளரின் கடமையாதல் வேண்டும்.

24. (i) இத்துணைவிதிகளை நடைமுறைப்படுத்துகின்ற போது, பிரதேச சபைக்கு ஏற்க நேரிடுகின்ற செலவை தீர்ப்பதற்காக ஏதேனுமொரு அமைப்பினால் அல்லது எவரேனுமொரு ஆளினால் நிதியுதவி வழங்கக்கூடியதாதல் வேண்டும். ஆயினும் அத்தகைய நிதியானது உள்நாட்டு நிதிமூலமாகப் பெறப்படு வதாயின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான மாகாண அமைச்சரினதும் வெளிநாட்டு நிதி மூலமாயின் வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தினதும் அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும், என்பதுடன் கருமங்களுக்குத் தேவையான உபகரணங்கள், கருவிகள் அல்லது பொருள் ரீதியிலான உதவிகளை வழங்கக்கூடியதாதலும் வேண்டும்.

(ii) 24 ஆம் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்படுகின்ற நிதி உதவிகள் சபையின் நிதியத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு வழங்கப்படுகின்ற நிதி இத்துணை விதிகளின் கருமங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(iii) 24 ஆம் துணை விதியின் (ii) ஆவது உபபிரிவின் கீழ் நகரசபைக்கு செலுத்தப்படுகின்ற நிதி தொடர்பில் தனியான கணக்குத் தகவல்களைப் பேணிவருதல் பிரதேச சபை செயலாளரின் கடமையாயிருத்தல் வேண்டுமென்பதோடு, குறித்த நிதியம் சபையின் அனர்த்த முகாமைத்துவக் கணக்கு என அழைக்கப்படுதலும் வேண்டும். இந் நிதியத்தில் நிதியிடுதல் பற்றிய கொள்கை மற்றும் அறிவுரைகள் தயாரிக்கப்பட்டு அதற்கு பிரதேச சபையின் அங்கீகாரம் பெறப்படுதலும் வேண்டும்.

(iv) இத் துணைவிதியின் கீழ் பிரதேச சபையின் நிதியத்திற்குக் கிடைக்கின்ற மற்றும் அந்நிதியத்திலிருந்து செலவிடப்படுகின்ற நிதி பற்றிய அறிக்கை குழுவின் ஒவ்வொரு கூட்டத்திலும் ஆராயப்படும் பொருட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குறித்த குழுக்கூட்டத்தின் பின்னர் நடைபெறுகின்ற பிரதேச சபையின் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுதலும் வேண்டும்.

25. (i) பிரதேச சபைப் பிரதேசம் உள்ளடங்கிய மாவட்டத்தின், மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழு, பிரதேச சபையின் ஆளுகைப் பிரதேசம் உள்ளடக்குகின்ற பிரதேச செயலாளர் பிரிவு அல்லது பிரிவுகளின் பிரதேச செயலாளர் அல்லது

பிரதேச செயலாளர்கள், பிரதேச சபையின் ஆளுகைப் பிரதேசத்திற்கு உரித்தாகின்ற ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்கள், சபைப் பிரதேசத்தினுள் மற்றும் அதற்கு அண்மையில் அமைந்துள்ள வேறு அரச நிறுவனங்கள் மற்றும் பிரதேச சபைப் பிரதேசத்தினுள் செயற்படுகின்ற அரச சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றின் வசமுள்ள அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களை பிரதேச சபையின் செயலாளர் வேண்டி நிற்கின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரதேச சபையின் செயலாளருக்குப் பெற்றுக்கொடுத்தல் நிறுவனத் தலைவரின் அல்லது அவருக்குப் பதிலாகச் செயலாற்றுகின்ற எவரேனுமொருவர் இருப்பின் அவரின் கடமையாதல் வேண்டும்.

(ii) அவ்வாறே பிரதேச சபையிடம் உள்ள அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களை கூறப்பட்ட ஏதேனும் ஒரு நிறுவனம் வேண்டி நிற்கின்ற போது, அந்நிறுவனத்திற்கு குறித்த தரவுகள் மற்றும் தகவல்களை பெற்றுக்கொடுத்தல் பிரதேச சபை செயலாளரின் கடமையாதல் வேண்டும்.

(iii) 25 ஆம் துணை விதியின் (i ) ஆவது மற்றும் (ii ) ஆவது உபபிரிவுகளில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், எவரேனுமொருவரால் அவ்வாறு வேண்டி நிற்கப்படுகின்ற ஏதேனும் தரவுகள் அல்லது தகவல்களை வெளியே வழங்குவதன் மூலம் அரச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்லது பாதிப்பு ஏற்படுமென குறித்த தரவுகள் மற்றும் தகவல்களைக் கொண்டுள்ள நிறுவனத்தின் தலைவரின் அல்லது அவருக்குப் பதிலாக செயலாற்றுகின்ற வேறு எவரேனுமொருவரின் அபிப்பிராயமாக உள்ள போது, அவ்வாறு அரச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்லது பாதிப்பாக அமையக்கூடிய தரவுகள் மற்றும் தகவல்களை வெளியே வழங்குவதிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு அத்தகைய ஆளுக்கு குறித்த பந்திகளின் கட்டளைகள் தடையாயிருத்தலாகாது.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

26. இதில் அதிகாரத்தைக் கையளித்தலானது, இத்துணைவிதிகளை ஒழுங்கு முறையாக்கல் தொடர்பில் தவிசாளர் அல்லது செயலாளரால் பிரதேச சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் கையளித்தல் சட்ட ரீதியானதாதல் வேண்டும்.

பரிசோதனை நடைமுறையும் தத்துவமும்.

27. இத்துணைவிதிகளின் கட்டளைகளைப் பரிசோதிப்பதற்கு பிரதேச சபை செயலாளர் அல்லது அதிகாரம் வாய்ந்த அலுவலர் ஒருவருக்கு பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பதன் மூலம் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

28. ஏதேனுமொரு முறைப்பாட்டை எழுத்து மூலம் அல்லது வாய்மூலம் பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் அல்லது அதிகாரம் வாய்ந்த அலுவலர் ஒருவருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்வலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு 14 நாட்களுக்குள் தீர்வு வழங்கப்படல் வேண்டும். முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப்பொறி முறைகளும்.

29. இத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளில் ஒன்றை அல்லது சிலவற்றை அல்லது அனைத்தையும் மீறுதல் குற்றமாகும். துணை விதிகளை மீறுதல்.

30. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் 2 ஆம் உபபிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122 ஆம் பிரிவின் 2 ஆம் உப பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும். அபராதமும் தண்டனையும்.

31. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாத விடத்து, பொருள் கோடலும் வரை விலக்கணமும்.

''தவிசாளர்'' என்பவர், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப்பொருள்படுவார்.

''பிரதேச சபையின் செயலாளர்'' என்பவர் ஏதேனும் பிரதேசம் தொடர்பிலாயின் அந்த பிரதேச சபைக்கு பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பிரதேச சபையின் பிரதேச சபைச் செயலாளர் எனப் பொருள்படும். இந்த பிரதேச சபையின் செயலாளராக செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளொருவரும் செயலாளரின் தத்துவங்களுள் அல்லது கடமைகளுள் எவற்றையேனும் புரிவதற்கு அல்லது அதன்கீழ் நிறைவேற்றுவதற்கு பிரதேச சபை கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் தத்துவமளிக்கப்பட்டுள்ள எவரேனும் அலுவலர் ஒருவரும் இந்த அலுவலருக்கு அவ்வாறு தத்துவம் அளிக்கப்பட்டுள்ள அளவும் இதில் உள்ளடங்கும்.

''பிரதேச சபை'' என்பது பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

“அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்” என்பவர் உரிய பணிக்கு தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப்பொருள்படும்.

"உப தவிசாளர்” என்பதன் மூலம் பிரதேச சபையின் உப தவிசாளரும்,

"சபைக்கூட்டம்” என்பதன் மூலம் பிரதேச சபையில் மாதாந்தம் நடாத்தப்படுகின்ற சபைக்கூட்டம் எனப் பொருள்படும் ;

"அனர்த்தம் மற்றும் ஆபத்து” என்பதன் மூலம் 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை பேரழிவுச் செயலாட்சிச்சட்டத்தில் "பேரழிவு" என்பதற்கு வழங்கப்பட்டுள்ள பொருள்கோடல் எனக் கருதப்படும்.

இதற்கமைய, இலங்கையிலுள்ள எவரேனும் ஆளின் அல்லது ஆட்கள் குழுக்களின் பாதுகாப்புக்கு அல்லது ஆரோக்கியத்திற்கு ஆபத்தாயிருக்கின்ற அல்லது ஆபத்தாயிருப்பதற்கு அச்சுறுத்துகின்ற அல்லது ஏதேனும் ஆதனத்தை அழிக்கின்ற அல்லது சேதப்படுத்துகின்ற அல்லது அழிப்பதாக அல்லது சேதப்படுத்துவதாக அச்சுறுத்துகின்ற, நிகழ்ந்துள்ள அல்லது நிகழக்கூடிய சாத்தியமுள்ள இயற்கையாக அல்லது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சம்பவத்தின் தோற்றுகை எனப்பொருள்படும் என்பதோடு அது பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.

32. இந் நியமத்துணை விதியின் தமிழ், சிங்கள, ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்

**அட்டவணை - 1**

(அ) மண்சரிவு

(ஆ) புயல்

(இ) வெள்ளம்

(ஈ) வரட்சி

(உ) கைத்தொழில் ஆபத்து

(ஊ) சுனாமி (நிலநடுக்கப்பேரலை)

(எ) பூமியதிர்ச்சி

(ஏ) ஆகாய ஆபத்து

(ஐ) கடல் சார்ந்த ஆபத்து

(ஒ) தீ (ஓ) தொற்று நோய் பரவுகை

(ஓ) வெடித்தல்

(ஔ) விமானத்தாக்குதல்

(க்) குடியியல் அல்லது உள்நாட்டுக்கலகம்

(ங்) இரசாயனமுறைவிபத்துக்கள்

(ச்) கதிரியக்கமுறை அவசர நிலைமைகள்

(ஞ்) உள்நாட்டு மற்றும் கடல்சார் எண்ணெய் சிந்துதல்கள் உள்ளடங் கலான எண்ணெய் சிந்துதல்கள்

(ட்) அணுசார் பேரழிவுகள்

(ண்) நகர மற்றும் காட்டுத் தீ

(த்) கரையோர மண்ணரிப்பு ; அத்துடன்

(ந்) சுழல்காற்று, மின்னல்தாக்குதல் மற்றும் பலத்த இடியுடன் கூடிய கடுங்காற்று.

"நிவாரணம் வழங்குதல்" என்பதன் மூலம் இத்துணைவிதிகளின் கருமங்களுக்காக அனர்த்தம் என்பதற்கு வழங்கப்பட்டுள்ள பொருள் கோடலுக்கமைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அல்லது ஏதேனுமொரு அனர்த்தம் நிச்சயமாக நிகழ்வதற்கு சாத்தியமுள்ளதொரு சந்தர்ப்பத்தில் குறித்த அனர்த்த நிலைமைகளினால் பாதிக்கப்படுவதற்கு சாத்தியமுள்ள அல்லது பாதிக்கப்பட்ட ஆட்களை தற்காலிகமாக பாதுகாப்பான ஓர் இடத்தில் அல்லது இடங்களில் தங்கவைத்தல், உயிர்களைப்பாதுகாத்தல், முதலுதவி வழங்குதல், அனர்த்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட மற்றும் இடம் பெயர்ந்த ஆட்கள் தற்காலிக இருப்பிடங்களிலிருந்து நீங்கிச் செல்லும் வரையிலான காலத்தினுள் அத்தகைய ஆட்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதல் எனப்பொருள்படும் என்பதோடு அவ்வாறு இடம்பெயர்ந்துள்ள ஆட்களுக்கு சமைக்கப்பட்ட அல்லது உலர் உணவுகளை வழங்குதலும் அதில் உள்ளடங்குதல் வேண்டும்.

பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிகழக்கூடிய அனர்த்தங்களை முகாமை செய்தல், அனர்த்தத்திற்குட்பட்ட ஆட்களுக்கு நிவாரணம் அளித்தல், அனர்த்த ஆபத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் தொடர்பான நியமத்துணை விதிகளின் முதலாவது அட்டவணை.

(i) பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அனர்த்தங்கள் மற்றும் அத்தகைய அனர்த்தங்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பிரதேசங்கள் யாவை என்பதை இனங்காணல்.

(ii) அனர்த்த நிலைமைகளுக்கு ஏதுவாக அமைகின்ற அல்லது ஏதுவாக அமையக்கூடிய காரணங்கள் யாவை என்பதைத் தீர்மானித்தல்.

(iii) அனர்த்த நிலைமைகள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்ற காரணங்களைத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கும் அனர்த்தங்களுக்கு உள்ளான ஆட்களை சீர்நிலைக்கு கொண்டு வருவதற்கும் தேவையான மூலோபாயங்களை இனங்காணல்.

(iv) ஏதேனுமொரு அனர்த்த நிலைமையினால் சேதத்திற்கு அல்லது சிரமத்திற்கு உள்ளாவதற்கு சாத்தியமுள்ள பிரதேசங்கள் மற்றும் குடும்பங்கள் யாவை என்பதைத் திட்டவட்டமாக இனங்காணல், அவ்வாறு இனங் காண்கின்ற போது, மாணவர்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், வலது குறைந்தோர் பற்றிய விபரங்களைத் தனித்தனியாக குறித்து வைத்துக் கொள்ளல்.

(v) ஏதேனுமொரு அனர்த்த நிலமையினால் சேதத்திற்கு அல்லது சிரமத்திற்கு உள்ளாகின்ற குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கும் மூலோபாயங்களைத் தீர்மானித்தல்.

(vi) ஏதேனுமொரு அனர்த்த நிலைமை காரணமாக இடம்பெயர்கின்ற மக்களை தற்காலிகமாக குடியமர்த்தக்கூடிய இடங்களை அனர்த்தம் நிகழ்வதற்கு முன்னர் இனங்காணல்.

(vii) ஏதேனும் அனர்த்த நிலைமை காரணமாக இடம் பெயர்கின்ற மக்களுக்கு, மீளக் குடியமர்த்தப்படும் சந்தர்ப்பம் வரை உணவு, பானங்களை வழங்கு கின்ற மூலோபாயங்கள் பற்றி முன்கூட்டியே இனங்காணல்.

(viii) ஏதேனும் அனர்த்த சந்தர்ப்பத்தில் சபை ஆளுகைப் பிரதேசத்தின் மக்களின் உடல்நலம் பேணல் வசதிகளை ஏற்படுத்துவதற்கான மூலோபாயங்கள் பற்றி முன்கூட்டியே இனங்காணல்.

(ix) ஏதேனும் அனர்த்த நிலைமை நிகழ்வதற்கு மிகச் சாத்தியமுள்ள காலகட்டங்கள் யாவை என்பதைத் திட்டவட்டமாக இனங்காணல்.

(x) வாகனப் போக்குவரத்துக்கு தடையேற்படுகின்ற விதத்தில் நிகழ்கின்ற அல்லது நிகழ்வதற்கு சாத்தியமுள்ள எந்தவொரு அனர்த்த சந்தர்ப்பத்திலும் அத்தகைய வீதிகளுக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய மாற்று வீதிகள் யாவை என்பதை இனங்காணல்.

(xi) வெள்ளப்பெருக்கின் போது வீதிகள் நீரில் மூழ்குவது எந்த அளவிலான மழைவீழ்ச்சியின் போது, என்பதையும் அத்தகைய மழைவீழ்ச்சி ஏற்பட்டு எவ்வளவு நேரத்தின் பின்னர் வீதிகள் நீரில் மூழ்குமென்பதையும் இனங்காணல்.

(xii) எந்தவொரு வெள்ளப்பெருக்கின் போதும் பிரதேசம் நீரில் மூழ்குவதற்கு ஏற்ற அளவிலான மழைவீழ்ச்சி இடம்பெற்று எவ்வளவு நேரத்தில் அப்பிரதேசம் நீரில் மூழ்கு மென்பதையும் சூறாவளி அல்லது அதனை ஒத்த புயல்காற்று நிலைமையின் போது நிகழ்கின்ற எதிர்பாரா மழைவீழ்ச்சி நிலைமையின் போது பிரதேசத்தில் நீரில் மூழ்குகின்ற இடங்களையும் இனங்காணல்.

(xiii) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் வளிமண்டலவியல் திணைக்களத்தினதும் உதவியோடு பிரதேச சபை ஆளுகைப்பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட சில இடங்களில் குறைந்த செலவிலான மழைவீழ்ச்சி மானிகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அத்தகைய மழைவீழ்ச்சி மானிகளின் தரவுகளை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(xiv) பிரதேச சபைப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள முறைகளின் மூலம் குடிநீரை பெற்றுக்கொள்வதற்கு இயலாமற் போகின்ற காலகட்டங்கள் மற்றும் காரணங்களை இனங்காணல்.

(xv) ஆதனங்களுக்கு அல்லது மக்களுக்கு சேதம் நிகழக்கூடிய விதத்தில் பிரதேச சபைப் பிரதேசத்தினுள் தீப்பற்றல்கள் நிகழக்கூடிய ஆபத்தான இடங்களை இனங்காணல் மற்றும் வரைபடமாக்கல்.

(xvi) பிரதேச சபைப் பிரதேசத்திலுள்ள சரிவுகளுடன் கூடிய இடங்களில் மண்சரிவு ஆபத்து நிகழக்கூடிய இடங்களை ஏற்புடைய தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியோடு இனங்காணல்.

(xvii) பிரதேச சபைப் பிரதேசத்தினுள் கொள்ளை நோய்கள் ஏற்படுதல் மற்றும் பரவுதலைக் கட்டுப்படுத்தும் முறையியல்களை ஏற்புடைய சுகாதார நிறுவனங்களின் உதவியோடு இனங்காணல்.

(xviii) திடீரென தீப்பற்றக்கூடிய அல்லது வெடிப்புகள் நிகழக்கூடிய அபாயகரமான இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி, பிரதேச சபைப் பிரதேசத்தில் குறிப்பிட்டதொரு இடத்தில் இடம்பெறச்செய்து அல்லது இடத்திற்கிடம் எடுத்துச்சென்று செயற்படுத்தப்படுகின்ற கைத்தொழில்கள் மற்றும் கைத்தொழில்களை இனங்காணல் மற்றும் பதிவு செய்தல்.

(xix) குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளில் அனர்த்த முகாமைத்து வத்துடன் தொடர்புடையதாக திரட்டப்படுகின்ற தரவுகள் மற்றும் தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுவதை உறுதிசெய்தல்.

(xx) பிரதேச சபைப் பிரதேசம் உள்ளடங்கிய மாவட்டத்தின் மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுவுடன் நெருக்கமான தொடர்புகளைக் கட்டியெழுப்பி அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக அக்குழுவிடமுள்ள தரவுகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சபையிடமுள்ள தரவுகள் மற்றும் தகவல்களை மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுவுக்கு பெற்றுக்கொடுப்பதை உறுதிசெய்தல்.

(xxi) ஏதேனும் அனர்த்த மற்றும் ஆபத்தான சந்தர்ப்பங்களில் நிவாரணக் குழுக்களாக செயற்படுவதற்கான இயலுமையுள்ள மற்றும் இலகுவாக உதவிகளைப் பெறக்கூடிய ஆட்கள், நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புகள் யாவை என்பதையும் அவர்களிடமுள்ள உபகரணங்களையும் இனங்காணல்.

(xxii) அனர்த்த அல்லது ஆபத்தான சந்தர்ப்பங்களில் உயிர்களைப் பாதுகாக்கின்ற பணிகளில் தன்னார்வமாக ஈடுபட விரும்புகின்ற ஆட்களை இனங்கண்டு அவர்களைப் பதிவு செய்தல் மற்றும் அவர்களுக்கு போதியளவு பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்கு பிரதேச சபைக்கு விதப்புரைகளை சமர்ப்பித்தல்.

(xxiii) ஏதேனும் அனர்த்த நிலைமை நிகழ்வது பற்றிய முன்னறிவிப்பின் பொருட்டு அல்லது அனர்த்த நிவாரணம் வழங்கும் பொருட்டு பிரதேச சபையினால் கொள்வனவு செய்யப்பட வேண்டிய உபகரணங்கள் மற்றும் வேறு ஏதேனும் விடயங்கள் பற்றி சபைக்கு விதப்புரைகளை சமர்ப்பித்தல்.

(xxiv) குழுவினால் திரட்டப்பட்ட தரவுகள், தகவல்கள் மற்றும் இனங்காணப்பட்ட முறையியல்கள் பற்றிய குழுவின் விதப்புரைகளை சபைக்கு சமர்ப்பித்தல்.

## பகுதி ii - பிரதேச சபையின் எல்லைக்குள் பிரதேச சபைப் பாதைகளில் பாதசாரிகள் கடவைகளை உருவாக்குவதும், பேணுவதும் தொடர்பிலான நியமத் துணைவிதிகள்

துணைவிதியின் பெயர்.

1. இந்த துணைவிதி பிரதேச சபை பாதைகளில் பாதசாரிகள் கடவைகளை உருவாக்குவதும், பேணுவதும் தொடர்பிலான நியமத் துணை விதிகள் என அழைக்கப்படலாம்.

நோக்கம்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைவாக பிரதேச சபை எல்லைக்குள் உள்ள பாதசாரிகள் கடவைகளை ஒழுங்குபடுத்துதல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் நிர்வகித்தல் மூலம் பயணிகளை பாதுகாப்பதும் வாகன விபத்துக்களை தடுப்பதும் இதன் நோக்கமாகும்.

துணைவிதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 vii ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இத்துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன.

4. எவரேனும் பாதசாரி ஒருவர் பாதசாரி கடவையின் ஊடாக பாதையைக் கடக்கும் சந்தர்ப்பத்தில் இந்தப் பாதசாரிகள் கடவையை தாண்டிச் செல்லவுள்ள எல்லா வாகனச் சாரதிகளினாலும் பாதசாரி ஒருவர் இந்த பாதசாரி கடவையின் மறுபக்கத்திற்கு செல்லும் வரையிலும் தான் ஓட்டிச்செல்லும் வாகனத்தை நிறுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

நிறைவேற்ற வேண்டிய பணிகள்.

(4 -5)

5. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது வாகன வழிகாட்டி ஒருவர் வெளிச் சமிக்ஞை மூலம் அல்லது அவ்வப்போது கட்டுப்படுத்துகின்ற ஏதேனும் சமிக்ஞை மூலம் பாதசாரிகள் கடவையின் ஊடாக பயணிப் பதற்காக செல்லுகின்ற எந்தவொரு வாகனத்தையும் கட்டுப்படுத்த முடியும். இந்த பொலிஸ் உத்தியோகத்தரினால் அல்லது வாகன வழிகாட்டியினால் வெளிச் சமிக்ஞை அல்லது பிற சமிக்ஞை மூலம் வழங்குகின்ற கட்டளைக்கு அமைவாக இந்த வாகனத்தை ஓட்டுகின்ற சாரதி செயலாற்ற வேண்டும்.

6. எவரேனும் ஆளொருவரும் 11 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் பாதசாரிகள் கடவை குறியீட்டை மாற்றுதல் அல்லது அழித்தல் ஆகாது.

நிறைவேற்றக் கூடாத பணிகள்.

(6 - 10)

7. ஏதேனும் வாகனமொன்று பாதசாரிகள் கடவையில் வாகனங்கள் நிறுத்தும் குறியீடுகள் உள்ள எல்லையைக் கடப்பதற்கு அண்மித்த சந்தர்ப்பத்தில் எவரேனும் பாதசாரியொருவர் பாதசாரிகள் கடவையின் ஊடாக கடப்பதற்காக பாதசாரிகள் கடவையின் மீது பிரவேசித்தல் ஆகாது.

8. எவரேனும் பாதசாரியொருவர் ஏதேனும் பாதசாரிகள் கடவையின் மீது நடந்து செல்லும்போது சாதாரண வேகத்தில் வீதியின் ஒரு பக்கத்திலிருந்து அடுத்த பக்கத்திற்கு போகும் போது தேவையான நேரத்திற்கு மேலதிகமாக எந்த ஒரு கடக்கும் இடத்திலும் தரித்து நிற்றலோ அல்லது அதன் ஊடாக பயணிக்கும் வாகனத்தின் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வண்ணம் தரித்து நிற்றலோ ஆகாது என்பதுடன், இந்த பாதசாரிகள் கடவைகள் மேல் பயணிக்கும் பிற பாதசாரியொருவரின் பயணத்திற்கு முறையற்ற விதத்தில் தடையை ஏற்படுத்தலுமாகாது.

9. ஏதேனும் வாகனமொன்றின் சாரதியானவர் தன்னால் ஓட்டிச்செல்லுகின்ற வாகனம் தனது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் தன்னால் முன்னோக்கிச் செல்ல முடியாதிருந்தாலன்றி ஏதேனுமொரு பாதசாரிகள் கடவையின் மீது அல்லது பாதசாரிகள் கடவையின் ஏதேனுமொரு பகுதியின் மீது எந்தவொரு காரணத்திற்காகவும் நிறுத்தி வைத்தல் கூடாது.

10. ஏதேனும் வாகனமொன்றின் சாரதியானவர் விபத்தொன்றைத் தடுக்கும் பொருட்டு தன்னால் ஓட்டிச்செல்லுகின்ற வாகனத்தை பாதசாரிகள் கடவையின் மீது நிறுத்துவதற்குத் தேவைப்பட்டாலன்றி, வாகனத்தை ஏதேனுமொரு பாதசாரிகள் கடவையின் மீது அல்லது இந்த பாதசாரிகள் கடவையின் ஏதேனுமொரு பகுதியின் மீது எந்தவொரு காரணத்திற்காகவும் நிறுத்தி வைத்தல் கூடாது.

நகர சபையின் பணி. (11 -14 )

11. 12 ஆம் துணைவிதியின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பாதசாரிகள் கடவை களுக்காக குறியீடு இடுதல், மோட்டார் வாகன சட்டத்தின் 164 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இந்தச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் மத்திய போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டதுமான 1987 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 13 ஆந் திகதியிடப்பட்ட 444/18 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 1 ஆவது பகுதியின் (1) ஆவது பந்தியின் கட்டளைகளின் 16 ஆம் கட்டளையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 4.18 ஆம் உருவின் மாதிரிக்கமைவாக இருந்தாலன்றி இந்த கட்டளைகளில் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கும் உட்படுதல் வேண்டும். அவ்வாறே இந்தக் குறியீடுகள் அழிந்து போவதற்கு இடமளிக்காமல் மீண்டும் தீந்தை பூசுதல் பிரதேச சபைத் தவிசாளரின் பொறுப்பாகும்.

12. பிரதேச சபை எல்லைக்குள் உள்ள பெருந்தெருக்களிலும், பாதைகளிலும் பாதையைக் கடப்பதற்கான பாதசாரிகள் கடவைகளை நகரசபையின் போக்குவரத்து ஆலோசனைக்குழுவின் மூலம் இனங்காணப்பட்டு பிரகடனப்படுத்துதல், குறியீடு இடுதல் என்பவற்றுடன் மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தில் உள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய சமிக்ஞை பலகைகளும் பிரதேச சபையினால் பொருத்தப்படல் வேண்டும்.

13. பிரதேச சபையினால் அவ்வப்போது எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கமைவாக ஏதேனும் பாதசாரிகள் கடவையொன்றை மாற்றுவதற்கு அல்லது அகற்றுவதற்கு பிரதேச சபைக்கு தத்துவம் உண்டு.

14. பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள ஏதேனுமொரு பாடசாலையொன்றின் முன்னாலுள்ள பாதையில் குறியீடு இடப்பட்டுள்ள பாதசாரிகள் கடவையில் பணியிலீடுபடுகின்ற வாகன வழிகாட்டியை ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதேச சபைக்கு முடியும்.

15. இந்த துணைவிதிகளுக்குரித்தான பணிகளை ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வைசெய்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பில் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை பிரதேச சபை தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்காவது எழுத்து மூலம் கையளிப்பது சட்டபூர்வ மானதாகும். — தத்துவங்களை ஒப்படைத்தல்.

16. யாராயினுமொருவர் எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ் அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு 14 நாட்களுக்குள் தீர்வு வழங்கப்படல் வேண்டும். — முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

17. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது எல்லாவற்றையுமோ மீறுதல் குற்றமாகும். — துணை விதிகளை மீறுதல்.

18. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப் பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் பிரிவின் 2 ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும். — அபராதமும் தண்டனையும்.

19. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து, — பொருள் கோடலும், வரைவிலக்கணமும்.

"பிரதேச சபைத் தவிசாளர்'' என்பவர், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் பிரதேச சபை தவிசாளர் எனப் பொருள்படும்.

"பிரதேச சபைச் செயலாளர்'' என்பவர் ஏதேனும் பிரதேசம் தொடர்பிலாயின் இந்த பிரதேச சபைக்கு பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப் படுகின்ற அல்லது கூட்டிணைக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற பிரதேச சபையின் செயலாளர் எனப் பொருள்படும். பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் தத்துவமளிக்கப்பட்டுள்ள எவரேனும் அலுவலர் ஒருவரும் இந்த அலுவலருக்கு அவ்வாறு தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள அளவும் இதில் உள்ளடங்கும் .

"பிரதேச சபை'' என்பது ஏற்புடைய பிரதேச சபை தொடர்பிலானதும் இந்த பிரதேச சபைக்கு பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படுகின்ற அல்லது கூட்டிணைக்கப்பட்டதாக கருதப்படுகின்ற பிரதேச சபை எனப் பொருள்படும்.

"வாகன வழிகாட்டி" என்பவர், பாதசாரிகள் கடவைகளில் பாதசாரிகளையும் வாகனங்களையும் கட்டுப்படுத்தும் பணிகளுக்காக ஏதேனும் பாடசாலை யொன்றின் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளொருவரினால் பெயர் குறிப்பிடப்பட்டவரும் இந்த பணிகளில் ஈடுபடுகின்ற பாடசாலை மாணவனொருவர் அல்லது பிற எவரேனும் ஆளொருவர் எனப் பொருள்படும்.

"வாகனம்" என்பது, மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் எந்தவொரு வாகனமும் எனப் பொருள்படும் என்பதுடன் ஏதேனும் வண்டி, கைவண்டி, தள்ளுவண்டி, துவிச்சக்கர வண்டி, ரிக்ஷோ மற்றும் மோட்டார் மூலம் இயங்கக் கூடிய துவிச்சக்கர வண்டியும் இதில் உள்ளடங்கும்.

பாதசாரிக் கடவை என்பது நிறம் தீட்டப்பட்ட கோடுகள் அல்லது வேறு முறைகளில் நடந்து போகின்றவர்களுக்காக வேறுபடுத்திக் காட்டப்பட்டு அதில் "இங்கே கடக்கவும்" என்ற வசனங்களுடன் பாதை சமிக்ஞை மூலம் குறிப்பிட்டுள்ள பாதையின் குறுக்கே கடப்பது சம்மந்தமான இடம் என பொருள்படும்.

"சாரதி'' என்பவர் மிதிவண்டி அல்லது முச்சக்கரவண்டி சம்பந்தமாயின் அது இயந்திரத்துடன் அல்லது வேறு விதத்தில் ஓட்டப்படுவதாயின் அதை ஓட்டிக்கொண்டு செல்பவரும் கைவண்டி அல்லது தள்ளுவண்டி சம்பந்தமாயின் வண்டியை இழுத்துக்கொண்டு போகும் அல்லது தள்ளிக்கொண்டு போகும் ஒருவரும் றிக்ஷோ ஒன்று சம்பந்தமாயின் அந்த றிக்ஷோவை இழுத்துக்கொண்டு செல்பவர் எனவும் மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் எந்த ஒரு வாகனத்தையும் இயக்குபவர் எனவும் பொருள்படும்.

20. இந்நியமத் துணைவிதியின் தமிழ், சிங்கள, ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.

## பகுதி iii - பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் உருவாகும் திண்மக் கழிவுப்பொருட்கள் தொடர்பான நியமத் துணை விதிகள்

1. பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் பொது இடத்திலும், தனிப்பட்ட சுற்றாடலிலும், வீதியிலும், பாதைகளிலும் உருவாகும் திண்மக் கழிவுப் பொருட்களை வேறாக்குதல், களஞ்சியப்படுத்துதல், சேகரித்தல், போக்குவரத்துச் செய்தல், மாற்றும் நிலையங்களைச் செயற்படுத்துதல் மற்றும் நடாத்திச் செல்லுதல், தயாரித்தல், அழுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், பரிசீலனை செய்தல், கட்டுப்படுத்துதல் தொடர்பான நியமத் துணை விதிகள் என அழைக்கப்படலாம். துணைவிதியின் பெயர்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கமைய திண்மக் கழிவுப்பொருட்கள் தொடர்பான முகாமை நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் இத் துணைவிதிகள் ஆக்கப்படுகின்றன. நோக்கம்.

துணை விதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93, 94, 95 ஆம் பிரிவுகளுக்கு அமைவாகவும் 126(ix) (ஆ) ஆம் பிரிவுக்கு அமைவாகவும் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இத் துணை விதிகள் ஆக்கப்படுகின்றன.

நிறைவேற்ற வேண்டிய பணிகள். (4 -17)

4. பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள ஏதேனும் வளவொன்றினுள் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமது வளவைக் கழிவுப்பொருட்கள் இல்லாத சுகாதாரமான சூழ்நிலையில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

5. பிரதேச சபையின் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள ஏதேனும் வளவொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் தமது சுற்றாடலுக்குள் உருவாகும் கழிவுப்பொருட்களைச் சேகரித்தல், வேறாக்குதல், களஞ்சியப்படுத்துதல், ஏற்றிச்செல்லல், மற்றும் வெளியேற்றுதல் ஆகியனவற்றை செய்தல் வேண்டும். அல்லது இந்தத் துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய அவற்றை செய்வித்தல் வேண்டும்.

6. வளவின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் அவர்களது சுற்றாடலில் உருவாகும் கழிவுப்பொருட்களைக் கூட்டிப் பெருக்குதல் அல்லது வேறேதும் முறைகளைப் பயன்படுத்தி நாளாந்தம் சேகரித்தல் வேண்டும்.

7. ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் இந்தத் துணைவிதிகளின் முன்னேற்பாடான உபவிதிகளுக்கமைய சேகரிக்கும் கழிவுப் பொருட்களை 8 முதல் 28 வரை காட்டப்பட்டுள்ள துணை விதிகளுக்கமைய வேறுபடுத்துதல் வேண்டும். அல்லது அவ்வாறு செய்வதற்கு உட்படுத்துதல் வேண்டும்.

8. உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் தமது கழிவுப்பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கோ அல்லது அவற்றை அப்புறப்படுத்துவதற்கோ/ அகற்றுவதற்கோ பயன்படுத்தும் பை அல்லது உறை அல்லது பெரிய பாத்திரம் அல்லது ஏதேனும் கொள்கலனை 8 முதல் 28 வரையுள்ள துணைவிதிகளது ஏற்பாடுகளுக்கமையச் சேகரிப்பதற்காக நல்ல முறையில் பேணிவருதல் வேண்டும். அவை கிழிந்தோ, ஓட்டையாகியோ, உடைந்தோ அல்லது தொடர்ந்து ஈரலிப்பாகி நொய்ந்து விடுவதனாலோ அல்லது வேறெந்தக் காரணங்களாலோ நியாயமாக அவற்றைக் கையாள முடியாது உடைந்துபோகும் நிலையில் இருந்தால் அவற்றை இந்தக் கருமங்களுக்காகப் பயன்படுத்தாது விடுதல் வேண்டும். உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வேண்டிக்கொள்வாராயின் சபை மேற்கொள்ளும் தீர்மானத்துக்கமைய ஒரு பகுதியை மானியமாகவோ அல்லது முழுவதையும் மானியமாகவோ இவ்வாறான கொள்கலன்களை பிரதேச சபை வழங்க முடியும்.

9. ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 11 ஆவது துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமைய ஏதும் கழிவுப்பொருட்களை விடுவித்தல், அழுத்துதல், தயாரித்தல் அல்லது அகற்றுவதற்காக அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில், அவ்வாறு பெற்றுக்கொள்ளத் தவறினால் அவர் அந்தக் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கென அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

10. 11 ஆவது துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமையத் தயாரித்தல், அழுத்துதல் அல்லது அகற்றுதல் செய்யப்படாத ஏதும் கழிவுப்பொருட்கள் மேற்குறித்த துணைவிதி 18 ( iii ) ஆவது ஏற்பாடுகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் சேகரிப்பாளரால் சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருட்களுடன் 8 முதல் 28 வரையுள்ள துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய அகற்றப்படுதல் வேண்டும்.

11. ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பின்வரும் (அ), ( ஆ) வில் கூறப்பட்டவை தவிர்ந்த ஏனைய வழிகளில் கழிவுப்பொருட்களைத் தமது வளவுக்குள்ளேயே அகற்றிவிட முடியும்:-

(அ) அவ்வாறான கழிவுப்பொருட்களை அகற்றுவதை பிரதேச சபை தடை செய்துள்ள பிரதேசங்கள் ;

(ஆ) பிரதேச சபை நிர்ணயித்துள்ள சில கழிவுப்பொருள் வகைகள்.

12. ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அங்கீகரித்த திட்டத்துக்கும் பிரமாணங்களுக்கும் அமையத் தயாரிக்கப்பட்ட சூளையில் அல்லது எரியூட்டியில் கழிவுப்பொருட்களை எரித்துவிட முடியும். இன்றேல், பிரதேச சபைத் தவிசாளரால் அல்லது பிரதேச சபைச் செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அனுமதிக்கப்பட்ட முறைக்கேற்ப கழிவுப்பொருட்களை அழுத்தம் செய்வதற்கும் தயாரிப்பதற்கும் புதைப்பதற்கும் முடியும்.

13. ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் “கூட்டெருக் கொள்கலன்” ஒன்றைப் பெறுவதற்கென பிரதேச சபைத் தவிசாளரிடம் அல்லது பிரதேச சபைச் செயலாளரிடம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் வேண்டிக் கொண்டால் அந்த உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உரிய கூட்டெருக் கொள்கலனைப் பராமரிப்பதற்கான போதிய இடவசதியைக் கொண்டிருந்தால் அதனை உரிய வளவுக்குள் வைத்திருக்க நகரசபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அனுமதி வழங்குவார்.

14. உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வளவினுள் சேரும் "வீட்டுத்தோட்டக் கழிவுகளை" இயன்ற அளவில் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அனுமதித்த விதத்தில் தயாரிக்கவோ அழுத்தச் செய்யவோ முடியும். அந்த உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் எஞ்சியிருக்கும் வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்களை அவற்றின் தன்மைகளைக் கருத்திற்கொண்டு காலத்துக்குக் காலம் சபை தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்தி பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப் பாளாரிடமோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடமோ கையளித்தல் வேண்டும்.

15. வீதியை அல்லது வழியை அடுத்துள்ள வீட்டின் உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் எல்லை வேலியில் வளர்கின்ற மரத்தையோ அல்லது அதன் கிளையையோ வெட்டும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உடனடியாக அவற்றை அப்புறப்படுத்துதல் வேண்டும். இன்றேல் அகற்றிடச் செய்தல் வேண்டும். அதுவுமின்றேல் பிரதேச சபை தீர்மானிக்கும் கொடுப்பன வொன்றைச் செய்து நகரசபையின் பொறுப்பாளரிடம் அவற்றைக் கையளித்தல் வேண்டும்.

16. ஒவ்வொருவரும் தமது கட்டுப்பாட்டின் கீழிருக்கும் ஏதேனும் விலங்குகள் வீதியில், வழியில் அல்லது பொது இடங்களில் மலம் கழிப்பதைத் தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு மலம் கழித்துவிட்டால் 8 முதல் 28 வரையுள்ள துணைவிதிகளுக்கமைய அதனைத் துப்புரவு செய்து அகற்றிவிடுவது உரியவரது பொறுப்பாகும்.

17. வீடொன்றை நிர்மாணிக்கவோ அல்லது திருத்தம் செய்யவோ விண்ணப்பிக்கும் ஒருவர் அவரது வளவுக்குள் உருவாகும் திண்மக்கழிவுப் பொருட்களையும் வெளியிடும் கழிவுப்பொருட்களையும் அழுத்தும் கழிவுப்பொருட்களையும் தயாரித்துக்கொள்ளும் முறைகள் பற்றிய விளக்கங்களைத் தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

18. **வீட்டு வளவுகள்**

நிறைவேற்ற வேண்டிய பணிகள்.

(i) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் கூட்டிப் பெருக்கும் அல்லது வேறேதும் முறையினால் சேகரிக்கும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வழிகளில் (வகைப்படுத்தி) வேறாக்குதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப் பொருட்கள்; .

(ஆ) மீள் பயன்பாட்டு மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப் பொருட்கள்;

(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;

(ஈ) விலங்குகளது இறந்த உடல், உடலுறுப்புக்கள் அசுத்தங்கள்;

(உ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் இவ்வாறு வகைப்படுத்தி வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்களை வெவ்வேறாக உறைகளில் இட்டு, அவை அகற்றப்படும்வரை தமது வளவுக்குள் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வைத்தல் வேண்டும். உணவுக் கழிவுப்பொருட்களையும், உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்களையும் ஈரக்கசிவு ஏற்படாத பொருட்களால் செய்யப்பட்டதும் எலி, கிருமிகள் ஏனைய விலங்குகள் உட்செல்லாத வண்ணம் உரிய வகையில் மூடப்பட்டதுமான கொள்கலன்களில் இட்டுவைத்தல் வேண்டும். விலங்குகளின் இறந்த உடல்கள், உடற்பாகங்கள் அல்லது அசுத்தங்கள் போன்ற கழிவுப்பொருட்கள் அகற்றப்படவேண்டிய தன்மைக்கேற்ப பிரதேசத்துக்கு அமைவான வகையில் அவை காலத்துக்குக் காலம் சபை தீர்மானிக்கும் கட்டணத்தை சபையிடம் செலுத்துவதன் பேரில் பிரதேச சபைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் 18 ஆம் துணைவிதியின் (i)ஆவது உபபிரிவின் (அ), (ஆ), ஆகியவற்றில் விசேடமாகக் குறிப்பிடப் பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும். உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத் தவறுவாரெனில், அவர் (இ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் உரிய கழிவுப்பொருட்களை பிரதேச சபை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். இன்றேல், ஒவ்வொரு கழிவுப்பொருளுக்குமெனச் பிரதேச சபை நிர்மாணித்துள்ள தாங்கிகளிலோ அல்லது உறைகளிலோ இட்டுவைத்தல் வேண்டும்.

19. (i) வாடகைக் குடியிருப்பாளர்களை அதிக அளவில் கொண்டுள்ள பல மாடிக் கட்டடங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமது கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் வேறாக்கி வகைப்படுத்தல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள் பயன்பாட்டு மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப் பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) விலங்குகளது இறந்த உடல், உடலுறுப்புக்கள் அசுத்தங்கள்;
(உ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) 19 ஆம் துணைவிதியின் ( i ) இல் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள், நகரசபைத் தவிசாளரால் அல்லது பிரதேச சபைச் செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கமையவும் தரத்துக்கு அமையவும் பாத்திரங்களையோ அல்லது கொள்கலன்களையோ தயார் செய்துகொள்ளல் வேண்டும். அவற்றைச் சுத்தமான முறையிலும் சுகாதாரமான வகையிலும் பராமரித்தல் வேண்டும்.

(iii) 19 ஆம் துணைவிதியின் (i ) இல் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டடங்களின் ஒவ்வொரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 19 ஆம் துணைவிதியின் (ii) ஆவது உபபிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நடந்துகொள்ளத் தவறும் பட்சத்தில் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அறிவிக்கும் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பாத்திரங்களை அல்லது கொள்கலன்களை வைத்திருக்கும்படி உரிமையாளரை அல்லது குடியிருப்பாளரைக் கேட்டுக்கொள்ள பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அதிகாரமுண்டு. பிரதேச சபைத் தவிசாளரது அல்லது பிரதேச சபைச் செயலாளரது அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரது நியமங்களுக்கமையச் செயற்படுவது உரிமையாளரது அல்லது குடியிருப்பாளரது கடமையாகும்.

(iv) கட்டடமொன்றின் கீழ்த்தளத்தின் அல்லது மேற்றளத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள் வகைப்படுத்தி வேறாக்கிய கழிவுப் பொருட்களை அவற்றுக்கென வைக்கப்பட்டுள்ள உரிய கொள்கலன்களில் இடுதல் வேண்டும்.

(v) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் 19 ஆம் துணை விதியின் (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ), ஆகியவற்றில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும். உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத் தவறுவாரெனில், அவர் ( இ), (ஈ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் உரிய கழிவுப்பொருட்களை நகரசபை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். இன்றேல், ஒவ்வொரு கழிவுப்பொருளுக்குமென பிரதேச சபை நிர்மாணித்துள்ள தாங்கிகளிலோ அல்லது உறைகளிலோ இட்டுவைத்தல் வேண்டும்.

(vi) பிரதேச சபையின் சபைக் கூட்டத்தில் முன் அனுமதியைப் பெற்று சேரிகளில் வாழும் மக்களது பயன்பாட்டுக்கென பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளர் அல்லது அதிகார மளிக்கப்பட்ட அலுவலர் கழிவுப்பொருள் பாத்திரங்களையோ அல்லது கொள்கலன்களையோ இலவசமாக வழங்குதல் வேண்டும்.

(vii) ஒவ்வொரு சேரி வீட்டினதும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் களும் அவர்களது வாழ்விடத்தில் சேரும் கழிவுப்பொருட்களை பின்வரும் வழிகளில் வகைப்படுத்தி, வேறாக்கி அவர்களது வாழ்விடத்திற்கு மிக அண்மையில் வழங்கப்பட்டுள்ள பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் இடுதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் சமிபாட்டுக் கழிவுகள்.

(ஆ) மீள் பாவனை மற்றும் மீள் சுழற்சிக் கழிவுப்பொருட்கள்.

(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்.

(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(viii) 19 ஆம் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவில் (அ), (ஆ) தலைப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை அகற்றுவது தொடர்பாக கழிவுப்பொருள் சேகரிப்பாளருக்கு அனுமதி வழங்க நகரசபைத் தவிசாளருக்கு அல்லது நகரசபைச் செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அதிகாரமுண்டு.

20. **வர்த்தக நிலையங்களும், அலுவலகங்களும்**

(i) வர்த்தக நிலையங்களின் அல்லது அலுவலகங்களின் உரிமை யாளர்கள் அல்லது அலுவலர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் சேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் ஒழுங்கில் வகைப்படுத்தி வேறாக்கல் வேண்டும்:- நிறைவேற்ற வேண்டிய பணிகள்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப் பொருட்கள்;

(ஆ) மீள் பயன்பாட்டு மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப் பொருட்கள்;

(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;

(ஈ) சுற்றாடலை கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) வகைப்படுத்தி வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் அகற்றப்படும் வரை வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்பட்டுப் பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படுதல் வேண்டும்.

(iii) வர்த்தக நிலையமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் உரிமையாளர் அல்லது அலுவலர் 20 ஆம் துணைவிதியின் (i ) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளாரிடம் கையளித்தல் வேண்டும்.

(iv) மேல் தளத்தில் மற்றும் கீழ்த்தளத்தில் சில வியாபார நிலையங்களையோ அல்லது அலுவலகங்களையோ கொண்டுள்ள நிறுவன உரிமையாளர் அல்லது அலுவலர் பிரதேச சபைத் தவிசாளரால் அல்லது பிரதேச சபைச் செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் அனுமதிக்கப்பட்ட தரங்களுக்கு அமைவாக உரிய வர்த்தக நிலையங்கள் அல்லது அலுவலகங்களிலிருந்து வகைப்படுத்தி வேறாக்கும் கழிவுப் பொருட்களைச் சேகரிக்க அல்லது வைத்திருக்க ஒவ்வொரு வர்த்தக நிலையத்துக்கும் அல்லது அலுவலகத்துக்கும் தேவையான கழிவுப்பொருள் பாத்திரங்களை அல்லது கொள்கலன்களை ஏற்பாடு செய்துகொடுத்தல் வேண்டும்.

(v) 20 ஆம் துணை விதியின் (iv ) ஆவது உபவிதியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையத்தின் அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது அலுவலர் வகைப்படுத்தி வேறாக்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்களைத் தனித்தனியான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இட்டு வைத்தல் வேண்டும். 20 ஆம் துணைவிதியின் (i ) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப் பொருள் சேகரிப்போரிடம் கையளிக்க ஒவ்வொரு உரிமையாளருக்கும் அலுவலருக்கும் உரிமையுண்டு.

(vi) அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரால் அகற்றப்படாத, 20 ஆம் துணைவிதியின் (i) ஆவது பிரிவில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகள் மற்றும் 20 ஆம் துணைவிதியின் (i ) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) பகுதிகள் மூலம் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளையும் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைப் பிரதேச சபைத் தவிசாளரிடம் அல்லது பிரதேச சபைச் செயலாளரிடம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் செலுத்துவதன் பேரில் அவற்றை உரிமையாளர் அல்லது அலுவலர் பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(vii) அயலவர்களுக்கும் குறித்த வர்த்தக நிலையத்தின் அல்லது அலுவலகத்தின் பணியாளர்களுக்கும் சுகாதார அல்லது சுகநலக்கேடு ஏற்படாதவாறு கழிவுப்பொருட்களை அகற்றும் 20 ஆம் துணை விதியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் பாத்திரங்கள் மற்றும் கொள்கலன்கள் என்பவற்றைப் பராமரித்து வருவது உரிய வர்த்தக நிலையத்தின் அல்லது அலுவலகத்தின் உரிமையாளரது அல்லது அலுவலரது பொறுப்பாகும்.

21. **சிற்றுண்டிச் சாலைகள்**

(i) ஒரு சிற்றுண்டிச்சாலைக்காரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நபரொருவர் தமது வளவுக்குள் சேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் தெரிவுசெய்து வேறாக்குதல் வேண்டும் அல்லது அவ்வாறு செய்ய ஏற்பாடு செய்தல் வேண்டும்:- நிறைவேற்ற வேண்டிய பணிகள்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;

(ஆ) மீள் பயன்பாட்டு மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப் பொருட்கள்;

(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;

(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) ஒவ்வொரு சிற்றுண்டிச்சாலைக்காரரும் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டவரும் தெரிவுசெய்து வகைப்படுத்தி வேறாக்கிய கழிவுப்பொருட்களை அகற்றும்வரை வெவ்வேறாகப் பொருத்தமான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இட்டுப் பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு சிற்றுண்டிச்சாலைக்காரரும் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்டவரும் ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது வேறேதும் பிராணிகள் உட்செல்வதைத் தடுக்கும் வகையில் எல்லா உணவுக் கழிவுப்பொருட்களையும் உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்களையும் பிளாஸ்ரிக் அல்லது உலோகத்தினால் செய்யப்பட்ட மூடிகளைக் கொண்டு பாதுகாப்பாகச் சரியாக மூடிய பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் வைத்திருத்தல் வேண்டும்.

(iv) 21 ஆம் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(v) 21 ஆம் துணைவிதியின் (iv) ஆவது உபபிரிவின் படி கையளிக்கப்படாத அவ்வாறான ஏதும் கழிவுப்பொருட்கள் மற்றும் (i) ஆவது உபபிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள், அவற்றின் தன்மையைக் கருத்திற்கொண்டு சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் வண்ணம் உரிமையாளர் அல்லது அலுவலர் கட்டணமொன்றைச் சபையிடம் செலுத்துவதன் பேரில் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

22. **காய்கறிகள், பழவகைகள் விற்பனை நிலையங்கள்**

நிறைவேற்ற வேண்டிய பணிகள்.

(i) காய்கறிகள் விற்பனை நிலையம், பழவகை விற்பனை நிலையம் ஒவ்வொன்றினதும் உரிமையாளர் அல்லது பொறுப்பாக இருக்கும் நபர் தமது வளவுக்குள் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் தெரிந்து வேறாக்குதல் வேண்டும்:-

(அ) மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற காய்கறிகள், பழவகைகள் மற்றும் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப் பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்

(ii) 22 ஆம் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (அ) பகுதியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை ஈரக்கசிவு ஏற்படாத வகையில் பிளாஸ்ரிக் அல்லது உலோகத்தினாலான தனியான கொள்கலனில் இட்டுவைத்தல் வேண்டும். அதனுள்ளே ஈக்கல், எலிகள், கிருமிகள் மற்றும் ஏனைய பிராணிகள் உட்புகாத வண்ணம் உரிய வகையில் பாதுகாப்பாக மூடி வைத்திருத்தல் வேண்டும். ஏனைய கழிவுப்பொருட்களைப் பொருத்தமான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடுதல் வேண்டும்.

(iii) 22 ஆம் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவில் (அ), (ஆ), (இ) பகுதிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருட்களை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுப் பொருட்களை 22 ஆம் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்து சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் சபையில் செலுத்துவதன் பேரில் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கலாம்.

## 23. நடைபாதை வியாபாரம்

(i) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் மூலம் உண்டாகும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் வேறாக்கி வகைப்படுத்துதல் வேண்டும்:- நிறைவேற்ற வேண்டிய பணிகள்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;

(ஆ) மீள் பயன்பாட்டு மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;

(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;

(ii) வேறாக்கி வகைப்படுத்திய கழிவுப்பொருட்களைப் பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் வேறாக இட்டுவைத்தல் வேண்டும். 23 ஆம் துணை விதிகளின் (i) ஆவது உப பிரிவின் (அ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கிருமிகள், எலிகள் அல்லது விலங்குகளால் தின்றழிக்கக்கூடிய கழிவுப்பொருட்களைப் பாதுகாப்பான கொள்கலன் ஒன்றுக்குள் இட்டு வைத்திருத்தல் வேண்டும். அத்துடன், மேலதிக கழிவுப் பொருட்களைப் போடுவதற்கல்லாத ஏனைய நேரங்களில் அதனை மூடியே வைத்திருத்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் கழிவுப்பொருட் பாத்திரங்களை அல்லது கொள்கலன்களை பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப் பாளரிடம் கையளிக்க முன்னர் பிரதேச சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

## 24. தொழிற்சாலைகள்

(i) தொழிற்சாலைகளது ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது உற்பத்தியாளரும் தொழிற்சாலை வளவுக்குள் உருவாகும் கழிவுப்பொருட்களை ஒன்று சேர்த்துப் பின்வரும் முறைக்கேற்ப வகைப்படுத்தி வேறாக்குதல் வேண்டும்:- நிறைவேற்ற வேண்டிய பணிகள்.

(அ) உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப் பொருட்கள்;

(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;

(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) 24 ஆம் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ), பகுதிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும். அவ்வாறு கையளிக்க முடியாமற்போன கழிவுப்பொருட்களைச் பிரதேச சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் பிரதேச சபையிடம் செலுத்துவதன் பேரில் பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(iii) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்த தொழில் முயற்சிக்கென வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகத் தொல்லை தரும் கழிவுப்பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

**25. அகழ்தல், நிர்மாணித்தல் மற்றும் தகர்த்தல்**

நிறைவேற்ற வேண்டிய பணிகள்.

(i) வீதியொன்றை, பாதையொன்றை அல்லது பொது இடமொன்றை அகழ்தல் ஏதேனும் நிர்மாணமொன்றைக் கட்டியெழுப்புதல் அல்லது தகர்த்தலின்போது உருவாகும் கழிவுப்பொருட்களைப் பொருத்தமான முறையில் குறித்த வளவிலிருந்து அகற்றும்வரை வளவுக்குள்ளே பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அனுமதித்த இடத்தில் களஞ்சியப் படுத்தி வைத்தல் வேண்டும்.

(ii) 25 ஆம் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை பிரதேச சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றை பிரதேச சபையில் செலுத்துவதன் பேரில் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

26. (i ) எரிவாயு, மின்சாரம், தண்ணீர், தொலைபேசி ஆகிய வசதிகள் அல்லது ஏனைய பொது வசதிகளை வழங்கும்போது யாதேனும் வீதியொன்றை, பாதையொன்றை அல்லது பொது இடமொன்றை ஒருவர் அகழ்வதற்கு பிரதேச சபைத் தவிசாளரிடம் அல்லது பிரதேச சபைச் செயலாளரிடம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் முன் அனுமதி பெறுதல் வேண்டும்.

(ii) மேற்குறித்த 26 ஆம் துணைவிதியின் (i) ஆவது விதியின் கீழ் அனுமதி வழங்கப்பட முன்னர் கழிவுப்பொருட்களை அகற்ற மேற்கொள்ளப் படவுள்ள திட்டம், உத்தேச கருமம் நிறைவேறிய பின்னர் பாதையில் அல்லது பொது இடத்தில் தற்காலிகமாக வைக்கவேண்டி ஏற்பட்ட கழிவுப்பொருட்களை விண்ணப்பதாரி அகற்றிவிடப் பின்னிற்பாரெனின், அவற்றை அகற்றிவிட ஏற்படும் செலவுகள் பற்றியும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர் விண்ணப்பதாரி உத்தேசமாகக் கணிக்கப்பட்ட செலவுக்குச் சமமான ஒரு தொகையை வைப்புத் தொகையாக வைத்தல் வேண்டும்.

(iii) எவரேனும் ஒருவர் கழிவுப்பொருட்களை முழுமையாகவோ அல்லது அவற்றின் ஒரு பகுதியையோ அகற்றாது விடுவாரெனின் அல்லது அகற்றுவதில் அசட்டையாக இருந்துவிடுவாரெனின், பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளர் அல்லது அதிகார மளிக்கப்பட்ட அலுவலர் தீர்மானிக்கும் முறையில் குறித்த கழிவுப்பொருட்கள் அகற்றப்படுவதுடன், அதற்கெனச் செலவாகும் தொகை 26 ஆம் துணைவிதியின் (ii) ஆவது உப பிரிவின் படி வைப்புத் தொகையிலிருந்து கழிக்கப்படும்.

27. **மருத்துவமனைகள்**

(i) மருத்துவ மனையொன்றின் உரிமையாளர் வளவுக்குள் உருவாகும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வழிகளில் தெரிந்து வகைப் படுத்துதல் வேண்டும்:- நிறைவேற்ற வேண்டிய பணிகள்.

(அ) உணவுக் கழிவுப்பொருட்களும் ஏனைய உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;

(ஆ) மீள்பாவனைக் கழிவுப்பொருட்களும் மீள்சுழற்சிக் கழிவுப் பொருட்களும்;

(இ) இந்த உபவிதியின் ( ஈ) வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகை தவிர்ந்த ஏனைய கழிவுப்பொருட்கள்;

(ஈ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;

(உ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) 27 ஆம் துணைவிதியின் ( i ) ஆவது உபபிரிவின் கீழ் ( அ), (ஆ), பகுதிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை வெவ்வேறான கொள்கலன்களில் இட்டு, அவை அகற்றப்படும்வரை பொருத்தமான இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். (i ) ஆவது உபபிரிவின் கீழ் ( இ), (ஈ) பகுதிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை அவற்றுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் இட்டுவைத்தல் வேண்டும். அத்துடன் அவற்றுக்கென வேறாக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் அவற்றைக் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் குறித்த மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய குறித்த கழிவுப்பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

(iii) 27 ஆம் துணைவிதியின் ( i ) ஆவது உபபிரிவின் ( அ), (ஆ), வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடமோ அல்லது பிரதேச சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துவதன் பேரில் பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப் பாளரிடமோ கையளிக்க முடியும்.

28. **ஏனைய வளவுகள்**

நிறைவேற்ற வேண்டிய பணிகள்.

(i) 8 முதல் 27 வரையிலான துணை விதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டிராத வர்த்தக முயற்சியை மேற்கொள்ளும் எவரேனும் ஒருவர் பொதுமக்களது பங்களிப்புடன் பொது, சமய, சமூக, கலாசார அல்லது கல்விச் செயற்பாடொன்றை ஏற்பாடு செய்யும் அல்லது செயற்படுத்தும் ஒருவர் குறித்த செயற்பாட்டின் மூலம் அல்லது அவற்றுக்கான நிகழ்வு ஒன்றை நடத்திச் செல்லும்போது உண்டாகும் கழிவுப் பொருட்களைப் பின்வரும் முறைகளில் தெரிந்து வகைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப்பொருள் மற்றும் ஏனைய உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப் பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) 28 ஆம் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயற்பாடொன்றை ஏற்பாடு செய்யும் ஒருவர் அந்தச் செயற்பாட்டின் காரணமாக உருவாகும் கழிவுப் பொருட்களைச் சேகரிப்பதற்கென விசேட வேலைத் திட்டத்தைக் கையளிப்பதற்கு இயலுமான வகையில் நேரகாலத்தோடு சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(iii) தெரிந்து வகைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருட்கள் அகற்றப்படும் வரை தனியான கொள்கலன்களில் இட்டுப் பொருத்தமான இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(iv) 28 ஆம் துணைவிதியின் (i) ஆவது உபவிதியின் (அ), (ஆ), பகுதிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப் பொருட்களை அதிகார மளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் அல்லது (i) ஆவது உபபிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறித் துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்து பிரதேச சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துவதன் பேரில் பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

29. **வீதிகள் மற்றும் பொது இடங்கள்**

நிறைவேற்ற வேண்டிய பணிகள்.

பிரதேச சபைச் செயலாளரினால் பிரதேச சபைத் தவிசாளருடன் கலந்துரையாடிச் சபையின் அங்கீகாரத்திற்காக பின்வரும் கருமங்களைத் திட்டமிடவும், கட்டுப்படுத்தவும், நிர்வகிக்கவும் வழிவகைகள் செய்தல் வேண்டும்:-

(i) பிரதேச சபையின் அதிகார பிரதேசத்துக்குள் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள், வழித்தடங்கள், பொதுவடிகான்கள், நீர் வடிந்தோடும் வழிகள் மற்றும் பொதுச் சந்தைகளைச் சுத்தமாகவும் சுகாதாரமான முறையிலும் பேணிவருதல்;

(ii) வீதிகள், பாதைகளின் இருமருங்கிலும் மற்றும் பொது இடங்களிலும் தேவையான எண்ணிக்கையில் கொள்கலன்களை வழங்கிப் பொருத்துவதும் அவற்றைப் பராமரிப்பதும்;

(iii) விழாக்காலங்களில், விசேட நிகழ்ச்சிகள் நடைபெறும் காலங்களில் அல்லது பிரதேச சபை தீர்மானிக்கும் காலங்களில் குறித்த விழாக்களையோ அல்லது விசேட நிகழ்ச்சிகளையோ ஏற்பாடு செய்வோரது வேண்டுகோளின் பேரில் பொது இடங்களில் பயன்படுத்துவதற்கென நடமாடும் கொள்கலன்களை வழங்குவது;

(iv) வதிவிடப் பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ள பொதுக் கழிவுப்பொருட் தொட்டிகள் அல்லது கொள்கலன்களைச் சுகாதாரமான முறையில் பேணிவருதலும் அவற்றின் அருகில் குடியிருப்போருக்கு அவை தொல்லையாக மாறுவதற்கு முன்னர் தொட்டிகளிலும் கொள்கலன்களிலும் இடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை அகற்றுதலும்;

(v) ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள துணைவிதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் பற்றி கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை ஆராய்ந்து பார்த்து அதற்கென துரிதமாகச் செயற்படுவது.

நிறைவேற்றக் கூடாத பணிகள்.

30. உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள், வீட்டிலுள்ளோர், விருந்தினர் அல்லது அண்டைவீட்டாரது சுகாதாரத்துக்கோ, அப்பிரதேசத்தின் சுகநல வசதிகளுக்கோ ஊறு விளைவிக்கும் வண்ணம் அபாயகரமான வகையில் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதோ களஞ்சியப்படுத்துவதோ அல்லது அகற்றுவதோ கூடாது.

31. எவரேனும் ஒருவர் கழிவுப்பொருட்களை வீதியிலோ, பாதையிலோ, வழிகளிலோ, ஒழுங்கைகளிலோ, தெருவிலோ அல்லது ஏனைய பொது இடங்களிலோ அல்லது சுற்றாடலிலோ, வடிகானிலோ அல்லது நீரோடையிலோ, நீர்த்தேக்கத்திலோ அல்லது கடலிலோ விடுவித்துச் செல்லுதல் கூடாது.

32. பிரதேச சபையின் பிரதேசத்துக்குள் திறந்த வெளியில்/வீதிகளில் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் கழிவுப்பொருட்களை எவரும் எரித்தல் கூடாது.

33. பிரதேச சபைப் பிரதேசத்துக்குள் எவரும் எவ்வகையான கழிவுப் பொருட்களையும் வாகனத்திலிருந்து வீதியிலோ வழியிலோ அல்லது பொது இடங்களிலோ இட்டுச் செல்லுதல் அல்லது வீசுதல் அல்லது வைத்துவிட்டுச் செல்லுதல் கூடாது.

34. குறித்த கருமங்களுக்கென செயலாளர் மூலம் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின்படி அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் எவரேனும் ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதி பெறப்பட்ட விலங்குகள் பறவைகள் தவிர ஏனைய எந்த விலங்கையோ அல்லது பறவையையோ வேறு இடத்தில் கொல்லுதல் கூடாது.

35. கழிவுப்பொருட்களைத் தோற்றுவிக்கும் வியாபாரமொன்றைச் செய்துவரும் நடைபாதை வியாபாரி ஒருவர் பிரதேச சபைத் தலைவரால் அல்லது பிரதேச சபைச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துக்கு அமைய அந்தக் கழிவுப் பொருட்களை இட்டுவைப்பதற்காகப் பாத்திரமொன்றையோ, கொள்கல னொன்றையோ வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறான கழிவுப்பொருட்கள் எவற்றையும் நடைபாதையிலும், வீதியிலும் அல்லது பொது இடங்களிலும் இட்டுவைத்தல் கூடாது.

36. நடைபாதை வியாபாரியொருவர் வாகனங்களினதும் பாதசாரிகளினதும் போக்குவரத்துக்குத் தடையேற்படும் வகையில் பாத்திரங்களையும் ஏனைய கொள்கலன்களையும் வைத்திருத்தல் கூடாது.

37. ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் 28 ஆம் துணை விதியின் (i) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளர் அல்லது இந்தத் துணை விதியின் (i) ஆவது உப பிரிவின் (இ) பிரிவில் விசேடமாகக் குறிக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளுடன் பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் நாளாந்தம் கையளித்தல் வேண்டும். வியாபாரம் நடத்தப்படாத அல்லது நடாத்தப்படும் சந்தர்ப்பங்களில் கழிவுப்பொருள் பாத்திரங்களையோ அல்லது கொள்கலன்களையோ நடைபாதையில், வீதியில் அல்லது பெருந்தெருவில் வைத்தல் கூடாது.

38. பிரதேச சபை மூலம் விசேடமாக அழுக்குகள், கழிவுகளுக்கென வழங்கப்படும் தொட்டிகளில் ஈரலிப்பான, வர்த்தக, நிறுவக, கைத்தொழில் சார்ந்த அல்லது ஏனைய கழிவுப்பொருட்களைக் களஞ்சியப்படுத்துதல் கூடாது.

39. அனுமதி இல்லாத எவரும் பிரதேச சபையினால் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கென ஒதுக்கியுள்ள பிரதேசங்களுக்குள் கீழ்வரும் செயற்பாடுகளை செய்தல் கூடாது ;

அனுமதி இல்லாது உட்செல்லவோ நடமாடவோ கூடாது ;

அப்பிரதேசத்தினுள் ஏதும் பொருட்களை கொட்டுதலோ அல்லது இருக்கும் நிலையை மாற்றியமைத்தலோ அல்லது அகற்றவோ கூடாது ;

விசேடமாக விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கமைய எவரும் பிரதேச சபை அனுமதித்தாலன்றி காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் ஏதும் தடை செய்யப்பட்ட கழிவுப்பொருட்களை கொட்டுதல் கூடாது.

40. பிரதேச சபைத் தவிசாளரது அல்லது பிரதேச சபைச் செயலாளரது மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினது எழுத்துமூல முன் அனுமதியில்லாது பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள காணியொன்றை அல்லது வளவொன்றை, அதற்கு வெளியில் உருவாகும் கழிவுப்பொருட்களை கொட்டுதலுக்கு வழங்குதல் அல்லது பயன்படுத்துதல் கூடாது.

பிரதேச சபையின் பணி.

41. பிரதேச சபைச் செயலாளரினால் பிரதேச சபைத் தவிசாளருடன் கலந்துரையாடிச் சபையின் அங்கீகாரத்திற்காக பின்வரும் கருமங்களைத் திட்டமிடவும், கட்டுப்படுத்தவும், நிர்வகிக்கவும் வழி வகைகள் செய்தல் வேண்டும்:-

(i) கழிவுப்பொருட்களைக் குறைப்பது, மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி என்பவற்றில் பொதுமக்களை ஈடுபடவைத்தல் என்பதுடன் இச்செயற்பாட்டில் ஈடுபடுவோரை மேலும் ஊக்குவித்தல்;

(ii) கழிவுப்பொருட்களைத் தெரிந்து வகைப்படுத்துதல் சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், விடுவித்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக அறிவுறுத்தும் திட்டங்களைச் செய்தல் அல்லது ஊடகங்கள் வாயிலாகப் பிரச்சாரப்படுத்துதல்;

(iii) மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறிய தொழில் முயற்சியாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

(iv) கழிவுப்பொருட்களை விடுவிக்கும்(அகற்றும்) முறைகள் பற்றிய வேறு மாதிரிகளை முன்னோடியாகக் கொள்ளுதல்;

(v) பிரதேச சபையின் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு கழிவுப்பொருள் வகைக்குமென சபை தீர்மானிக்கும் கழிவுப்பொருட்கள் சேகரிக்கும் நாட்கள், நேரங்கள், முறைகள், கட்டணங்கள் மற்றும் விடுமுறை நாட்களில் கழிவுப்பொருட்கள் சேகரிப்பது தொடர்பான நிபந்தனைகள் பற்றிய விபரங்களைக் குறிப்பிட்டு காட்டும் அட்டவணைக் குறிப்பொன்றைத் தயாரித்து மக்களுக்கு அறிவித்தல்;

(vi) அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கப் படாத கழிவுப்பொருட்களையும் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்களையும் அட்டவணைக் குறிப்புக்கு ஏற்ப உரிய நேரத்தில் சேகரித்தல்;

(vii) அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கப் படாத அபாயகரமான கழிவுப்பொருட்கள் மற்றும் வேறேதும் கழிவுப் பொருட்களையும் சுகாதாரமான முறையில் கொண்டு செல்லுதல்;

(viii) அபாயகரமான கழிவுப்பொருட்கள் அல்லது பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பிரகடனப்படுத்திய வேறு ஏதும் கழிவுப்பொருள் வகைகள் தவிர்ந்த, வீதியைக் கூட்டிப் பெருக்கும்போதும் பொது இடங்களைத் துப்புரவு செய்யும்போதும் வடிகான்களைச் சுத்தம் செய்யும்போதும் சேர்க்கப்படும் கழிவுப்பொருட்களையும் பொதுத் தொட்டிகளிலிருந்து சேர்க்கப்படும் கழிவுப்பொருட்களையும், பிரதேச சபையின் பணியாட்கள் சேகரிக்கும் கழிவுப்பொருட்களையும் அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப் பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல்;

(ix) பிரதேச சபை கழிவுப்பொருள் சேகரிப்பாளர் மூலம் சேகரிக்கப்பட்ட, உணவு மற்றும் ஏனைய உயிரியல் சமிபாட்டு மீள்பாவனைக் கழிவுப் பொருட்களைச் செயற்பாட்டு ரீதியில் இயன்ற அளவில் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ பதப்படுத்துவதற்கும் அழுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதுடன், இந்தச் செயன் முறைகளிலிருந்து நிராகரிக்கப்படும் மற்றும் இந்தக் கழிவுப்பொருட்களின் ஏனைய எச்சங்கள் என்பவற்றையும் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அங்கீகரிக்கும் முறை யொன்றுக்கு ஏற்ப வெளியேற்றவும் நடவடிக்கை எடுத்தல்;

(x) மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபை செயலாளர் கலந்துரையாடியபின் அங்கீகரிக்கும் முறைக்கேற்ப எல்லா அபாயகரமான கழிவுப்பொருட்களையும் அகற்றச் செய்தல்;

(xi) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடு களுக்கமைய அனுமதிப்பத்திரத்தையோ அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தையோ பெற்றுக்கொள்வதுடன், குறித்த அனுமதிப்பத்திரத்திலோ அல்லது சுற்றாடல் அனுமதிப்பத்திரத்திலோ விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை களுக்கமைய கழிவுப்பொருட்களை எரியூட்டுதல் அல்லது சுகாதாரமான வகையில் தரை நிரப்புகையொன்றை நடத்திச் செல்லுதல்;

(xii) கழிவுப்பொருட்களைக் கூட்டிப் பெருக்குதல், சேகரித்தல், தெரிவுசெய்தல், வகைப்படுத்துதல், போக்குவரத்து செய்தல், மாற்றுதல் மற்றும் அகற்றுதல் போன்ற கருமங்களில் ஈடுபடும் ஒவ்வொரு பணியாளருக்கும் பொருத்தமான ஆடைகள், கையுறைகள், முகமூடிகள், பாதணிகள் என்பவற்றை வழங்குதல்;

(xiii) வீடு அல்லது வளவொன்றை நிர்மாணிப்பதற்கோ அல்லது திருத்தியமைக்கவோ சபைக்கு விண்ணப்பித்திருக்கும் சந்தர்ப்பத்தில் நிர்மாணம் அல்லது திருத்த வேலையின் போது உருவாகும் திண்மக்கழிவுப்பொருட்களை களஞ்சியப்படுத்தும், அகற்றும் வழிமுறைகள் பற்றிய விபரங்களைப் பரிசீலித்தலும் அனுமதித்தலும்;

(xiv) பிரதேச சபை அமைந்துள்ள இடத்தின் உள்ளகக் கழிவுப்பொருள் முகாமைக்குரிய திட்டமொன்றைத் தயாரித்தல்;

(xv) 2000 ஆம் ஆண்டின் திண்மக் கழிவுப்பொருள் முகாமை பற்றிய தேசிய உபாய வழிகளுக்கும் உரிய சட்டங்களுக்கும் அமைய குறைந்தது ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்துக்குமென விரிவான விளக்கங்கள் கொண்டதாகவும் இறுதியான அகற்றுதல்கள் சம்பந்தமாகவும் எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கான கழிவுப்பொருள் முகாமையைச் செயற்படுத்தும் திட்டமொன்றைத் தயாரித்தலும், செயற்படுத்துதலும், அந்தத் திட்டத்தை உரிய கால எல்லைக்கு ஏற்றவாறு தொடரொழுங்கின் அடிப்படையில் சபை மூலம் வருடாந்தம் அங்கீகரித்தல்;

(xvi) 41 ஆம் துணைவிதியின் (i) விலிருந்து (xv) வரையுள்ள பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக தவிசாளருக்குக் கிடைக்கப்பெறும் ஏதும் முறைப்பாடுகள் மீது, ஏற்படவுள்ள தொல்லைகள் பற்றியதாயின் மூன்று நாட்களுக்குள்ளும், ஏனைய முறைப்பாடுகளெனின் பதினான்கு நாட்களுக்குள்ளும் ஆய்வு செய்வதுடன் உடனடியாக நடவடிக்கை எடுத்தல்;

42. (i) கழிவுப்பொருட்களை மீள்பயன்பாட்டுக்கோ மற்றும் மீள் சுழற்சிக்கோ பயன்படுத்தும்போது அல்லது கூட்டெரு, உயிர்வாயு அல்லது வேறெதும் தயாரிப்புக்கு உட்படுத்தும் ஒருவர் பின்வரும் அம்சங்களை நிறைவு செய்வாரெனின் அவருக்குச் பிரதேச சபை உரிமப்பத்திரம் ஒன்றை வழங்க முடியும்:- அறவீடுகளும் கட்டணங்களும்.

(அ) பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்குள் சபை மூலம் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகளுக்கேற்ப தொழில் முயற்சியினை செய்து வருதல்.

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வழங்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் ஒன்றை வைத்திருத்தல்;

(இ) சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருட்களுக்கென பிரதேச சபை அனுமதித்த தரத்துக்கு அமைவாக நிர்மாணிக்கப்படும் கழிவுப்பொருள் சேகரிக்கும் நிலையங்களுக்கு அனுமதி வழங்குதல்;

(ஈ) தவிசாளரால் அல்லது செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட வகையில் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்கள் மக்களுக்குத் தொல்லைகள் ஏற்படாதவாறு சுகாதாரமான முறையில் போக்குவரத்துச் செய்வதற்காக வாகன ஏற்பாடுகளைச் செய்தல்;

(உ) உரிய தொழில் முயற்சியை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் நடத்திச் செல்லும் நிறுவனம் கழிவுப் பொருட்களை மீள் சுழற்சிக்கு பயன்படுத்தும் போது அல்லது அழுத்தும்போது மிஞ்சும் எச்சங்களையோ அல்லது மறுக்கும்போது தோன்றும் துணை உற்பத்திகளாக மாற்றப்படாத கழிவுப் பொருட்களை பிரதேச சபை அனுமதித்தவாறு பிரதேச சபையிடம் கையளிக்க இணக்கம் தெரிவிப்பதுடன் பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கென தீர்மானிக்கும் கட்டணமொன்றை பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டும்.

(ii) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவதை பிரதேச சபையினால் நிராகரிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது மறுக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கான காரணத்தை விண்ணப்பதாரி கோருவாராயின், நிராகரிப்புக்கான அல்லது மறுப்பதற்கான காரணங்களை விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

(iii) பிரதேச சபையால் கழிவுப்பொருள் சேகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையங்களின் உரிமப்பத்திரத்தில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்களின் வகைகள், கழிவுப்பொருளைச் சேகரிக்க அனுமதி வழங்கப்பட்ட பிரதேசம் மற்றும் ஏனைய பொருத்தமான நிபந்தனைகள் என்பவற்றை குறித்துக் காட்டுதல்.

(iv) 43 ஆம் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படாத வேளைகளில் இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்படும் உரிமப்பத்திரம் இரத்துச் செய்யப்படும்.

(v) 43 ஆம் துணைவிதியின் (iv) ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் உரிமப்பத்திரமொன்று இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் எவரேனும் ஒருவர் கழிவுப்பொருட்களைச் சேகரித்தல் அல்லது பெறுதல் கூடாது. அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது உரிமப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனப் பொதுமக்களை அறிவூட்டு வதற்காக பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபைச் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஊடகங்கள் வாயிலாகப் போதுமான அளவில் பிரச்சாரம் செய்தல் வேண்டும்.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

43. இத் துணைவிதியில் பிரதேச சபைத் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

உரிமப்பத்திரத்தின் அல்லது உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம்.

44. இந்த துணை விதிகளின் கீழ் வழங்கப்படுகின்ற சகல உரிமப்பத்திரங்களும் முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி உரிமப்பத்திரம் எந்த வருடத்தில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

45. இத்துணை விதிகளில் விதிக்கப்பட்ட நியதிகளை, உரிய காலப்பகுதிக்குள் இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்ட இடங்களில் / வளவுகளில் பரிசோதனை மேற்கொள்வதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு.

46. இத்துணை விதிகளில் குறிப்பிட்ட இடங்களை / வளவுகளை பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது இத்துணைவிதிகளில் குறிப்பிட்ட இடங்களின் உரிமையாளர் / சொந்தக்காரரின் / குடியிருப்பாளரின்/உரிமப்பத்திரம் பெற்றவர் ஆகியோரின் பணியாதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான ஏதேனும் ஒரு பரிசோதனையை நிறுத்துவதற்கு தடைகளை ஏற்படுத்துதல் கூடாது.

47. இந்த துணைவிதிகளில் ஏதேனும் ஒரு பிரிவிற்கு குறிப்பிட்ட இடங்களின் உரிமையாளர்/குடியிருப்பாளர், உரிமப்பத்திரம் பெற்றவர் முரண்படும் சந்தர்ப்பத்தில் உடனடியாகவோ குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னரோ உரிய இடத்தை இந்த நியதிகளுக்கு ஏற்புடைய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்டவரிடம் அறிவித்தல் ஒன்றை பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகார மளிக்கப்பட்ட உத்தியோகத்தர் கையளித்தல் வேண்டும்.

48. 47 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப்பெற்ற எந்தவொருவரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட நேரத்திற்கும், திகதிக்கும் முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல்வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குத் தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

பரிசோதனை நடைமுறையும், தத்துவமும். (48 -49)

49. 47 மற்றும் 48 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எந்தவொரு உரிமப்பத்திரதாரரும் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறும் பட்சத்தில் இந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு சட்ட ரீதியான தத்துவம் உண்டு .

முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

50. உரிமப்பத்திரதாரரோ அல்லது சம்மந்தப்பட்ட யாராயினுமொருவரோ எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ் அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு 14 நாட்களுக்குள் தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

துணைவிதிகளை மீறுதல்.

51. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும்.

அபராதமும் தண்டனையும்.

52. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் உபபிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

பொருள்கோடலும் வரைவிலக்கணமும்.

53. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து,

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

''பிரதேச சபை செயலாளர்'' என்பவர் ஏதேனும் பிரதேசம் தொடர்பிலாயின் இந்த பிரதேச சபைக்கு பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படுகின்ற அல்லது கூட்டிணைக்கப் பட்டதாகக் கருதப்படுகின்ற பிரதேச சபையின் செயலாளர் எனப் பொருள்படும். இந்த பிரதேச சபையின் செயலாளராக செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளொருவரும் செயலாளரின் தத்துவங்களுள் அல்லது கடமைகளுள் எவற்றையேனும் புரிவதற்கு அல்லது அதன் கீழ் நிறைவேற்றுவதற்கு பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் தத்துவமளிக்கப்பட்டுள்ள எவரேனும் அலுவலர் ஒருவரும் இந்த அலுவலருக்கு அவ்வாறு தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள அளவும் இதில் உள்ளடங்கும் .

''பிரதேச சபை'' என்பது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

" அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பவர் உரிய பணிக்கு பிரதேச சபை தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப் பட்ட ஏற்புடைய பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

''உரிமப்பத்திரதாரர்'' என்பவர் இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழ் உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவர் என பொருள்படுவதுடன் இந்த உரிமப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் குறித்த பணிக்காக இந்த இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவராவார்.

''உரிமப்பத்திரம் பெற்ற இடம்'' என்பது இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டதும் இந்த துணைவிதிகளின் நியதிகளின் கீழான எல்லா நடவடிக்கைகளுக்குமாகப் பயன்படுத்தப்படுவதுமான இடம் அல்லது இடங்கள் எனப் பொருள்படும்.

" பரிசீலனை செய்வதற்கு தத்துவமளிக்கப்படும் உரிய காலம்" என்பதனால் உரிய இடத்தில் வியாபார நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற எந்நேரமும் எனக் கருதப்படும்.

''அலுவலகம்'' என்பது 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வர்த்தக நிலையங்கள் மற்றும் அலுவலகங்கள் என்பவற்றில் பணியாற்றுவோர் பற்றிய சட்டத்தின் ( 129 ஆவது அதிகாரத்தில்) குறிப்பிடப்பட்டுள்ள அர்த்தமே தரும்.

''உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்'' என்பது ஏதேனும் வளவின் / வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது வளவின்/வர்த்தகத்தின் அல்லது அலுவலகத்தின் பொறுப்பாளராவார்.

''வர்த்தக நிலையம்'' என்பது மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்துக்காகப் பண்டங்களை வைத்திருக்கும் நிலையமாகும். மேலும் உணவு வகைகள், பான வகைகள் என்பவற்றை வைத்திருக்கும் நிலையமும் சிகை அலங்கார நிலையம் அழகுக்கலை நிலையம் நடத்திச் செல்லப்படும் இடம் எனவும் கொள்ளப்படும்.

''சிற்றுண்டிச்சாலை'' என்பது உறங்கும் வசதிகள் உள்ள அல்லது இல்லாத, பணம் செலுத்தி நுகர்வுக்காக உணவு வகைகள் பான வகைகள், மது வகைகள் என்பவற்றை வழங்கும் நிலையம் எனப்படும். இதற்கு உணவு விடுதி, விருந்தினர் விடுதி, தங்குமிடம், வாடிவீடு, யாத்திரிகர் தங்குமிடம், சோற்றுக்கடை அல்லது சிற்றுண்டிச்சாலைக்குச் சமமான வர்த்தகத்தை மேற்கொள்ளும் ஒரு வளவையும் குறிப்பிடும் பொருள் கொள்ளப்படும்.

''தொழிற்சாலை'' என்பது 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க கைத்தொழில்கள் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதேனும் மூலப்பொருளை உபயோகித்து பண்டமொன்றை அல்லது வேறு பொருளொன்றை உற்பத்தி செய்கின்ற அல்லது வேறு தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் உற்பத்தியை உபயோகித்து வேறு ஏதேனும் பண்டத்தை அல்லது பொருளை உற்பத்தி செய்கின்ற இடம் எனக் கருதப்படும்.

''கழிவுப்பொருட்கள்'' அல்லது திண்மக்கழிவுப் பொருள் என்பது மண், சேறு, தூசு, சாம்பல் மற்றும் கழிவுப்பொருட்களையும் கட்டடங்களைத் தகர்க்கும்போது பெறப்படும் கழிவுப் பொருட்களையும் அத்துடன் குப்பைகள் வீதிகளை சுத்தம் செய்யும்போது சேரும் கழிவுப் பொருட்களையும் குறிக்கும்.

''மருத்துவமனை'' என்பது நோயொன்றினால் அல்லது இயலாமையினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது விலங்குகளை கையேற்று அவற்றுக்கு பரிகாரம் செய்வது மற்றும் பரிகாரம் செய்வதற்கான தங்குமிட வசதிகளை வழங்குவதற்கெனப் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்த உத்தேசித்துள்ள ஏதும் வளவு(எவ்வகையில் விளக்கம் சொல்லப்பட்டாலும்) எனப்படுவதுடன், நோய் பரிகார விடுதி, கிளினிக், மருத்துவ நிலையம், மகப்பேறு மனை மற்றும் மிருக வைத்திய நிலையம் விலங்கு மருத்துவ மனை என்பனவும் இதிலடங்கும்.

''தொல்லை தரும் பாதுகாப்புக் கழிவுப்பொருட்கள்'' என்பது உறுப்புக்களின் பகுதிகள், குருதிக்கட்டிகள், நோய் பரவுவதற்கு இடமுள்ள மற்றும் கடுமையாகப் பரவக்கூடிய கழிவுப்பொருட்களும் மருந்து ஊசிகளும் அடங்கும்.

“தொல்லைதரும் கழிவுப் பொருட்கள்” என்பது மக்களது சுகாதார நலனுக்கோ சுற்றாடலுக்கோ தீங்கு விளைவிக்கும் நச்சுக்களைக் கொண்ட, தீப்பற்றக்கூடிய, எதிர் விளைவுகளை தரக்கூடிய, நோய்களைப் பரப்பக்கூடிய கதிர் இயக்கத் தன்மைகளைக் கொண்ட கழிவுப் பொருட்களைக் குறிப்பிடும்.

“சேகரித்தல்” என்பது அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பாளர் அல்லது பிரதேச சபை கழிவுப்பொருள் சேகரிப்பாளரால் மீள்சுழற்சி, அழுத்துதல், தயாரித்தல் அல்லது அகற்றும் வசதிகளுக்கென போக்குவரத்து செய்வதற்காக கழிவுப்பொருட்களை சேகரித்தலைக் குறிக்கும்.

“கூட்டெரு” என்பது காபனேற்றுக் கழிவுப்பொருட்கள் நுண்ணுயிர்களது சமிபாட்டின் பின்னர் மாற்றமடையும் இறுதி விளைவுப் பொருளாகும். இது மண்ணின் தன்மையை பாதுகாக்கவல்லது.

“களஞ்சியப்படுத்தல்” என்பது உரிமையாளரது அல்லது குடியிருப்பளரது வளவுக்குள்ளே அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொது சேகரிப்பு நிலையமொன்றில் கழிவுப்பொருட்களை வைத்தல் அல்லது இடுதல் என்பதைக் குறிக்கும்.

“வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்கள்” என்பது வீட்டுத்தோட்டத்திற்குள் காணப்படும் மரங்கள் கன்றுகளில் இருந்து அகற்றப்படும் தாவரப் பகுதிகளையும் கல், மண் போன்றவற்றைக் குறிப்பிடும்.

“உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்” என்பது நுண்ணுயிர்களால் உக்கலடையச் செய்யும் கழிவுப்பொருட்களைக் குறிக்கும்.

“மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்” என்பது கழிவுப்பொருட்களென மீள அடையாளம் காணமுடியாதவாறு அதன் தோற்றத்தை மாற்றுவதன் மூலம் புதிய நுகர்வுப்பண்டமொன்றை உற்பத்தி செய்யக்கூடிய கழிவுப் பொருட்களைக் குறிக்கும்.

“மீள் பாவனைக் கழிவுப் பொருட்கள்” என்பது கழுவப்படுவதாலோ அல்லது கிருமி அழித்தலினாலோ அல்லது வேறு முறைகளினாலோ சுத்தப்படுத்திய பின் பயன்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்களைக் குறிக்கும்.

“போக்குவரத்துச் செய்தல்” என்பது மனித, மிருக அல்லது இயந்திர சக்தியின் மூலம் இயக்கப்படும் ஏதேனும் போக்குவரத்து ஊடகமொன்றை பயன்படுத்தி கழிவுப்பொருட்களை சேகரிக்கும் நிலையங்களில் இருந்து அவற்றைத் தயாரித்தல், அழுத்தல் அல்லது அகற்றுதல் செய்வதற்காக கொண்டுசெல்வதைக் குறிக்கும்.

“தொட்டி, பாத்திரம், உறை, பை அல்லது கொள்கலன்” என்பது துணைவிதிகளில் காட்டப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்றவாறு கழிவுப்பொருட்களை களஞ்சியப்படுத்தல், விடுவித்தல், சேகரித்தல் அல்லது போக்குவரத்துச் செய்தல் என்பவற்றுக்கு பயன்படுத்துபவன ஆகும்.

“அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பாளர்” என்பது கழிவுப்பொருட்களை சேகரிக்க அல்லது பெற்றுக்கொள்ள பிரதேச சபை தவிசாளரது அல்லது செயலாளரது உரிமப்பத்திரத்தை பெற்றுள்ள ஒருவரைக் குறிக்கும்.

“கொண்டு செல்லல்” என்பது மீள் பாவனை செய்யப்படாத, மீள் சுழற்சி செய்யப்படாத, தயாரிக்கப்படாத, அழுத்தம் செய்யப்படாத, எல்லா வகையான கழிவுப்பொருட்களையும் நிரந்தரமாக இட்டுச்செல்லக்கூடிய காணியொன்றின் மேற்பரப்பில் அல்லது நிலத்தின் கீழ் இட்டு வைத்தலைக் குறிக்கும்.

“மாற்றம் செய்யும் இடம்” என்பது இக்கருமத்திற்கென சபை விதிக்கும் இடம் எனக்கொள்ளப்படுவதுடன் அந்த இடத்தில் இருந்து மீள்சுழற்சி செய்தல், தயாரித்தல், அழுத்துதல் அல்லது கொண்டு செல்லல் என்பவற்றுக்காக கழிவுகளை சேகரிக்கும் இடம்.

“வேறாக்குதல்” என்பது இந்த துணைவிதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வகைகளுக்கு ஏற்றவாறு கழிவுப்பொருட்களை தரம் பிரித்தல்.

“தயாரித்தல்” என்பது கழிவுப்பொருட்களை பயனுள்ள பொருட்களாக மாற்றியமைக்கும் செயன்முறையைக் குறிக்கும்.

“பிரதேச சபைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளர்” என்பது தொட்டிகள் கொள்கலன்கள் பைகளில் இருந்து கழிவுப்பொருட்களை சேர்த்தல், பெற்றுக்கொள்ளுதல், அகற்றுதல் என்பவற்றுக்கென சபை ஈடுபடுத்தும் பணியாளரை அல்லது அந்தக் கருமத்தை நிறை வேற்றுவதற்காக சபையுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ள நபரைக் குறிக்கும்.

“பொது இடம்” என்பது பாதை, மைதானம், பொதுக்காணி, பொதுக்கூட்டம் நடாத்தும் இடம், மயானம், பஸ் தரிப்பிடம், புகையிரத நிலையம், வடிகால், கடற்கரை மற்றும் மக்கள் பொதுவாகப் பயன்படுத்தும் பொதுவான இடங்களைக் குறிக்கும்.

54. இந்நியமத் துணைவிதியின் தமிழ், சிங்கள, ஆங்கில உரைகளுக் கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் படசத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.

## அத்தியாயம் - 9

### பகுதி i - பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்துக்குள் நுளம்புகளும், நோய்க்கிருமிகளும் பெருகுவதை தடுத்தல், மற்றும் அவற்றினை அழித்தொழித்தல் மூலம் அதிகாரப் பிரதேசத்தின் சுற்றாடல் நிலைமைகளை மேம்படுத்துவதற்கும், தொற்று நோய்கள் பரவுவதை தடுப்பதற்குமான நியமத்துணை விதிகள்

1. பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்துக்குள் நுளம்புகளும், நோய்க்கிருமிகளும் பெருகுவதை தடுத்தல் மற்றும் அவற்றினை அழித்தொழித்தல் மூலம் அதிகாரப் பிரதேசத்தின் சுற்றாடல் நிலைமைகளை மேம்படுத்துவதற்கும், தொற்று நோய்கள் பரவுவதை தடுப்பதற்குமான நியமததுணை விதிகள் என அழைக்கப்படலாம். துணைவிதியின் பெயர்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கமைய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்துக்குள் வசிக்கின்ற பொது மக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தினைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துணை விதிகள் ஆக்கப்படுகின்றன. நோக்கம்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 123 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 126(ix)(ச) பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு இந்தத் துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன. துணைவிதிகளை உருவாக்குவதற் கான சட்ட ஏற்பாடுகள்.

4. நுளம்புகளையும், நோய்க்கிருமிகளையும் அழிப்பதற்காக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒவ்வொரு வளவிலும் வசிக்கும் குடியிருப்பாளர். நிறைவேற்ற வேண்டிய பணிகள். (4-5)

i சகல மூடப்படாத ரின், போத்தல், பெட்டி, பிளாஸ்ரிக் கொள்கலன், ரயர், சிரட்டை, இளநீர்க் கோம்பை மற்றும் அவ்விடத்திலுள்ள வேறேதேனும் நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்கள் பண்டங்கள், பாவனைப் பொருட்கள் போன்றவற்றை அகற்றுவதற்கு அல்லது அழிப்பதற்கு அல்லது அவ்வாறு செய்விப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

ii வசிப்பிடம் அல்லது வசிப்பிடமல்லாத கட்டிடங்களின் மழை நீர் வழிந்தோடுவதற்கான குழாய்கள், பீலிகள் மற்றும் வீட்டுத்தோட்டங்களில் உள்ள நீர் வடிந்தோடும் கால்வாய்கள் நல்ல முறையில் பேணி வரப்படல் வேண்டும். அவற்றில் தடைகள் ஏற்பட்டிருப்பின் அடிக்கடி பரீட்சித்து அவற்றை நீக்கியிருத்தல் வேண்டும்.

iii அவ்வதிவிட அல்லது வதிவிடமல்லாத வளவுகளில் உள்ள அனைத்து நீர் தாங்கிகள், நீர் நிறைக்கும் தொட்டிகள், நீர் சேகரித்து வைக்கின்ற வேறு பொருட்கள் நல்ல நிலைமையில் உரிய மறுசீரமைப்புக்களுடன் பேணி வரப்படுவதும், அவற்றை நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகளிலிருந்து பாதுகாக்கக்கூடிய வகையில் மூடி வைப்பது அல்லது மறைத்து வைப்பதும் அவற்றை நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகள் பரவுவதை தடுக்கக்கூடிய நிலமையில் பேணி வருவதும், நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகள் பரவுவதைத் தடுப்பதற்கு தேவைப்படக்கூடியவாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அவசியமாகும்.

iv வளவிலுள்ள அனைத்து கிணறுகளையும் நல்ல நிலைமையில் பேணி வரவேண்டும் என்பதுடன் நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகள் பரவுவதை தடுக்கக்கூடிய நிலமையில் வைத்திருக்கத் தேவையான நடவடிக்கைகளைச் செய்தல் வேண்டும்.

v நீர் அகற்றக்கூடிய வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள செயற்கை பொய்கைகள் இருப்பின் அதனை ஆகக்குறைந்தது ஒவ்வொரு வாரமும் ஒரு தடவையேனும் அதன் நீரை இறைத்துச் சுத்தம் செய்தல் வேண்டும்.

vi வீட்டுத்தோட்டங்களிலும் காணிகளிலும் உள்ள கால்வாய்களில் வழிந்தோடும் நீர் தேங்கியிருப்பதைத் தடுப்பதற்காக அவற்றை அன்றாடம் பராமரித்தல் வேண்டும்.

vii உணவுக்காக அல்லது அலங்காரத்திற்காக வளர்க்கப்படுகின்ற செடிகள் தவிர ஏனைய அனைத்து சிறு பற்றைக்காடுகள், மரங்கள், வனங்கள் என்பவற்றை மனித குடியிருப்புகளாகப் பயன்படுத்தப்படுகின்ற ஏதேனும் கட்டிடம் அல்லது நிர்மாணிப்புகளிலிருந்து 5 மீற்றர் உட்புறத்தே சகல இடங்களும் அகற்றப்பட்டு சுத்தமானதாக இருத்தல் வேண்டும்.

viii சகல கற்குழிகள், மணல் அகழப்பட்ட குழிகள் அல்லது வேறேதும் விடயங்களுக்காக அமைக்கப்பட்ட குழிகள் அவற்றில் நீர் தேங்கியிருக்காத வகையில் பேணி வரப்படல் வேண்டும்.

ix நீர் தேங்கியிருக்க வாய்ப்புள்ள நிலத்தில் வளரும் அழகிய செடிகள், நீரியல் செடிகள், உள்ளிட்ட பல்வேறு நீர் தன்மை மிக்க செடிகள் மற்றும் நுளம்புகளும், நோய்க்கிருமிகளும் பரவுவதற்கு காரணமாக அமையுமென முன்னரே அறியக்கூடிய செடியை அகற்றி அழித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான செடிகள் ஏதேனும் நீர் ஓடு பாதைகள் வழியே நீரில் மிதந்து செல்வதைத் தடுக்கக்கூடிய வகையில் பொருத்தமான தடைகளை நிர்மாணித்து அவை பரவுவதைத் தடுத்தல் வேண்டும்.

x மலசல மற்றும் நீர்க் குழிகள், நீர் உறிஞ்சும் குழிகள், முத்திரை இடப்பட்ட குழிகள் மற்றும் அவற்றின் சுற்றுப்புறச் சூழல் உள்ளடங்கலாக அந்த இடத்திலுள்ள சகல மலசல கூடங்களையும் நுளம்புகள் பரவுவதை தடுக்கக்கூடிய முறையில் பேணி வருதல் வேண்டும்.

xi மயானங்கள் அல்லது வேறு வளவுகளில் உயிரிழந்தவர்களுக்காக நிர்மாணிக்கப்படுகின்ற நினைவுச் சின்னங்கள் நீர் தேங்காத வகையில் நிர்மாணிக்கப்படல் வேண்டும்.

5. பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரினால் ஏதேனும் வளவில் தேவை எனக் கருதப்படுகின்ற பரிசோதனையின் பின்னர் குறித்த வளவில் நுளம்புகள் அல்லது நோய்க்கிருமிகளை அழிப்பதற்கும், வளர்வதைத் தடுப்பதற்கும் நிறைவேற்றவேண்டிய பணிகளை எழுத்து மூலமான அறிவித்தலாக அந்த வளவின் உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு கட்டளையிடும் பட்சத்தில் அறிவித்தல் கையளிக்கப்பட்டு ஏதேனும் வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அந்த அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப் பட்டுள்ள காலப் பகுதிக்குள் அந்த கட்டளைகளை நிறைவேற்றல் வேண்டும்.

நிறைவேற்றக் கூடாத பணிகள்.

(6 -7)

6. பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்துக்குள் யாராயினும் ஆளொருவர் எந்தவொரு வளவிலும் நுளம்புகள் அல்லது நோய்க்கிருமிகள் பரவுவதற்கும், வளர்வதற்கும் வழிவகுக்கக்கூடியவாறு செயற்படுவது அல்லது செயற்படச் செய்வது அல்லது அவ்வாறு இடம்பெற இடமளித்தல் ஆகாது.

7. பிரதேச சபை தவிசாளரினால் எழுத்து மூலமான அங்கீகாரமின்றி ஏதேனும் வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அங்கு ஏதும் கிணற்றை நிர்மாணித்தல் அல்லது தாங்கி, பொய்கை, நீரேந்தும் பாத்திரம், நீர் மேலெழும் அமைப்பிலான நிர்மாணிப்புக்கள், நீர் தேங்கியிருக்கக்கூடிய அல்லது நீரை தேக்கிவைக்கக்கூடிய வேறேதேனும் நிர்மாணிப்புக்களை மேற்கொள்ளலாகாது.

பிரதேச சபையின் பணி.

(8 – 11)

8. பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேசசபையின் செயலாளர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவொரு நாளிலும் மு.ப 6.00 மணி முதல் பி.ப 6.00 மணி வரையான நேரப் பகுதிக்குள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு வளவினுள் உட்பிரவேசித்து பின்வரும் விடயங்களை உறுதி செய்து கொள்வதற்காக அந்த வளவை பரிசீலனை செய்வது சட்ட ரீதியானதாகும்.

i அந்த வளவு நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகள் பரவும் வளவா என பரிசீலனை செய்தல் ;

ii அந்த வளவில் குடியிருப்பவர் துணை விதிகளின் ஏற்பாடுகளை பின்பற்றியுள்ளாரா என பரிசீலனை செய்தல் ;

iii அந்த வளவில் நுளம்புகள் பரவுவதைத் தடுப்பதற்கும், அழிப்பதற்கும் ஏதாவதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பின் அந்த நடவடிக்கை எவ்வாறானது என பரிசீலனை செய்தல் ;

iv அந்த வளவில் கிருமிகளை ஒழிப்பதற்கான கிருமிநாசினிகள் வெற்றிகரமாகத் தெளிக்கப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்தல்.

9. பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் செயலாளர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரினால் ஏதேனும் வளவில் தேவை எனக் கருதப்படுகின்ற பரிசோதனையின் பின்னர் குறித்த வளவில் நுளம்புகள் அல்லது நோய்க்கிருமிகளை அழிப்பதற்கும், வளர்வதைத் தடுப்பதற்கும் நிறைவேற்ற வேண்டிய பணிகளை எழுத்து மூலமான அறிவித்தலாக அந்த வளவின் உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு கட்டளையிட முடியும்.

10. இத்துணை விதிகளின் (7) ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் நிர்மாணிப்புக்கள் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பிரதேச சபை தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரினால் அந்த இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு கையளிக்கப் படுகின்ற எழுத்து மூலமான அறிவித்தலின் மூலம் அந்த அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்படும் காலப் பகுதிக்குள் கிணறு, தாங்கி, பொய்கை, நீர் எழும் மேலெழும் அமைப்பிலான நிர்மாணிப்புக்கள் அல்லது குறித்த நீர் தேங்கியிருக்கும் நிர்மாணிப்புக்களை குறிப்பிட்டுக் கூறப்படும் ஏதேனும் பொருட்களினால் நிரப்பி மூடி விடுமாறு அல்லது வேறு விதமாக அழித்து விடுமாறு அல்லது அக்காலப் பகுதிக்குள் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதனை மாற்றியமைக்குமாறு உத்தரவிட முடியும்.

11. 9 ஆம் அல்லது 10 ஆம் துணை விதியின் கீழான அறிவித்தல் ஏதேனும் வளவின் உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு தனிப்பட்ட வகையில் கையளிக்கப்படல் அல்லது அந்த அறிவித்தலைக் குறித்த இடத்தில் நன்றாகத் தெரியக்கூடிய ஒரு இடத்தில் ஒட்டுவதன் மூலம் கையளிக்கப்பட முடியும்.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

12. இத் துணைவிதிகளில் பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

பரிசோதனையும் நடைமுறையும், தத்துவமும்.

(13-16)

13. இத்துணை விதிகளினால் விதிக்கப்பட்ட நியதிகளை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு பிரதேச சபைத் தவிசாளர் அல்லது பிரதேச சபையின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தத்துவம் உண்டு.

14. இத் துணைவிதிகளின் நியதிகளின் கீழ் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் பரிசோதனை செய்வதற்கு தவிசாளர் அல்லது பிரதேச சபையின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உதவிகளை வழங்குவது பிரதேச அதிகார சபை எல்லைக்குள் வசிக்கின்றவர்களின் பணியாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான யாதாயினுமொரு பரிசோதனையை நிறுத்துவதற்கு தடைகளை ஏற்படுத்தல் கூடாது.

15. இத் துணைவிதிகளின் 9, 10 ஆம் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் ஒன்று கிடைக்கப்பெற்ற எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுத்தினாலான கோரிக்கைகள் ஏதும் இருக்குமிடத்து இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியை நீடிப்பதற்கு பிரதேச சபை தவிசாளர் அல்லது பிரதேச சபை செயலாளருக்கு தத்துவம் உண்டு. எவ்வாறாயினும் இந்த விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியானது 14 நாட்களை விஞ்சாதவாறு இருத்தல் வேண்டும்.

16. 15 ஆம் துணை விதியில் அறிவித்தல் கையளிக்கப்பட்டுள்ள ஏதேனும் வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரினால் அந்த அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் அந்த அறிவித்தலின் கட்டளைகளை நிறைவேற்ற தவறியுள்ள சந்தர்ப்பத்தில் பிரதேச சபை தவிசாளரினால் அல்லது பிரதேச சபைச் செயலாளரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரினால் எந்தவொரு நாளிலும் மு.ப 6.00 மணி முதல் பி.ப 6.00 மணி வரையான காலப் பகுதிக்குள் எந்தவொரு நேரத்திலும் தேவை ஏற்படக்கூடிய உதவியாளர்கள் மற்றும் ஊழியர்களுடன் அந்த வளவில் உட்பிரவேசித்து அந்த அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை அமுல்படுத்த அல்லது அமுல்படுத்தச்செய்ய அல்லது அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

17. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற யாராயினும் ஒருவர் எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது பிரதேச சபையின் செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ்வலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு 14 நாட்களுக்குள் தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

18. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் யாராயினும் ஒருவர் மீறுதல் குற்றமாகும். துணைவிதிகளை மீறுதல்.

19. 16 ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள யாதாயினும் பணி அல்லது பணிகளை பிரதேச சபை தவிசாளரினால் அல்லது பிரதேச சபைச் செயலாளரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரினால் அமுல்படுத்தப்படும் பட்சத்தில் அல்லது நிறைவேற்றப்படும் பட்சத்தில் அந்த பணி அல்லது பணிகளை அமுல்படுத்துவதற்காக ஏற்பட்ட செலவினத்தை அவ்விடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும். தவிசாளர் தமது கையொப்பத்தின் கீழ் அது பற்றி எழுத்து மூலமான கோரிக்கையின் பின்னர் 14 நாட்களுக்குள் அத்தொகையை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்பதுடன் குறித்த காலப் பகுதிக்குள் அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில் அதனை பிரதேச சபைக்குச் செலுத்தவேண்டிய தண்டப்பணமாக அந்த உரிமையாளரிடம் அல்லது குடியிருப்பாளரிடமிருந்து அறவிட்டுக்கொள்வது சட்டபூர்வ மானது. அபராதமும் தண்டனையும். (19-20)

20. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் 2 ஆம் உபபிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதி மன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122 ஆம் பிரிவின் 2 ஆம் உபபிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

21. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து, பொருள் கோடலும் வரைவிலக்கணமும்.

"தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படுவார்.

"பிரதேச சபையின் செயலாளர்" என்பது ஏதேனும் நகரம் தொடர்பிலாயின் அந்த பிரதேச சபைக்கு பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பிரதேச சபையின் பிரதேச சபைச் செயலாளர் எனப் பொருள்படும். இந்த பிரதேச சபையின் செயலாளராக செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளொருவரும் செயலாளரின் தத்துவங்களுள் அல்லது கடமைகளுள் எவற்றையேனும் புரிவதற்கு அல்லது அதன் கீழ் நிறைவேற்றுவதற்கு பிரதேச சபை கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் தத்துவமளிக்கப்பட்டுள்ள எவரேனும் அலுவலர் ஒருவரும் இந்த அலுவலருக்கு அவ்வாறு தத்துவம் அளிக்கப்பட்டுள்ள அளவும் இதில் உள்ளடங்கும்.

"பிரதேச சபை" என்பது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரதேசத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

“அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்” என்பது உரிய பணிக்கு தவிசாளர் அல்லது பிரதேச செயலாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

“உரிமையாளர்” என்பதனால் யாராயினும் உரிமையாளர் மற்றும் குத்தகை குடியிருப்பாளரும் ஏதேனும் வளவில் வாடகைக்கு அல்லது விளைச்சலுக்கு ஏதேனும் ஒரு வகையில் உரிமையைக் கொண்டுள்ள யாராயினும் ஆளொருவர் எனவும்,

“குடியிருப்பாளர்” என்பதனால் யாதாயினும் ஒரு வளவில் வசித்து வருகின்ற அல்லது வேறொருவர் சார்பாக பிரதிநிதியாக அல்லது அதன் பொறுப்பை முகாமைத்துவம் அல்லது நிர்வகிக்கின்ற ஆளொருவர் எனவும் ,

“நோய்க்கிருமிகள்” என்பதனால், நுளம்பு மற்றும் நோய்களை பரப்பும் வேறு கிருமிகள் எனவும்,

“வளவு” என்பதனால் ஏதேனும் காணி, வீடு, கட்டிடம் அல்லது நிர்மாணிப்பு அல்லது பயன்படுத்தப்படுகின்ற அல்லது கைவிடப்பட்டுள்ள கிணறு, கப்பல், கெண்டெயினர், அல்லது கைவிடப்பட்ட வாகனம் உள்ளடங்குவதுடன் ஏதேனும் பொய்கை, தாங்கி, குளத்தின் நீர் வழிந்தோடும் கால்வாய், கால்வாய் மற்றும் ஆற்றுப்படுகை எனவும் பொருள்படும்.

22. இந்நியமத் துணைவிதியின் தமிழ், சிங்கள, ஆங்கில உரை களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.

## பகுதி - ii பிரதேச சபையின் எல்லைக்குள் பொதுமக்களின் சுகாதாரம் பேணப்படுதலை முறைப்படுத்தல், ஒழுங்கு படுத்தல், கண்காணிப்புச் செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான நியமத்துணை விதிகள்

1. பிரதேச சபையின் எல்லைக்குள் பொதுமக்களின் சுகாதாரம் பேணப்படுதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான நியமத் துணை விதிகள் என அழைக்கப்படலாம். துணைவிதியின் பெயர்.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொதுமக்களின் நலனுக்காக பொதுச் சுகாதாரம் பேணப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் இத் துணைவிதிகள் ஆக்கப் படுகின்றன. நோக்கம்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், 126 ஆம் பிரிவின் (ix ) (ங), (ஞ), (ட) மற்றும் (ப) உபபிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இத்துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளன. துணை விதிகளை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

4. மிருகம் ஒன்று இறந்து போனால் அம் மிருகம் இறந்த 12 மணித்தியாலம் கழிவதற்குள் புதைத்து விடுவது அந்த மிருகத்தின் உரிமையாளரின் பொறுப்பாகும். அவ்வாறு உரிமையாளர் இல்லாதவிடத்து அந்த மிருகம் இறந்த இடத்தின் வதிவாளரது பொறுப்பாகும். நிறைவேற்ற வேண்டிய பணிகள். (4 -5)

5. பிரதேச சபையின் எல்லைக்குள் ஏதாவது ஒரு வீட்டின் உரிமையாளர் அல்லது வதிவாளர் அந்த வீட்டிற்கு சொந்தமான காணியை சுத்தமாகவும் சுகாதார நிலையில் புல் பூண்டுகள், சிறு புதர்கள், குப்பை கூழங்கள், நீர் தேங்கி நிற்கக் கூடிய பாத்திரங்கள், டயர், பொலித்தீன் பைகள், தகரப் பேணிகள், குரும்பை, கோம்பைகள் போன்ற பொருட்களின்றி வைத்துக் கொள்ள வேண்டும்.

நிறைவேற்றக் கூடாத பணிகள். (6 - 16)

6. பிரதேச சபைத் தவிசாளரின் அனுமதியின்றி இப் பகுதியின் 17வது துணைவிதியின் (i ) வது பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏதாவது அடையாளத்தை எவரொருவரும் அப்புறப்படுத்தவோ அழித்துவிடவோ கூடாது.

7. இப் பகுதியின் 17 ஆவது துணைவிதியின் (i ) வது பந்தியில் குறிப்பிட்ட நோயினால் பீடிக்கப்பட்டுள்ள எவரும் ஏதாவது வீதியில், பாதையில் அல்லது பொது இடங்களில் வேண்டுமென்றே சுதந்திரமாகத் திரியக்கூடாது.

8. எவரொருவராலும் இப் பகுதியின் 17வது துணைவிதியின் (i ) வது பந்தியில் குறிப்பிட்ட நோயினால் பீடிக்கப்பட்டுள்ள எந்தவொரு பிள்ளையையோ, நபரையோ வேண்டுமென்றே ஒரு வீதியில் அல்லது பாதையில் அல்லது பொது இடங்களில் ஆடையின்றி வைத்திருப்பதோ அவ்வாறான இடத்திற்கு செல்லவோ இடமளித்தல் ஆகாது.

9. பிரதேச சபையால் பொது குளிக்கும் இடம் என அறிவிக்கப்பட்ட இடத்தில் ஆண் அல்லது பெண் பாலாரில் ஒரு சாராருக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்திற்குள் அதற்கு மாறாக வேறொரு பாலார் உட்பிரவேசிக்கக் கூடாது.

10. (i ) ஏதாவது சரும நோயினால் அல்லது தொற்று நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் அல்லது அண்மையில் அவ்வாறான நோயால் பீடிக்கப்பட்ட எவரொருவரும் தொற்று நோய் அல்லது கிருமி அழிப்பு கால எல்லை முடியும் வரை எந்தவொரு பொது குளிக்கும் இடத்தில் குளிக்கவோ உடைகளைக் கழுவவோ கூடாது.

(ii ) இந்த உப விதியின் (i ) ம் பந்தியில் குறிப்பிட்ட எவராவது ஒருவருடைய உபயோகத்திற்காக தேவைப்படும் நீரை சுகதேகியான ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்டு கிணற்றிலிருந்து 10 மீற்றருக்குள் குளிக்கவோ கழுவவோ கூடாது.

11. ஏதாவது பொதுக்கிணற்றிலிருந்து அல்லது பொதுக் குளிக்குமிடத்திலிருந்து நீரைப் பெற்றுக் கொள்வதற்காக எவரொருவராலும் ஏதாவது அழுக்குப் பாத்திரத்தை உபயோகிக்கக்கூடாது.

12. எவராவது ஒருவரால்

பொதுக் குளிக்கும் இடமாக ஒதுக்கப்பட்டிருக்கும் ஏதாவதொரு இடத்தில் எந்த விதத்திலும் ஏதாவது ஒரு பொருளை பொதுக் கிணற்றில் அல்லது அதற்குப் பக்கத்தில் கழுவவோ, கழுவ முயற்சிக்கவோ கூடாது.

எக்காரணம் கொண்டும் ஏதாவதொரு மிருகத்தை ஏதாவதொரு குளிக்கும் இடத்திற்கு கொண்டு செல்லல், விரட்டுதல் அல்லது இழுத்துச் செல்லல் என்பவற்றைச் செய்யக்கூடாது.

ஏதாவது பொதுக் கிணற்றில் அல்லது குளிக்கும் இடத்தில் அல்லது அதைச் சூழவுள்ள இடத்தில் எக்காரணம் கொண்டும் அசுத்தப்படுத்தக் கூடாது.

13. பிரதேச சபையால் இப் பகுதியின் 12 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட ஏதாவது ஒரு இடத்தில் அதை அவ்வாறு ஒதுக்கப்பட்ட விடயத்திற்காகவன்றி வேறு எந்த விடயத்திற்காகவும் எவரொருவரும் உபயோகப்படுத்தக் கூடாது.

14. (i ) பாவனைக்காக நீரைப் பெற்றுக் கொள்ளும் பொதுக் கிணற்றில் அல்லது நீர் ஊற்றில் அல்லது நீரைப் பெற்றுக்கொள்ளும் வேறு ஏதாவது இடத்திலிருந்து 15 மீற்றர் தூரத்திற்குள் குப்பைக்குழி, பன்றித் தொட்டி, பட்டி, மாட்டுத் தொழுவம், மலசலகூடக் குழி அல்லது பழுதடைந்த கான்கள் அமைவதற்கு இடமளித்தல் கூடாது.

(ii ) பாவனைக்காக நீரைப் பெற்றுக் கொள்ளும் பொதுக் கிணற்றில் அல்லது நீர் ஊற்றில் அல்லது நீரைப் பெற்றுக்கொள்ளும் வேறு ஏதாவது இடத்திலிருந்து 15 மீற்றர் தூரத்திற்குள் விவசாயத்திற்காக பயன்படுத்தப்படும் இடங்களில் நீரை மாசுபடுத்தக்கூடிய வகையில் உரம் அல்லது கிருமிநாசினிகள் பாவிக்கக் கூடாது

(iii ) ஏதாவது குப்பைக்குழி, பன்றித் தொட்டி, பட்டி, மாட்டுத் தொழுவம், மலசலகூடக் குழி, பழுதடைந்த கான்கள் அல்லது விவசாயத்திற்காக கவனயீனமாக உரம் போடுதல் என்பன இடம்பெறும் ஏதாவதொரு இடத்திலிருந்து 15 மீற்றருக்குள் வீட்டுப் பாவனைக்காக எவரொருவராலும் தனிப்பட்ட கிணறு வெட்டக்கூடாது.

15. எவரொருவராலும் வேறொருவருக்குச் சொந்தமான இடத்தில் அல்லது பாதையில் அல்லது பொது இடத்தில் குப்பைக் கூலங்களை அல்லது நாற்றமடிக்கக் கூடிய பொருட்களை அல்லது உபயோகத்திற்கு பயன்பத்த முடியாத பொருட்களை வீசக் கூடாது.

16. மலசலம் கழிக்கவென விசேடமாக ஒதுக்கப்படாத இடங்களில் எவரொருவரும் மலசலம் கழிக்கக்கூடாது.

நகர சபையின் பணி.

17. (i) தொற்றுநோயினால் அல்லது தோல் நோயினால் அல்லது பரவக்கூடிய வேறுநோயினால் பீடிக்கப்பட்டுள்ள ஒருவர் இருக்கும் வீட்டில் அல்லது கட்டடத்தின் வெளியில் தெளிவாக தெரியும் பகுதியில் பிரதேச சபைத் தவிசாளரால் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் அடையாளம் வைப்பதற்கும் அல்லது வைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் தேவையென கருதப்படும் காலம் வரை அவரால் அந்த அடையாளத்தை ஒட்டி வைப்பதற்கு தத்துவம் உண்டு.

(ii) ஏதாவது பொதுக்கிணற்றில் அல்லது குடிநீரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்களில் உடை கழுவுதல் அல்லது குளித்தல் என்பவற்றை தடைசெய்வது சட்டமுறையானதாகும்.

(iii) பொது வீதிகளில், பொது இடங்களில் ஏதாவது ஒரு மிருகம் இறந்து கிடக்கும்போது அதன் உரிமையாளரை அறிந்து கொள்ள முடியாத நிலையில் பிரதேச சபையினால் அந்த மிருகத்தின் உடலை உடனடியாக அப்புறப்படுத்தி புதைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அல்லது பொருத்தமான வேறு நடவடிக்கையை எடுப்பது பிரதேச சபையின் பணியாகும்.

(iv) உடை கழுவுதல், குளித்தல், அல்லது விலங்குகளைக் குளிப்பாட்டக்கூடிய குளங்கள் அல்லது நீரைப் பெற்றுக்கொள்ளும் வேறு இடங்களை சபையினால் அதன் விருப்பின் பேரில் ஒதுக்க முடியும்.

(v) மனித உபயோகத்திற்காக நீரைப் பெற்றுக்கொள்ளக்கூடிய குளங்கள் அல்லது நீரைப் பெற்றுக்கொள்ளும் வேறு இடங்களை சபையினால் அதன் விருப்பின் பேரில் ஒதுக்க முடியும்.

தத்துவங்களை ஒப்படைத்தல்.

18. இத் துணைவிதியில் பிரதேச சபைத் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் பிரதேச சபையின் செயலாளருக்கு அல்லது எந்தவொரு அலுவலருக்கும் கையளிப்பது சட்டபூர்வமானதாகும்.

19. யாராயினுமொருவர் எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான ஏதேனும் முறைப்பாடொன்றை பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது பிரதேச சபை செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அவ் அலுவலரினால் முறையான விசாரணை மேற்கொண்டு 14 நாட்களுக்குள் தீர்வு வழங்கப்படல் வேண்டும். முறைப்பாடுகளும் அதற்கான தீர்வுப் பொறிமுறைகளும்.

20. இந்த துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும். துணைவிதிகளை மீறுதல்.

21. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட யாதாயினுமொரு ஏற்பாட்டை மீறுவதற்கான அல்லது முறிப்பதற்கான தவறு தொடர்பில் உரிய தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இந்தக் குற்றம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு ஆளாகுதல் வேண்டும். அத்துடன் இந்த ஏதேனும் தவறொன்று தொடர்பில் உரிய தத்துவமுள்ள நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு யாரேனுமொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து மேலே துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதத்திற்கு ஆளாக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் இதனை மேலும் மீறுமிடத்து அல்லது முறிக்குமிடத்து மேலே கூறப்பட்ட 122(2) ஆம் உபபிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்திற்கும் உட்படுதல் வேண்டும். அபராதமும் தண்டணையும்.

22. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்ட பதப்பிரயோகங்கள் தொடர்பில் வேறு ஏதாவது கருத்து நாடப்படாதவிடத்து, பொருள்கோடலும் வரைவிலக்கணமும்.

"பிரதேச சபைத் தவிசாளர்" என்பவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

"பிரதேச சபைச் செயலாளர்" என்பவர் ஏதேனும் பிரதேசம் தொடர் பிலாயின் இந்த பிரதேச சபைக்கு பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படுகின்ற அல்லது கூட்டிணைக்கப்பட்டதாகக் கருதப் படுகின்ற பிரதேச சபையின் செயலாளர் எனப் பொருள்படும். இந்த பிரதேச சபையின் செயலாளராக செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட

எவரேனும் ஆளொருவரும் செயலாளரின் தத்துவங்களுள் அல்லது கடமைகளுள் எவற்றையேனும் புரிவதற்கு அல்லது அதன் கீழ் நிறைவேற்றுவதற்கு பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் தத்துவமளிக்கப்பட்டுள்ள எவரேனும் அலுவலர் ஒருவரும் இந்த அலுவலருக்கு அவ்வாறு தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள அளவும் இதில் உள்ளடங்கும் .

"பிரதேச சபை" என்பது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள்சட்டத்தின் கீழ் நகரத்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச சபை எனப் பொருள்படும்.

“அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்” என்பவர் உரிய பணிக்கு பிரதேச சபைத் தவிசாளரினால் அல்லது பிரதேச சபை செயலாளரினால் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட ஏற்புடைய பிரதேச சபையின் எவரேனும் அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்.

ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.

23. இந்நியமத் துணைவிதியின் தமிழ், சிங்கள, ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

5-587/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.